ANGLO ASIAN MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 5 21 — 27 ஒக்டோபர் 1999 முழக்கம்: 249

CAR CHECK
Mot & Repair Center
உங்களுடைய சகல திருத்த
வேலைக்கும், M.O.T க்கும்
தொடர்புகொள்ளவேண்டிய இடம்:
(Honda & Nisson Dealer க்கு அருகாமையில்)
Unit 17 Stonefield Close.
Off Stonefield Way
Ruislip - Middx.
தொடர்புகளுக்கு: 0181–841 1880
(சுகுமார்)
Pub.

## அம்பகாமம் - ஒலுமடு

# இராணுவ இழப்பு 700ற்கும் மேல்



(18.10.99)

வாட்டர்சேட் (Water Shed) என்ற குறியீட்டுப் பெயருடன் சிறீலங்கா இராணுவத்தின் 55ம், 56ம் படைப்பிரிவுகள் கடந்த வியாழன் முற்பகல் 11 மணியள வில் அம்பகாமம், ஒலுமடு பகு திகளில் இருந்து வடகிழக்கு பக்கமாக விடுதலைப்புலிகளின் நிலைகளை கைப்பற்றும் நோக்கு டன் ஆட்லெறி தாக்குதல் மற் றும் MI—24 தாக்குதல் உலங்கு வானூர்தியின் தாக்குதல்களோடு நகர ஆரம்பித்தன. இப் படை நகர்விற்கு மேஜர் ஜெனரெல் வசந்த பெரேரா தலைமை தாங்கினார். விடுதலைப் புலிகள் மீது அதிர்ச்சிகரமான தாக்கு தல் ஒன்றை நடாத்தும் நோக்கு டன் இவ் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் இறுதி நேரம் வரையும் நடவடிக்கை பற்றிய விபரங்கள் அனைத்தையும் இரா ணுவத் தரப்பு இரகசியமாக வைத்திருந்தது.

ஆயினும் விடுதலைப் புலிகள் மீது அதிர்ச்சி கரமாக தாக்கு தல் நடாத்தவந்த இராணுவத்தி னருக்கு விடுதலைப் புலிகள்

(☞ 2ம் பக்கம்)

## 12 மணியத்தியாலங்களாக தாக்குதல் செய்தி இருட்டடிப்பு

(18.10.99)

அம்பகாமம், ஒலுமடு சமரின் தோல்வியினை தாங்கிக்கொள்ள முடியாத இராணுவம் முன்னுக்கு பின் முரணான செய்திகளையும் குழப்கரமான அறிக்கைகளை யும் வெளியிட்டுள்ளது. கடந்த 14ம் திகதி வெளியிட்ட இராணுவ அறிக்கையில் விடுதலைப் புலி கள்தான் இராணுவ முன்னரங்க காவல் நிலைகளை தாக்கியதாக தெரிவித்திருந்தது. அவ்வறிக்கை யில் இராணுவத்தினர் ஆரம் பித்த நடவடிக்கை பற்றியோ இரா ணுவ இழப்புக்கள் பற்றியோ விப ரமாக எதுவும் குறிப்பிடப்பட வில்லை.

12 மணித்தியாலங்களாக தாக்

(☞ 2ம் பக்கம்)

## சிறீலங்காவின் இராணுவ பலப்படுத்தலுக்கு புலிகள் ஈடுகொடுக்கின்றனர்

### - இராணுவ பொன்விழா பற்றி இந்திய ஏடு வியப்பு -

1995ம் ஆண்டு பேச்சுக்கள் முறிவடைந்த பின் சிறீலங்கா இரா ணுவம் தனக்கு தேவையான சகல ஆயுத தளவாடங்களையும் தங்குதடையின்றி பெற்றது. ஆனா லும் புலிகளால் அதற்கு ஈடு கொடுக்க முடிந்தது. சில இரா ணுவ தளவாடங்களை இராணுவ முகாம்கள் மீதான பயங்கரதாக் குதலின் பின் புலிகள் எடுத்த னர். சிலவேளைகளில் இராணு வத்திலும் ஒருஅடி முன்னே புலி கள் நின்றனர் என இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்திஏடு கருத்து வெளியிட்டுள்ளது.

சிறீலங்கா இராணுவத்தின் பொன்விழா பற்றி ஆய்வு செய்த இவ் ஏடு, ஜம்பதாவது ஆண்டில் போர்முனையில் களைப்பு கொண்ட இராணுவமாக இது இருக்கின்றது எனவும் இராணுவ அதிகாரிகள் கல்லூரியில் சேரு பவர்களின் தரம் மிக குறைவாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

(☞ 2ம் பக்கம்)

## மழைவெள்ளம் எமக்கு பாதகமாக இருந்தது

### - இராணுவ அதிகாரி -

விடுதலைப் புலிகள் முத்தை யன்கட்டு பகுதியில் இருந்து ஏவிய எறிகணைகள் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ச்சியாக அடுத்தடுத்து விழுந்ததால் இரு படைப்பிரிவுகளும் நிலை குலைந்துவிட்டன. மழைக்கா லம் ஆகையால் விடுதலைப்புலி கள் பாரிய ஒரு தாக்குதலுக்கு முகம்கொடுக்க கடினப்படுவார் கள் இந் நிலையை வைத்துக் கொண்டு நாம் இலகுவாக முன் னேறிவிடலாம் என்றுதான் கணிப்பு போட்டிருந்தோம். ஆனால் அதேமழை வெள்ளம் விடுதலைப்புலிகளின் தாக்குதல் வேகம் அதிகரிக்க ஆரம்பித்ததும்

(☞ 2ம் பக்கம்)

## 1000ற்கும் மேற்பட்ட மலையக இளைஞர்கள் தலைமறைவு

(18.10.99)

இவ்வருடத்தின் கடந்த ஒன் பது மாத காலத்திற்குள் மலை யகப்பகுதியைச் சேர்ந்த 1000 இற் கும் மேற்பட்ட இளைஞர்கள் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளனர் என சிறீலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர். கடந்த சில தினங்களாக மலை யகப்பகுதிகளில் இடம்பெற்ற சம் பவங்கள் பற்றி நடந்த பொலிஸ் சோதனைகளின்போது இவ்விட யம் வெளியாகியுள்ளது. இவ் இளைஞர்கள் எங்கே சென்றார் கள், என்ன செய்கிறார்கள், எங்கு உள்ளார்கள் போன்ற கேள்வி களுக்கு அவர்களது பெற்றோர்

(☞ 2ம் பக்கம்)

## வங்காலையில் விசேட அதிரடிப்படையினர் மீது தாக்குதல் 9 பேர் பலி 17 பேர் படுகாயம்

(18.10.99)

மன்னார் வங்காலை தோமஸ் புரியில் அமைந்துள்ள சிறீலங்கா வின் விசேட அதிரடிப்படையி னரின் காவலரண் மீது விடுத லைப்புலிகள் மேற்கொண்ட அதி ரடித் தாக்குதலில் 9 படையி னர் கொல்லப்பட்டதுடன் 17 படையினர் படுகாயமடைந்துள் ளனர். இன்று அதிகாலை படை யினரின் காவலரணை நோக்கி கடும் தாக்குதல் நடத்தியபடி முன்னேறி வந்த போராளிகள் படையினர் கொன்றும் படுகா யங்களுக்கும் உள்ளாக்கியுள்ள னர். மிக வேகமாக நடாத்தப் பட்ட இத் தாக்குதலில் படையி னர் அப்பகுதியைவிட்டு விரட் டியடிக்கப்பட்ட பின்னர் காவ லரண்களுக்குள் நுழைந்தபோரா ளிகள் காவலரண்களை தீயிட்டு கொழுத்தி முற்றாக அழித்து விட்டு சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. திடீர் அதி ரடித் தாக்குதலை நடாத்தி படையினரை அப் பகுதியை விட்டு விரட்டியடித்த புலிகள், அப்பகுதியில் சில மணிநேரம் நின்று அங்கிருந்த ஆயுதங்கள் அனைத்தையும் கைப்பற்றிச் சென்றுவிட்டதாகவும் படைத் தரப்பு செய்திகள் உறுதிப்படுத் துகின்றன. வெற்றிகரமாக விடுத லைப்புலிகள் தாக்குதலை நடாத் தவிட்டு சென்ற பின்னர் அப்

(☞ 2ம் பக்கம்)

தமிழினி
TAMILINI Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
பல்பொருள் அங்காடி
Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France

E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
Leama
Tel: 0208 2053650
Fax: 0208 2053651

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
`EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140
Australia
E-Mail:tccsydney@one.net.au

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## அம்பகாமம்...

பாரிய தாக்குதல் ஒன்றினை கொடுத்து இராணுவ அணிகளை சிதறடித்துள்ளனர். ஈழமுரசிற்கு கிடைத்த பிரத்தியேக செய்திகளின்படி மூன்று நாட்களாக நடந்த இத் தாக்குதலில் இராணுவத்தினரின் இழப்பு கொல்லப்பட்டடோர் காயமடைந்தோர் உள்ளடங்கலாக 700ற்கும் மேலென அறியவருகிறது. இதுவரை இராணுவத் தரப்பில் 130ற்கும் மேலான சிப்பாய்கள் பலியாகியுள்ளனர். காயமடைந்த படையினரில் பலரது நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் பீரங்கிப் படையணியினரே இத் தாக்குதலில் முக்கிய பங்களிப்பினை ஆற்றியுள்ளனர். 122 மி.மீ ஆட்லெறி, மற்றும் 60 மி.மீ, 81 மி.மீ, 120 மி.மீ மோட்டார்கள் இத் தாக்குதலில்' ஓயாது முழங்கி படையினரை நிலைகுலைய வைத்துள்ளது. முத்தையன்கட்டு பகுதியில் இருந்தே விடுதலைப் புலிகளின் குண்டுவீச்சு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது. கொல்லப்பட்ட படையினரில் 3 உயரதிகாரிகளும் 10ற்கும் மேற்பட்ட இளநிலை அதிகாரிகளும் அடங்கியுள்ளனர். காயமடைந்த படையினரில் 18 அதிகாரிகள் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த படையினரை அநுராதபுரம் மற்றும் 'கொழும்பு வைத்தியசாலைகளுக்கு இராணுவ உலங்குவானூர்திகள் காவிச்சென்றன. இரத்மலான விமான தளத்தில் இருந்து தொடர்ச்சியாக மூன்று நாட்களாக காயமடைந்த படையினரை ஏற்றிச் சென்ற அம்புலன்ஸ் வண்டிகளின் சைரன் ஒலியினால் கொழும்பு நகரமே பதற்றநிலையில் காணப்பட்டது.

ஆரம்பத்தில் இத் தாக்குதல் பற்றிய செய்திகளை இருட்டடிப்பு செய்து இழப்புக்களை 10ற்கும் குறைவாக காட்டிய படைத்தரப்பு தற்பொழுது 35 படையினர் மாத்திரமே கொல்லப்பட்டதாக தெரிவித்திருக்கின்றது. நேருக்கு நேரான தாக்குதலில் பெண்புலிகளே வீரவேசமாக போரிட்டதாக சிறீலங்கா இராணு அதிகாரி ஒருவர் ஒத்துக்கொண்டுள்ளார்.

இச் சமரில் வீரச்சாவை தழுவிக்கொண்ட போராளிகளின் விபரங்கள் விடுதலைப் புலிகளால் உத்தியோகபூர்வமாக இதுவரை அறிவிக்கப்படவில்லை.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## மழைவெள்ளம்...

எமக்கே பாதகமாக போய்விட்டது. இதனால் படையணிகளை மீளக்கட்டி முன்னேறுவது என்பது சிரமமான ஒரு பணியாததால் எமது நடவடிக்கையை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நிறுத்திவிட! தீர்மானித்தோம்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## 1000ற்கும்...

களுக்கே விடை தெரியவில்லை என பொலிசார் கூறுகின்றனர். பல இளைஞர்கள் கொழும்பில் வேலைதேடி சென்றுள்ளதாக கூறப்பட்டுள்ள போதிலும் நடந்த மேலதிக விசாரணைகளில் அவ் இளைஞர்கள் கூறப்பட்ட முகவரிகளிலும் இல்லாதிருந்தனர்.

மலையகத்தில் தமிழ் இளைஞர்கள் இவ்வாறு மர்மமான முறையில் காணாமல் போவதானது ஒரு பெரும் பிரச்சனையானது என பதுளை உயர்பொலிஸ் அத்தியேட்சகர் லகஸ்மன் செனவிரத்னா மற்றும் நுவரெலிய மாவட்ட உயர் பொலிஸ் அதிகாரி போன்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

மலையகப் பகுதிகளில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன. இங்குவரும் போராளிகள் கிழக்கைச் சேர்ந்தவர்களே என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## சிறீலங்காவின்...

ஒருபுறம் போரில் களைப்புற்ற, தப்பி ஓடுபவர்கள் நிறைந்த அதிகாரிகள் பற்றாக்குறையுள்ள இராணுவமும் மறுபுறம் நன்றாக ஆயுதம் தரித்த கொள்கைப்பற்றுக் கொண்ட எதிரியும் நிற்பதாக வர்ணித்துள்ள ஏடு உலகிலேயே தப்பி ஓடுபவர்களை வரவேற்கும் ஒரே இராணுவம் சிறீலங்கா இராணுவமே என வர்ணித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## 12 மணித்தியால...

குதல் பற்றிய விபரத்தினை இருட்டடிப்பு செய்த சிறீலங்கா அரசு காயமடைந்த படையினரை கொழும்பிற்கு பெருமளவில் கொண்டுவந்ததால் ஏற்பட்ட பதட்ட நிலையினை அடுத்து மறுநாள் வெளியிட்ட இராணுவ அறிக்கையில் 'வாட்டர் சேட்' எனப்படும் இராணுவ நடவடிக்கையை தாம் ஆரம்பித்ததாக தெரிவித்ததுடன் விடுதலைப்புலிகளை பெருமளவில் கொன்று அவர்களின் நிலைகளையும் ஆயுதங்களையும் கைப்பற்றியதாகவும் குறிப்பிட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## வங்காலையில்...

பகுதிக்கு மீண்டும் வந்த படையினர் இத் தாக்குதலினால் ஆத்திரமடைந்த நிலையில் அங்கிருந்து மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி மோட்டார் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். தாக்குதல் நடைபெற்ற காலை வீதியால் சென்ற பொதுமக்களையும் தாக்கி காயப்படுத்தியுள்ளனர்.

இத் தாக்குதலை அடுத்து இப்பகுதிக்கு மேலும் விசேட தாக்குதல் அணியினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிறந்தநாள் வாழ்த்து

செல்வன்
தவராசன்
சிந்துசன்



தமிழீழத்தைச் சேர்ந்த தவராசன் சித்திரா தம்பதிகளின் செல்வப் புதல்வன் 'சிந்துசன்' எதிர்வரும் 24.10.99 அன்று தனது நான்காவது பிறந்தநாளை ஜேர்மனியில் Essen நகரில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அன்புப் பெற்றார், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலைகளையும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

'வாடாமலரே சிந்து நீ என்றும் வாயாரப்
புன்னகையாய் வையத்துள் வாழ்வாங்கு
வாழ வாழ்த்தும்

அன்பு அப்பா, அம்மா
K.THAVARASAN
Kugler Str-31, 45144 Essen, Germany
T.P: 02017501722

41ம் நாள் வீர வணக்கம்



மேஜர் மிதுலா
செல்வி நித்தியலட்சுமி
சோமசேகரம்
(கல்வியங்காடு, யாழ்ப்பாணம்)

தாயக மண்ணில்:
04.09.1999

நம்தமிழ் மண்ணை அழித்திட
வந்தவன் தலையைக் கொய்திட
நம் தலைவன் வழியினில் நடந்த வேங்கையே
புன்சிரிப்போடு போர்க்களம் ஆடிய தங்கையே
அஞ்சிப் பகைவன் உள்ளம் நடுங்க
நெஞ்சினில் நெருப்பேந்தி நின்றாயே
விடுதலைக்கு வித்தாகி வீழ்ந்தாயே
நெஞ்சினில் பாய்ந்ததம்மா
நெருப்பினை வார்த்த சேதி!

நீ விரைவில் துளிர்க்கும் நாளை நினைந்து விடுதலைக்கு விலங்கறுக்கப் பணிசெய்வோம்.

நாளைய தேசத்தின் விடிவில் உன்முகம் காணத் துடிக்கும்
அம்மா, அண்ணா,
தம்பி, தங்கை, அண்ணி,
மருமகள், மருமகன்
மற்றும் உன் உறவுகள்

தகவல்: சோ. பாலசுப்பிரமணியம்(பாபு)
தொலைபேசி: 0142044734
சோ.பாஸ்கரன் (நந்தன்)
தொலைபேசி: 01 45067568

Pub

ERRANCES TRAVELS

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
Mº: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

# மூன்றாம் ஆண்டு நினைவு சுமந்து...



ஒன்று விழ ஒன்பதாய் எழும்
விடுதலைக் களத்தில்
விதைக்கப்பட்ட வித்துக்களே!
உங்களின் நினைவு தாங்கி
எதிரியின் இதயம் வலிக்க
உரைக்கின்றோம்...
விடுதலை விருட்சம் வீழ்ந்து விடாது!
இன்னும்.... இன்னும் அது
கடின பாறைகளை
ஊடறுத்துக்கொண்டு
வேர்விடும்!
பீறிட்டெழும் நீரின் மிகையால்
இன்னும்... இன்னும்
செழிப்புறும்!!

வீரமரணம்:
26.10.1996



**லெப். கேணல் நாதன்**
**கந்தையா பேரின்பநாதன்**
(தமிழீழ விடுதலைப் புலிகளின்
சர்வதேச நிதிப்பொறுப்பாளர்)

**கப்டன் கஜன்**
**கந்தையா கஜேந்திரன்**
(தமிழீழ விடுதலைப் புலிகள்
பிரெஞ்சுப் பணியகத்தின்
நீண்டகால உறுப்பினர்,
ஈழமுரசு நிறுவக ஆசிரியர்)



*- உங்கள் நினைவு சுமந்து ஈழமுரசு குடும்பத்தினர்.*

## தமிழர்களின் 951 ஏக்கர் காணி சிங்களவர்களிடம்

(16.10.99)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட எல்லையில் உள்ள சுமார் 951 ஏக்கர் தமிழர்களின் வயல்காணிகள் தற்பொழுது சிங்களவர்களினால் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு அவர்களாலேயே வயல் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதுமுன் மாரிச்சோலை, கல்வெட்டை, களவார்வெட்டை, 25, 35, 37ம் குடியேற்றங்கள் ஆகியவற்றில் உள்ள தமிழர்களின் காணிகளுக்கே இக்கதி நேர்ந்துள்ளது. சிறீலங்கா படையினர் இக்காணிகளில் கடந்த சில வருடங்களாக நெற்செய்கை செய்வதற்கு தமிழர்களை அனுமதிக்கவில்லை. ஆனால் அவர்களது வயல்களில் நெற்செய்கை செய்வதற்கு சிங்களவர்களை அனுமதித்துள்ளனர். தற்பொழுது இவ் வயல்கள் யாவும் தமக்கே சொந்தமென இச் சிங்களவர்கள் தெரிவிப்பதாகவும் தெரிவிக்கின்றன. இதனால் தமது நிலங்களை இழந்த சுமார் 320ற்கும் மேற்பட்ட தமிழ் விவசாயிகள் மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாத நிலையில் இருக்கின்றனர்.

## கிழக்கில் நாலு பெண்கள் மீது பாலியல் வல்லுறவு

(16.10.99)

மத்திய கிழக்கு நாடொன்றில் வீட்டுப்பணிப் பெண்களாக தொழில் பார்த்துவிட்டு நாடு திரும்பிய வாழைச்சேனை, நிலாவெளிக் கிராமங்களை சேர்ந்த பெண்கள் நால்வரை தம்புள்ளை விடுதி ஒன்றில் வைத்து சிங்களவர்கள் பாலியல் வல்லுறவு கொடுமைக்கு உள்ளாக்கிய செய்திகள் வெளிவந்துள்ளன.

மூன்று வாகனங்களில் கொழும்பு விமான நிலையத்தில் இருந்து கிழக்கிற்கு இப் பெண்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். இரவு வேளைகளில் கிழக்கு கிராமங்களுக்கு பயணம் செய்வது ஆபத்தெனக்கூறிய வாகனச்சாரதிகள் இப் பெண்களை தம்புள்ளை விருந்தினர் விடுதியில் தங்க வைத்தபின்னர் அவர்கள் மீது பாலியல் வல்லுறவினை மேற்கொண்டுள்ளனர். மருத்துவ விசாரணைக்கு இப் பெண்கள் உட்படுத்தப்பட்டபோது அவர்கள் மீதான பாலியல் வல்லுறவு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது தம்புள்ளை நீதிபதியின் உத்தரவின்பேரில் குற்றவாளிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கல்முனையில் சொகுசு பேருந்துகள் தகர்ப்பு

(17.10.99)

கல்முனை பேருந்துச்சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொகுசு பேருந்துகள் மூன்று கடந்த புதனன்று நள்ளிரவு இனந்தெரியாத ஆயுதபாணிகளால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளன. இதனால் ஒன்றரைக் கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பேருந்து நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு ஊழியர்களை மிரட்டி பேருந்து சாலையினுள் நுழைந்த மூவர் அங்கிருந்த ஊழியர்கள் அனைவரையும் பாதுகாப்பாக அப்புறப்படுத்திவிட்டு அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துகளை குண்டுவைத்து தகர்த்துள்ளனர். இக்குண்டு வெடிப்பின் காரணமாக பேருந்து சாலையின் கூரையும் சேதமடைந்துள்ளது.

## நுகேலந்த பொலிஸ் காவல் நிலை மீது தாக்குதல்

அம்பாறை மாவட்டத்தில் பக்கியெல்ல பொலிஸ் பிரிவைச் சேர்ந்த நுகேலந்த பொலிஸ் காவல் நிலையத்தின் மீது கடந்த 16ம் திகதி அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டு மூன்று பொலிசார் படுகாயமடைந்துள்ளனர். அதிகாலை 3.45 மணிக்கு ஆரம்பமான இத் தாக்குதல் காலை 6.30 மணிவரை நடைபெற்றுள்ளது. அண்மையில் கோணகலையில் நடைபெற்ற சம்பவத்தையடுத்தே சிங்களக் குடியேற்றக் கிராமத்தைப் பாதுகாக்கவெனப் புதிதாக நிறுவப்பட்ட காவல்நிலை இதுவாகும். இக் காவல் நிலைய்த்திலிருந்து ஆயுதங்கள் சில புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகள் வந்தால் அபாயஒலி ஒலிக்குமாம்

சிங்களக் குடியேற்றக் கிராமங்களின் பாதுகாப்பிற்கென அபாய ஒலி எழுப்பும் கருவிகளைப் பொருத்துமாறு சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டுள்ளார். பரீட்சார்த்தமாக ஐந்து கிராமங்களில் இந்த அபாய ஒலிக் கருவிகள் பொருத்தப்படவுள்ளன. கிராம மக்கள் மீது தாக்குதல் அபாயம் இருக்குமானால் இந்த அபாய ஒலியினை எழுப்பி இராணுவத்தினரின் உதவியைக் கிராமத்தவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிங்களக் குடியேற்றக் கிராமங்களின் முழுமையான பாதுகாப்புத் தொடர்பான ஏற்பாடுகளையும் செய்வதற்கு முன்னோடியாகவே இந்த அபாய அறிவிப்புக் கருவிகள் பொருத்தப்படுகின்றன எனக் கிழக்குச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பிரச்சினைக்கு தீர்வுகாண 3ம் தரப்பு அவசியமே

### - முஸ்லிம் காங்கிரஸ் -

(16.10.99)

இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண சக்தி வாய்ந்த மூன்றாம் தரப்பொன்றின் மத்தியஸ்த உதவி தேவையென சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் பிரமுகரும் பிரதி அமைச்சருமான எம்.கிஸ்புல்லா தெரிவித்துள்ளார். இந்த நிலைப்பாட்டிலேயே முஸ்லீம் காங்கிரஸ் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஏறாவூரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய கிஸ்புல்லா, அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் இனப் பிரச்சினை விவகாரத்தில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை என தெரிவித்த கருத்து கவலைக்குரியது. யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினருக்கும் இடையே இன்று தொடர்பில்லாத நிலையும் ஒருவர் மீது ஒருவருக்கு நம்பிக்கை இல்லா தன்மையும் நிலவுகின்றது. இவ்வாறான நிலையில் இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தைக்கு கொண்டுவர சக்தி வாய்ந்த மூன்றாம் தரப்பொன்றே தேவை. இவ்வாறாயின்தான் பிரச்சினைக்கு தீர்வொன்றினை காணமுடியும் எனத் தெரிவித்தார்.

# வடதமிழீழச் செய்திகள்

## விமானம் ஏறினால் நிவாரணம் கிடையாது

(16.10.99)

ஏற்கனவே யாழ்.குடாநாட்டு மக்கள் மீது நிவாரணத் தடைகளை பல வழிகளிலும் அமுல்படுத்திவரும் சிறீலங்கா அரசு தற்பொழுது புதியதொரு வடிவில் நிவாரண நிறுத்தத்தை அறிவித்துள்ளது. யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு விமான மூலமாக பயணம் செய்வோருக்கு உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படும் என்பதே அவ் அறிவித்தலாகும். இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்று யாழ். மாவட்ட செயலகத்தினால் அதன் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விமானம் மூலம் பயணம் செய்பவர்கள் பண வசதி படைத்தவர்கள் என்பதை கருத்தில் கொண்டே இம் முடிவு எடுக்கப்பட்டதாக கொழும்பிலுள்ள வறுமை நிவாரண ஆணையகம் தெரிவித்துள்ளது. உலருணவு நிவாரணம் பெறும் பலர் குடாநாட்டில் இருந்து விமானமூலமாக கொழும்பு வந்து செல்வது தம்மால் நிரூபிக்கப்பட்டுள்ளதால் இம்முடிவு எடுக்கப்பட்டதாக வறுமை நிவாரண ஆணையாளர் தெரிவித்துள்ளார். ஆனால் யாழ் குடா செய்திகளின்படி யாழ். மாவட்டத்தில் இருப்பவர்கள் தமது அவசர அலுவல்கள் நிமித்தமே விமான மூலமாக கொழும்பு செல்லவேண்டி நேர்வதாகவும், கட்டாய நிலையில் தான் இவ்வாறான பயணங்களை அவர்கள் தேர்ந்தெடுப்பதால் விமானப் பயணிகள் பலர் கடன்பெற்றோ அல்லது தமது சொத்துக்களை விற்றோதான் கொழும்பு செல்ல நேரிடுகிறது. எனவே புதிய நிவாரணவெட்டிற்காக அரச தரப்பினர் கூறும் காரணங்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வன்னிக்கான உணவு வண்டிகளை அதிகரிக்க முடியாது - இராணுவம் அறிவிப்பு

(17.10.99)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கான உணவு விநியோக வண்டிகளின் எண்ணிக்கையினையோ அல்லது வாகனங்கள் செல்வதற்கான நாட்களின் எண்ணிக்கையினையோ அதிகரிக்க முடியாது என வன்னி இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. இராணுவத்தினரின் இவ் அறிவிப்பால் வன்னி மக்கள் மீண்டும் பட்டினிச்சாவினை எதிர் நோக்கியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வன்னிக்கு உணவுப் பொருட்களை ஏற்றிச் சென்ற உணவு வண்டிகள் படையினரால் திருப்பி வவுனியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளன. ஓலுமடு பகுதியில் மோதல் நடப்பதாலேயே வாகனங்கள் வன்னிக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை என படை தரப்பு தெரிவித்துள்ள போதிலும் மாங்குளம் பாதை மோதல் அற்ற பகுதியாக உள்ள போதிலும் வன்னிக்கான உணவினை நிறுத்துவதற்காக படையினர் கூறும் காரணம் இது என தெரிவிக்கப்படுகிறது. படையினர் இவ் உணவு வண்டியை தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பியது தொடர்பாக தமக்கு எந்தவித அறிவித்தல்களும் அனுப்பப்படவில்லை என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ,தெரிவித்துள்ளது.

## செம்மணியில் மேலும் எலும்புக்கூடுகள் இல்லையென சட்டமா அதிபர் திணைக்களம் கூறுகிறது !

(17.10.99)

யாழ். செம்மணி புதைகுழியில் மேலும் எலும்புக்கூடுகள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் தென்படவில்லை என சிறீலங்காவின் சட்டமா அதிபர் திணைக்களம் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது. செம்மணிப் பகுதியில் 400 சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவு கொலை வழக்கின் எதிரிகள் தெரிவித்த போதும் இதுவரை கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளை விட மேலும் அதிகளவிலான எலும்புக்கூடுகள் இருப்பதற்கான சாத்தியங்கள் தற்பொழுது அருகிவிட்டன. புதைகுழிகள் தோண்டப்படும் பணிகளை மேற்கொண்ட உள்ளூர் சர்வதேச அவதானிகளும் அப் பகுதியில் பாரிய புதைகுழிகள் இருப்பதற்கான சாத்தியக் கூறுகளை நிராகரித்ததாகவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னாரில் படையினர் துப்பாக்கிச் சூடு இளைஞன் பலி - ஒருவர் படுகாயம்

(17.10.99)

மன்னாரில் சிறீலங்கா படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் பலியானதுடன் இன்னொரு இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

தலைமன்னார் வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9.30 மணியளவில் வீதியில் சென்ற இளைஞர்கள் மீது படையினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். அதன் போது சின்னையா ரவீந்திரன் (25) என்பவர் பலத்த சூட்டுக் காயங்களுடன் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டுள்ளார். மற்றொரு இளைஞரான கே. குமார்(28) என்பவர் பலத்த காயமடைந்த நிலையில் மறுநாள் காலை அவ்விடத்திற்கு வந்த பொதுமக்களால் மீட்கப்பட்டு அவசர சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

## ஆரியகுளம் காவலரண் மீது குண்டுத்தாக்குதல்

(16.10.99)

அதியுயர் பாதுகாப்பு வலையத்தில் அமைந்திருக்கும் யாழ். ஆரியகுளம் காவலரண் மீது கடந்த 11ம் திகதி மாலை விடுதலைப்புலிகள் கைக்குண்டு தாக்குதல் ஒன்றை நடாத்தியுள்ளனர். சிறீலங்கா அரசினால் மிக வேகமாக புனருத்தாரணம் செய்யப்படும் நாகவிகாரைக்கு அருகே இருந்த இக் காவலரண் மீதே மேற்படி தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்வத்தை அடுத்து, மேலதிக படையினர் அப்பகுதிக்கு விரைந்து தேடுதல் நடாத்தினர். எனினும் தாக்குதலை நடாத்திய விடுதலைப் புலிகள், படையினர் வருவதற்கு முன்பதாகவே அப் பகுதிஸ்ய விட்டு தப்பிச் சென்றுவிட்டனர். தாக்குதல் நடாத்தப்பட்ட வேளை அக் காவலரணில் தமது தரப்பில் யாரும் இருக்கவில்லை என சிறீலங்கா இராணுவம் அறிவித்துள்ளது.

## யாழ்.நகர் கடைகளை மாலை 6.30 மணியுடன் மூட உத்தரவு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள வியாபார நிறுவனங்களை மாலை 6.30 மணிக்குப் பின்னர் திறந்து வைத்திருக்கக்கூடாதென சிறீலங்காப் படையினர் யாழ்.வணிகர் கழகத்திற்கு உத்தரவிட்டுள்ளனர்.

யாழ்.நகரிலுள்ள சகல வர்த்தக நிலையங்களும் மாலை 6.30 மணியுடன் கண்டிப்பாக மூடப்படவேண்டும் எனவும், ஊரடங்குச் சட்டம் 9.30 மணிக்கு அமுல்ப்படுத்தப்பட்டாலும் கடைகள் அனைத்தும் 6.30 மணியுடன் மூடப்பட வேண்டும் இல்லையேல் படையினர் கடும் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் இவ் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆனையிறவிலிருந்து கடுமையான எறிகணைவீச்சு

ஆனையிறவு படைத்தளத்தில் இருந்து கடந்த சில தினங்களாக கிளிநொச்சி மாவட்டத்தினை நோக்கிக் கடுமையான எறிகணை வீச்சுக்களை சிறீலங்காப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். ஏவப்படும் எறிகணைகள் வட்டக்கச்சி, உமையாள் புரம், திருவையாறு, ஆகிய பகுதிகளில் மிக அதிகளவில் வீழ்ந்து வெடித்துப் பெரும் சேதத்தினை விளைவித்து வருகின்றன.

அக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்புத் தேடி அயற் கிராமங்களிற்குச் சென்ற வண்ணம் இருக்கின்றனர். மக்களுக்கு ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் பற்றி இதுவரை தெரியவரவில்லை.

## வட பகுதி கட்டளை அதிகாரியாக சரத் முனசிங்க

(16.10.99)

தற்பொழுது ஆனையிறவு படைத்தளத்தில் கட்டளையிடும் அதிகாரியாக பணிபுரியும் மேஜர் ஜெனரல் சரத் முன சிங்க, வடபகுதிக்கான கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. தற்பொழுது வடபகுதிக்கான கட்டளையிடும் அதிகாரியாக மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தன இருக்கின்றார். அவரை இடம் மாற்றிய பின்னரே சரத் முனசிங்காவை அவ் இடத்திற்கு நியமிப்பது என சிறீலங்கா இராணுவத் தலைமையகம் முடிவெடுத்துள்ளது.

ஆனையிறவு பரந்தன் தளத்தின் மீது விடுதலைப்புலிகள் பாரிய தாக்குதலை மேற்கொள்ளலாம் என்ற அச்சம் சிறீலங்கா படைத்தரப்பினருக்கு எழுந்துள்ளதால், ஆனையிறவு தளத்தின் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் எடுக்கப்படுவதன் ஒரு அம்சமாக இவ் இடமாற்றம் இடம்பெறுகிறதா என்பது குறித்தும் கொழும்பில் ஊகங்கள் நிலவுகின்றன.

## மண்டதீவில் ஒதுங்கிய 3 சடலங்கள்

(16.10.99)

யாழ். மண்டதீவு, அல்லைப்பிட்டி கடற்கரை ஓரங்களில் அழுகிய நிலையில் மூன்று ஆண் சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. இனங்காண முடியாதபடி மிக மோசமான பாதிப்பிற்கு இச் சடலங்கள் உள்ளாகியிருந்தன. சடலங்கள் மூன்றும் 35 வயதிற்கு உட்பட்டவர்களுடையது என தெரிவிக்கப்படுகிறது. இச் சடலங்களை ஊர்காவற்துறை சிறீலங்கா படையினர் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.


## இலண்டனில் மாவீரர் நாள் - 99

27.11.99 சனிக்கிழமை இலண்டனில் நடைபெறவுள்ள மாவீரர் நாள் பணிகளை சிறப்புறச் செய்து முடிப்பதற்கும், மாவீரர் குடும்பத்தினரை நிகழ்வினில் கலந்து கொள்ளவைப்பதற்கும் ஐக்கிய தமிழர் அமைப்பினர், மாவீரர் குடும்பத்தினருடன் தொடர்புகளை மேற்கொண்டுவருகின்றனர்.

எனவே, பிரித்தானியாவில் உள்ள மாவீரர் குடும்பத்தினர் ஈழம் இல்லத்துடன் தொடர்புகொண்டு தமது விபரங்களைத் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

மாவீரர் நாள் பற்றிய மேலதிக விபரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்

தொலைபேசி இல: 0171 403 4554



## நொயிஸ் தமிழாலய விழா

**அன்பார்ந்த தமிழ் மக்களே!**

பத்தாவது வருடத்தில் காலடி எடுத்து வைத்துள்ள உலகத்தமிழர் இயக்க நொயிஸ் தமிழாலயத்தால் நடாத்தப்படும் தமிழாலய விழாவில், எமது மாணவ மாணவிகள் பல்வேறு கலை நிகழ்ச்சிகளைத்தரவுள்ளனர்.

**காலம்: 23.10.1999 சனிக்கிழமை பிற்பகல் 17.00 மணி**
**இடம்: N.B.V மண்டபம் (பூக்கடை)**
Hammerlandstr.103, 41460 Neuss.

தாய்மண்ணைப் பிரிந்து வாழ நேரிட்டாலும் அதன்மீது பற்றுக்கொண்டு தாய்மொழியாம் தமிழ்மொழியைப் பயின்று தமிழீழத்தின் இளைய தலைமுறையாக வளர்ந்துவரும் எங்கள் அன்புச் செல்வங்களை ஊக்குவித்து மகிழ்விக்க அனைவரையும் ஒன்று கூடுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- நொயிஸ் தமிழாலய நிர்வாகம்

# அரசின் அக்கறையின்மை குறித்து அதிருப்தி ஐ.நா குழுவின் வருகை ஒத்திவைப்பு

சிறீலங்காவின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களை ஆய்வு செய்வதற்கென ஐநா குழு எதிர்வரும் 25-ம் திகதி கொழும்புவர இருந்தது. ஆனால் தற்பொழுது இக் குழுவினர் தமது சிறீலங்கா விஜயத்தினை ஒத்திவைத்துள்ளதாக அறிவித்துள்ளார்கள். இது ஒருபுறமிருக்க இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றினைக் காண அரசு காட்டிவரும் அசமந்தத் தனம் குறித்து இலங்கை வந்துள்ள ஐநா அபிவிருத்தித் திட்டத் தூதுக் குழுவினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர். அத்துடன் வடமாகாணத்தில் மக்களுக்குத் தேவையான சேவைகளையும் அரசு வழங்குவதில்லை எனவும் இவர்கள் குறைகூறியுள்ளனர். மேற்படி குழுவினர் வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபைத் தலைவருடன் பேச்சுக்களை நடாத்தியபோதும் அப்பேச்சுக்களில் இக் குழுவினருக்குத் திருப்தி ஏற்படாததால் சுயாதீனமாக கருத்துக்களை மக்களிடம் கேட்டறிந்துமுள்ளனர்.

## தமிழ்க் குழுக்களை பாதுகாக்க அரசு 10 கோடி செலவு செய்கிறது!

### - சிங்கள நாளேடு

(17.10.99)

தமிழ்க் குழுக்களை சேர்ந்தவர்களை பாதுகாப்பதற்காக அரசாங்கம் வருடம்தோறும் 10 கோடி ரூபாவை செலவு செய்து வருவதாக கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள நாளேடொன்று குறிப்பிட்டுள்ளது., ரெலோ, ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய தமிழ்க் குழுக்களுக்கே இச் செலவினை அரசு செய்து வருவதாகவும், இவர்களில் பலருக்குத் தொண்டர்படை என்ற அடிப்படையில் மாதாந்த ஊதியமும் வழங்கப்படுவதுடன், அவர்களுக்கு வாகனங்களும் அதற்குரிய எரிபொருள் மற்றும் இதர செலவுகளும் அரசே செய்து வருகிறது எனவும் குறிப்பிட்டுள்ளது.

இக் குழுக்களில் அரசிடமிருந்து ஆகக் கூடுதலான நிதியினை சம்பளமாகவும், மற்றும் புலிகளின் பகுதிகளில் ஊடுருவி அவர்களின் நிலைகளை அவதானித்து வந்து காட்டிக்கொடுப்பதற்கு சன்மானமாகவும் அதிக நிதியை பெற்றுவருவது ஈபிடிபி எனவும் அது தெரிவித்துள்ளது.

## சிறீலங்காவில் பெரும்மழை

(17.10.99)

சிறீலங்காவில் கடந்த சில தினங்களாக பெரும் மழை பெய்துவருவதால் அதன் தாழ்நிலப் பகுதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சுமார் 25,000ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு தமது வதிவிடங்களை விட்டு வெளியேறி பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

கொழும்பு, கம்பகா, புத்தளம், காலி மாவட்டங்களே வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட பகுதியாகும். களுகங்கை மற்றும், ஜின் கங்கை ஆகியன் பெருக்கெடுத்து இருப்பதால் பல வீதிகளும் வீடுகளும் மூடப்பட்டுள்ளன. கொழும்பின் பல பகுதிகளும் வெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்த மக்களுக்கு சிறீலங்கா அரசு உதவிகளைச் செய்து வருகிறது.

## சட்டமா அதிபராக கமலசபேசன்

(17.10.99)

சிறீலங்காவின் புதிய சட்டமா அதிபராக கே.சி.கமல சபேசன் நியமனம் பெற்றுள்ளார். இதுவரை சட்டமா அதிபராக கடமையாற்றிய சரத் சில்வா பிரதம நீதியரசராக நியமனம் பெற்றதையடுத்து அவ்விடத்திற்கு கமல சபேசனை சந்திரிகா நியமித்துள்ளார். கமல சபேசன் திருமலையைச் சேர்ந்தவராயினும் கொழும்பிலேயே வாழ்ந்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கனடாவில் காணாமல் போன இளம்பெண்ணின் உடல் சிதைவுகள் கண்டுபிடிப்பு

(17.10.99)

கனடாவில் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்ட 15 வயதான சர்மினி ஆனந்தவேல் என்பவரது உடல் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. வேலையில் இணைவதற்காக சென்ற முதல்நாள் இப் பெண் காணாமல் போயிருந்தார்.

இவரை தேடும் பணிகளில் கனேடியப் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். கடந்த செவ்வாயன்று நோர்த் யோர்க் என்ற பூங்காவிற்கு அருகில் உள்ள பற்றை ஒன்றில் இருந்து சில உடல் பாகங்கள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட அவ் உடல்பாகங்களை ஆராய்ந்த பொலிசார் அவை சர்மினி ஆனந்தவேல் என்பவருடையது என தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போது இவர் கொலை செய்யப்பட்டமை குறித்து தமது விசாரணைகளை பொலிசார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

## மோல்டா தீவில் இலங்கையர் கைது

ஐரோப்பிய நாடுகளிற்குள் நுழையும் நோக்குடன் இலங்கை உட்பட்ட ஆசிய நாடுகளில் இருந்து கப்பல் ஒன்றின் மூலம் பயணம் செய்த சுமார் 100 பேரை மத்தியதரைக் கடலில் தீவுநாடான மோல்டாவின் ஆயுதப்படையினர் கைதுசெய்துள்ளனர். கப்பலின் அடித்தளத்தில் இவர்கள் அனைவரும் பதுங்கியிருந்ததாகவும், இக் கப்பல் இத்தாலியை நோக்கிப் பயணம் செய்தபோது தம்மால் இடைமறிக்கப்பட்ட சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் கைது செய்யப்பட்டதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.


உங்கள் தலைமுடி உதிர்கின்றதா?
கவலை வேண்டாம்
இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு

தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!
இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.
இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.
**Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.**
இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.
எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
எமது Naturina® தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules. Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.
**இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!**






தற்போது மாபெரும் மலிவு விற்பனையில்

எமது ஸ்தாபனத்தின் தயாரிப்புக்களை உபயோகித்து பலன் பெற்றோர் கூறுவதைக்கேட்டு நீங்களும் பயன்பெறுங்கள்.

**சுவிற்சலாந்திலிருந்து: திரு. ராஜன்.**
நான் இந்த Naturina® தயாரிப்புக்களைக் கடந்த 3 மாதங்களாகப் பாவித்து குறுகிய காலத்தில் எனது தலைமயிர் உதிர்வைக் குறைத்துக்கொண்டேன்.

**டென்மார்க்கிலிருந்து: திருமதி துரைராஜா.**
நான் Naturina® மாத்திரைகளைப் பயன்படுத்தி எனது தோல் பிரச்சினைகளையும் நக அழகையும் பேணிக்கொண்டுள்ளேன்.

**இங்கிலாந்திலிருந்து: திருமதி ரேணுகாதேவி.**
இந்த Naturina® தயாரிப்புக்களைப் பற்றி பத்திரிகையில் படித்தபோதும் அதன் பிரதி பலன்களை நான் முழுமையாக நம்பவில்லை. இருந்தும் இவற்றை பயன்படுத்தியதில் முழுப் பலனையும் அடைந்துள்ளேன்.

மேலதிக விபரங்களுக்கு:
**Intercare Handels GmbH**
Munster str 5, 59065 Hamm-Germany
Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349
Internet: http://www.intercare-naturina.com

நாம் தமிழும் கதைப்போம்
(பிற்பகல் 2 மணியிலிருந்து)

# மீண்டும் சந்திரிகாவின் தேர்தல் பல்லவிகள்

**பேம்பி**

எங்கள் நாட்டின் இராணுவ ஜெனரலோடு 24 மணித்தியாலங்கள் மட்டுமே பாகிஸ்தானிய இராணுவ ஜெனரல் முஷாரவ் தங்கியிருந்தார். ஆனாலும் அந்த நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்குரிய துணிவினை அவர் பெற்றுவிட்டார். இவ்வாறான வேடிக்கைப் பேச்சொன்று கடந்தவாரம் சிறீலங்காவின் அமைச்சரவைக் கூட்டத்தில் எதிரொலித்தது. இந்த வேடிக்கைக் கதையைக் கூறியவர் வேறு யாருமல்ல சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரத்வத்தையேதான். சிறீலங்காவின் இராணுவ ஜெனரலின் பலத்தினைப் பற்றி அதிகமாக மதிப்பிடுவதற்காகவே அவர் அதனைக் கூறியிருந்தார். ஆனாலும் அவர் இந்த வேடிக்கையான கதையைக்கூறி வாய் மூடுவதற்கிடையில் அமைச்சரவையின் ஒரு மூலையில் இருந்து அதற்குப் பதிலடியும் கிடைத்தது. எங்கள் நாட்டின் ஜெனரலோடு 24 மணித்தியாலங்களில் பாகிஸ்தான் ஜெனரல் தங்கியிருந்து அந்த நாட்டின் ஆட்சியினை கைப்பற்றினாலும் எங்கள் நாட்டின் ஜெனரலுக்கு இன்னும் முல்லைத்தீவினைக் கைப்பற்றமுடியாமல் இருக்கின்றது எனப் பதிலடி கிடைத்ததும் அமைச்சர் ரத்வத்தை அசட்டுத்தனமான சிரிப்பொன்றினை உதிர்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆரம்பத்தில் வேடிக்கையாக அமைச்சரவையின் கூட்டம். ஆரம்பிக்கப்பட்டபோது அனைவரும் எதிர்பார்த்தபடியே அதே கூட்டத்தில் சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான அஷ்ரப்பிக்கும், அமைச்சர் ரிச்சேட் பத்திரனவிற்கும் இடையே எழுந்த முறுகல் நிலை வெளியே வந்தது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவி என்ற ரீதியில் ஜனாதிபதி சந்திரிகாவும் இக் கூட்டத்தில் பங்குகொண்டிருந்தார். தனது தரப்பு வாதத்தினை வைத்த அஷ்ரப் இந்த அரசிற்கு எமது பங்களிப்புத் தேவையில்லாவிடில் நாங்கள் அரசிலிருந்து வெளியேறவேண்டிய முடிவினை எடுப்போம் எனக் கூறிவைக்க இடைமறித்த சந்திரிகா பொதுஜன ஐக்கிய முன்னணி ஒருபோதும் சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசை புறந்தள்ளமாட்டாது எனவும் முஸ்லீம் காங்கிரசுடனான உறவுகளைச் சீர்குலைக்கும் வகையில் யாராவது செயற்பட்டால் அதனையும் அனுமதிக்க முடியாதெனத் தெரிவித்தார். சந்திரிகாவின் இந்தக்கூற்று அமைச்சர் பத்திரனவிற்கும், அமைச்சர் பௌசிக்கும் வைத்த ஒரு சின்னக் குட்டாகத்தான் கருதமுடியும். அண்மைக்காலமாகவே மேற்குறிப்பிட்ட இருவரும் அஷ்ரப்புடன் பல தடவைகள் முரண்பாடுகளைக் கொண்டிருப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்தவருடம் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குத் தேர்தல் ஆண்டாக இருப்பதால் இந்த வேளையில் யாரும் குட்டையைக் குழப்புவதற்குச் சந்திரிகா அனுமதிக்காமல் சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி இருக்கின்றது. மிகச் சொற்ப அளவிலான மேலதிக பலத்துடன் பாராளுமன்றத்தில் ஊசலாடிக்கொண்டிருக்கும் பொதுஜனஐக்கிய முன்னணியின் உயிருக்குத் தேர்தல் வரை உத்தரவாதம் கொடுக்க வேண்டிய பொறுப்பும் சந்திரிகாவிற்கு உண்டு. மறுபுறத்தே பார்த்தால் சந்திரிகாவின் இந்தப் பலவீனமான நிலை பொதுஜன ஐக்கிய முன்னணியில் ஒட்டிக்கொண்டிருக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும் தெரியும். அதனால்தான் தேர்தல் நெருங்க நெருங்க இலாப நட்டக் கணக்குகளைச் சரிபார்த்து அக் கட்சிகள் இடையிடையேயான மிரட்டல் வேலைகளில் இறங்கியுள்ளன. அஷ்ரப்பின் போக்குக்கூட இவ்வகையான ஒரு மிரட்டல்வேலைதான் என்பதும் புரியாதது அல்ல. தேர்தல் காலத்தையொட்டி சந்திரிகா கடந்த 5 வருடங்களிற்கு முன்னர் அடித்த குத்துக்கரணங்களைப்போன்ற குத்துக்கரணங்களை தற்பொழுது அடிக்க ஆரம்பித்துள்ளார். 2/3 பெரும்பான்மையான பலத்தை எமக்குத் தந்தால் 30 நாட்களில் சமாதானத்தைக் கொண்டு வருவேன், இல்லையேல் பதவியைத் துறந்து வீடு செல்வேன் என்ற புதிய பல்லவியை எதிர்வரும் தேர்தலையொட்டிப் பாட ஆரம்பித்துள்ளார்.

**5 வருடங்களிற்கு முன்னர் 'கைம்பெண்' பல்லவியைப்பாடிய அதே சந்திரிகாதான் இன்று சமாதானத்தை 30 நாட்களில் ஏற்படுத்தாவிடில் பதவியைத் துறந்துவிடப்போவதாக புதிய கதையினை அவிழ்த்து விட்டுள்ளார்.**

2/3 பெரும்பான்மைப் பலம் கிடைத்தால் அரசியல் அமைப்பில் 13-வது திருத்தத்தை கிழித்தெறிந்துவிட்டு நாட்டின் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுவேன். இல்லையேல் நான் எனது பதவியைத் துறந்து வீடு செல்வேன் என அவர் குறிப்பிட்டிருக்கின்றார். 5 வருடங்களிற்கு முன்னர் 'கைம்பெண்' பல்லவியைப் பாடிய அதே சந்திரிகாதான் இன்று சமாதானத்தை 30 நாட்களில் ஏற்படுத்தாவிடில் பதவியைத் துறந்துவிடப்போவதாக புதிய கதையினை அவிழ்த்துவிட்டுள்ளார். ஆனால் சந்திரிகாவின் இந்த நடிப்பிற்கு ஐக்கியதேசியக் கட்சி வகுக்கப்போகும் பதில் நடிப்பு வியூகத்தில்தான் இவரது சவடால் பேச்சுக்களின் காரம் தங்கியுள்ளது. ஆனால் இதிலொரு விடயம் என்னவென்றால் தன்னையொரு இனவாதமற்ற அரசியல் சக்தியாகக் காட்டிக்கொள்வதற்காக தேர்தலை முன்னிட்டு சந்திரிகா எடுக்கும் திட்டங்களிற்கு அவரது உள்வீட்டிற்குள்ளேயே எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளமையைச் சுட்டிக்காட்டலாம். சமவாய்ப்புச் சட்டமூலம் என்ற ஒரு சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து தமிழ் மக்களுக்கு நன்மை செய்யும் எண்ணம் தனக்கு உண்டு என்ற பூவினை தமிழர்களின் காதுகளில் சுற்றுவதற்கு சந்திரிகா எண்ணம் போட்டிருந்தார். ஆனால் தற்பொழுது அச்சட்டமூலம் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவர மாட்டாது என அரசே அறிவித்துள்ளது. தேர்தல் நேரத்தில் ஒரு கவர்ச்சி விடயமாகவே இச் சட்டமூலத்தை அரசு கொண்டு வருகின்றது எனவும் அச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்தும் வண்ணம் அரசிற்கு ஒருபோதும் இல்லை எனவும் காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஐக்கியதேசியக் கட்சியும் இந்தச் சட்டமூலத்தினை உருவம் பெறாமல் தடுப்பதற்கு பேரினவாத நோக்கோடு போராடியிருப்பதற்கான சான்றுகளும் இல்லாமலில்லை. பௌத்த கல்லூரி மாணவர்களைத் தூண்டிவிட்டு சமவாய்ப்புச் சட்டத்திற்கெதிராகப் போராட வைத்ததில் ஐக்கிய தேசியக் கட்சியின் பங்கும் இருக்கிறது எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. அரசின் அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த ஐக்கியதேசியக் கட்சி முட்டுக்கட்டை போடுகின்றதென பொதுஜன ஐக்கிய முன்னணியினரும், சந்திரிகாவிற்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆர்வம் கிடையாது என ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஏட்டிக்குப் போட்டியான பிரச்சாரங்களில் தற்பொழுது குதித்துள்ளனர். தேர்தல் காய்ச்சலின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க இப்பிரச்சாரங்களின் வீச்சும் அதிகரிக்கத்தான் போகின்றது.


## A.S.C.E.S இன் புதியவகுப்புகள்

14 ஆசிரியர்களின் கல்வி புகட்டலால் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர்

பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெறும் ஒரே பாடசாலை
bio,chimie,maths,tamoul,anglais,français,histoire etc
dictée, orthographe, résumé, expression écrite வீட்டுப்பாடங்கள் செய்ய கூடுதல் விளக்கம் பெற உதவி செய்யப்படும் சனி பி.ப 1.30 மணி–ஞாயிறு காலை 10 மணி

பிரஞ்சு
23.10.99 சனி பி.ப 1.30 மணி
03.10.99 ஞாயிறு காலை 10.00
25.10.99 திங்கள் பி.ப. 3 மணி
26.10.99 செவ்வாய் பி.ப.3 மணி 4.30 மணி
20.10.99 புதன் பி.ப 3மணி பி.ப. 4.30 மணி

பிரஞ்சு கற்க சிறந்த கை நூல் நடைமுறை பிரஞ்சு

ஆங்கிலம்
Cambridge,Toefl பரீட்சைகளுக்கும் பாடசாலை மாணவர்களுக்குமான வகுப்புகள்
23–24.10.99 சனி காலை 10 ஞாயிறு காலை 11 பி.ப 1.30மணி–3.30 மணி

கம்பியுட்டர்
windows95/98,word,excel,access,winNT4
பாகங்கள்பொருத்த –வாங்க ஆலோசனை
23–24.10.99 சனி–ஞாயிறு காலை 10 மணி பி.ப 1.30 மணி 3.30 மணி

சிறுவர்க்கான தமிழ்–பிரஞ்சு–கணித–ஆங்கில வகுப்புகள்
பிரதி சனி பிற்பகல் 1.30மணி முதல்

நடன வகுப்புகள் ஞாயிறு பி.ப 1.30மணி
தையல் கேக் அலங்காரம் : சனி பி.ப 2 மணி 3.30மணி
சங்கீத வயலின் ஓர்கன் வகுப்புகள்
சனி ஞாயிறு 10 மணி திங்கள் புதன் 3.30 மணி

சனி ஞாயிறு வகுப்புகள் நடைபெறும் இடம்
41, rue Didot 75014 Paris M° Pernety Dir N° 13
Tél 01 42 57 23 56
திங்கள் செவ்வாய் புதன் வகுப்புகள் நடைபெறும் இடம்
2,rue Esclagnon 75018 Paris M° Porte de Clignancourt


## கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ?

அந்த 26 உயிர்களுக்காய் உங்களிடம் கையேந்தி நின்றோம்.
கடிதங்கள் வரைந்தோம்
முடிந்தவரை போராடினோம்.
இனியேது செய்வோம்?



நவம்பர் 5இல் இந்நால்வருக்கும் நாள் குறிக்கும் வரை பார்த்திருப்போமா?
கடைசி முயற்சியாய் இந்தியக் குடியரசுத் தலைவரின் மனச்சாட்சியை அசைக்க முயல்வோம்.
கருணை மனுவிற்கு வலிமை சேர்க்க கடிதங்கள் எழுதுவோம். மகஜர்கள் அனுப்புவோம்.
இந்திய மனச்சாட்சியிடம் மன்றாடுவோம், இந்த அப்பாவிகளின் உயிர்களை மீண்டும் தாருங்கள் என்று
அன்பான தமிழ் மக்களே,
நின்று நிதானிக்க நேரமில்லை.
நான்கு உயிர்களுக்காய் விரைந்து பணி செய்வோம்.
வாருங்கள்!

President
K.R.NARAYANAN
Office of the President
Rashtrapati Bhavan
NEW DELHI 110 001
INDIA

Prime Minister
ATAL BEHARI VAJPAYEE
South block gate No-6
NEW DLHI 110 001
INDIA
Fax - 0091 11 30 19 817

Ms Mary ROBINSON
Office of the United Nations high Commissioner for Human Rights
Palais des Nations
8-14 Avenue de la paix
CH 1211 GENEVA 10
SWITZERLAND
Fax - 00 41 22 91 70 213

- தமிழ் மரணதண்டனைக் கைதிகள் விடுதலைக்கான குழு.

# ஓர் சிங்களப் பத்திரிக்கையாளரின் தென் தமிழீழப் பயணம்

'எங்கள் பகுதியில் விசேட நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளது. விரும்பினால் வரலாம்'. இவ்வாறு நாதன் எனக்கு அழைப்பு விடுத்திருந்தார். இவர் அன்றுமுதலே எமக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே தொடர்பினை ஏற்படுத்தித்தந்தவராவார். மட்டக்களப்பிற்கு அதுவும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்வதென்பது மிகவும் சிரமமான ஒரு காரியமாகும். வீதியில் இடையிடையே துப்பாக்கிகளுடன் காணப்படும் இராணுவத்தினரின் சோதனைச் சாவடிகளைக் கடந்து மிகுந்த பயத்துடன் செல்வதென்பது குறிப்பிடமுடியாத ஒன்றாகும். எப்படியோ நாம் விடுதலைப்புலிகளின் பிரதேசத்திற்குள் நுழைந்துகொண்டோம். நுழைந்துகொண்டோம் என்று சொல்வதை விட பயணம் செய்தோம் என்பதே சரியானது. நான் இதற்குமுன் நான்கு தடவைகள் மட்டக்களப்பிற்குச் சென்றுள்ளேன். அவற்றைவிட இம்முறை வித்தியாசமான பயணம். காரணம், விடுதலைப் புலிகளது அழைப்பின் பேரிலேயே இம்முறை அங்கு செல்கிறோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 80 விகிதமான பகுதியை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது விடுதலைப் புலிகளே. வைத்தியசாலை நீதிமன்றம், காவற்துறை போன்றவை தவிர நிர்வாக காரியாலயம்கூட அவர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. அத்துடன் விடுதலைப்புலிகள் அமைப்பின் படையணிகளுக்கு உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளும் நிலையங்களும் அங்கு உள்ளன. நாம் இதுபற்றி மட்டக்களப்பு மாவட்டத்தின் கட்டளையிடும் இராணுவ அதிகாரியான கேணல் குணசேகரவிடம் விசாரித்தபோது மாவட்டத்தின் மேற்குப் பகுதியை நாம் விடுவிக்கப்படாத பகுதியெனக் கூறுகிறோம். அப்பகுதி தவிர்-ந்த மற்றைய பகுதிகளை இராணுவம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறதெனக் கூறினார்.



நாம் பயணம் செய்தது மேற்குப் பகுதிக்குத்தான். அங்கு செல்வதற்கு நான்கு வழிகள் உள்ளன. ஒன்று செங்கலடிச் சந்தியில் இருந்து திரும்பி பதுளை வீதிவழியாக, இப்பகுதியில் உள்ள பிரசித்தமான ஒரு பாலம் கறுத்தப் பாலமாகும். இப்பகுதிக்குச் செல்லும் ஒருவழியாக வவுணதீவு இராணுவமுகாம் பகுதியினூடாகச் செல்லும் ஒரு வழியையும் கூறலாம். களவாஞ்சிக்குடி, பட்டிருப்பு பாலம் வழியாகவும் விடுதலைப்புலிகளின் பிரதேசத்திற்குள் செல்ல வழியுண்டு. ஆனால் நாம் சென்றதோ வித்தியாசமான ஒரு வழி. இதை X வழி என்றே கூற முடியும். அப்பகுதியில்கூட இராணுவத்தினர் நின்றிருந்தனர். நாம் பல பொய்களைக்கூறி ஒருவாறு அவர்களைக் கடந்துசென்றோம்.

நாம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் உள் நுழைந்தவுடன் எமது வாகனசாரதி பியரத்தினாவுக்கு எதிர்பாராத அனுபவமொன்று ஏற்பட்டது. செல்லும் வழியில் பாதையைக் காட்டியது நான்தான். சங்கர் முதலில் எம்மிடம் கூறியிருந்தது உள் நுழைந்தவுடன் தனது காரியாலயத்திற்கு வருமாறு தான். அன்று நாம் அங்கு சென்ற வேளை எம்மை அழைத்துச் செல்லும் ஆட்கள் வந்திருக்கவில்லை. ஆகையால் நாம் சங்கரின் பழைய காரியாலயத்திற்குச் சென்றோம். சங்கர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் உளவுப் பிரிவின் முன்னைநாள் தலைவராவர். அவர் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல்துறை மாணவராவார். அத்துடன் கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவருமாவார். இப்போது வன்னியில் இருக்கும் ஒரு தளபதி இவர். துப்பாக்கிகளை இடுப்பிலே செருகிக்கொண்டிருந்த சில இளைஞர்கள் நாம் எமது வாகனத்திலிருந்து இறங்கி அப்பால் சென்றவுடன் எமது வாகனத்தை நெருங்கியுள்ளனர். அங்கு பியரத்தினாவைச் சுற்றிவளைத்துள்ளனர். பியரத்தினா மிகுந்த பயத்துடன் காணப்பட்ட சமயத்தில் அதிசயிக்கத்தக்க விடயமொன்று நடந்தேறியது. என்னை ஏற்கனவே பார்த்திருக்கும் ஓர் போராளி அப்பகுதியால் துவிச்சக்கரவண்டியில் வந்துகொண்டிருந்தார். அவர் என்னை அடையாளம் கண்டுகொண்டதுடன் எம்மை நோக்கி நட்புடன் கையசைத்தபடி நெருங்கிவந்தார். அன்று வாகரைப்பகுதியில் பள்ளிவாசலில் எம் மீது கைக்குண்டு வீசவந்த ஓர் குழுவினர்பற்றி எமக்கு எச்சரித்திருந்தவர் இவர்தான். அதை இம்முறையும் ஞாபகப்படுத்தியவர்

## சிங்களம் கூறும் சில... - மாந்தன் -

எம்மை அம்பலாந்துறை நோக்கிச் செல்லும்படி கூறிக் கூட்டிச் சென்றார். அவரது வழிகாட்டலில் அம்பலாந்துறையில் பிரதேச செயலகப் பகுதிக்குச் சென்றோம். அங்கு எம்மை வரவேற்றது அப்பிராந்தியத்தின் அரசியல் பிரிவின் தலைவரான சுவி.

அமைப்பின் சகலரும் ஏதோ முக்கியமான ஓர் விடயத்திற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. அப்பகுதியில் வீதிகளில் எல்லாம் சிவப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. அத்துடன் அப்பகுதியின் மரங்களில் எல்லாம் பதாகைகள் காணப்பட்டன. அம்பலாந்துறை விளையாட்டு மைதானத்திற்குள் விடுதலைப் புலிகளின் பெண்களமைப்பின் பல உறுப்பினர்கள் பாரிய மேடை ஒன்றை அமைப்பதில் ஈடுபட்டிருந்தனர். விடுதலைப்புலிகள் எம்மை அழைத்தது விழா ஒன்றினைப் பார்ப்பதற்கே. உண்மையில் அது ஒரு விழா அல்ல. நினைவு நிகழ்வே. இரண்டாம் லெப்டினன் மாலதியின் நினைவு நிகழ்வின் கூட்டம் அங்கு ஆரம்பமாக இருந்தது. இரண்டாம் லெப்டினன் மாலதியின் 12-வது நினைவினை மிகப் பிரமாண்டமாக நிகழ்த்த விடுதலைப் புலிகள் தயாராகியிருந்தனர்.

மாலதி யுத்தமொன்றின்போது மரணமடைந்த முதலாவது பெண் போராளியாவார். அவர் இந்திய இராணுவத்துடன் நடந்த சண்டையிலேயே உயிரிழந்திருந்தார். அவருக்குக் கிடைத்தது மிக உயர் கௌரவமொன்றே என்பதற்கு தாம் செல்லும் வழியில் காணப்பட்ட பதாகைகளும், படங்களுமே சான்றாக அமைந்தன. மாலதியின் நினைவு நிகழ்வுகள் தொடங்கியது கடந்த ஞாயிறுதான், சனி முழுவதும் விடுதலைப்புலிகள் எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் அதற்கான தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். நாம் மாலதிக்குக் கிடைத்த கௌரவம்பற்றி கேட்டது மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தின் மகளிர் பிரிவின் பொறுப்பாளரிடம். அவர் யாழ். மாவட்டத்தின் அரசியல் பிரிவின் முன்னாள் பொறுப்பாளராக இருந்தவர். அவரது கூற்றின் உண்மையினை அன்று மாலை அங்கு நடந்த விழா நிகழ்வுகள் நிரூபித்தன.

(மிகுதி அடுத்தவாரம்)


## 2000ம் ஆண்டினுள் எமது பயணம்

வீரமும்-ஈகமும் நிறைந்த தலைமுறையின் காலமிது! இங்கு துன்ப துயரங்கள் நாளாந்த நிகழ்வானாலும், கனவு நனவாகி வருகின்றது

அந்த துயர்களில் சிலதை புகைப்படங்களாகவும் இந்த கனவின் துளிகளை வரைபடங்களாகவும் கொண்ட

சிறப்புக் கண்காட்சி

# தமிழீழம் இன்றும் - நாளையும்

அண்மையில் தமிழீழத்தில் பதிவு பெற்ற புகைப்படங்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் திட்டங்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயல்திட்ட பதிவுகள்

*உங்கள் தேசத்தைப் பாருங்கள் உங்கள் சிறுவர்களுக்கு உங்கள் தேசத்தைக் காட்டுங்கள்!*

இடம்: நாதன்-கஜன் அரங்கம்
50, rue de torcy, 75018 Paris
(M°: Marx dormy)

காலம்: 31.10.99 ஞாயிறு
01.11.99 திங்கள் *(விடுமுறை நாள்)*

நேரம்: காலை 10.00 – மாலை 8.00 மணி வரை



## தீபாவளியை முன்னிட்டு

*Basel* மாநகரில் **S.P.T.** யின்

மாபெரும் மலிவு விற்பனை

விசேட தள்ளுபடியில் 50% + 60% கழிவு

**காலம்: 29.10.99 முதல் 31.10.99 வரை**
**(வெள்ளி முதல் ஞாயிறு வரை)**
**நேரம்: 10 மணி முதல் 20 மணிவரை**
**இடம்: வைபாண் வெக்-6**
**(Byfang weg-6, 4051 Basel)**

(Basel புகையிரத நிலையத்திலிருந்து Voltoplatz ஐ நோக்கிச் செல்லும் 1-ம் இலக்க Tram அல்லது Neuwillerstr நோக்கிச் செல்லும் 8-ம் இலக்க Tram எடுத்து 2வது தரிப்பிடமான Zoobachle ல் இறங்கி 3 நிமிட நடைதூரம்.)

**ஆடை உலகின் இந்திரனோ!**
**அணிந்தால் அப்சரக் கன்னிகையோ!**
**Basel S.P. டெக்ஸ்டைல்சின் மகிமையோ!**



இதோ உங்களுக்காக S.P டெக்ஸ்டைல்சில் உங்கள் மனதிற்கேற்ற நவீன மொடல்களில் சாறிவகைகள், விசேட கழிவில் **50%** இல் இருந்து **60%** வரையில். மலிவான விலையில் பலவித புத்தம் புதிய மொடல்களில் பஞ்சாபி வகைகள், தரமான தங்கத்தில் திறமான வேலைப்பாட்டுடன் புத்தம் புதிய மொடல்களில் '22' கரட் தங்க நகைகள் விசேட கழிவில்.

பவுணின் விலை அன்று அறிவிக்கப்படும்.

Ramy யின் புதிய பழைய சிடிக்கள் 5Sfr இல் இருந்து Digital DVD 250Sfr இல் இருந்து 315Sfr வரை

விபரங்களுக்கு:

**Basel S.P. Textiles & Jewellery**

**Teli fax 0612720990**
**079 356 227**

# மனித நேயத்தின் குரல்வளை நவம்பர் 5 நசுக்கப்படுமா?

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைச் சதி வழக்கின் முடிச்சுக்கள் பல இன்னமும் அவிழ்க்கப்படாத நிலையில் நான்கு தமிழர்களின் கழுத்திற்குத் தூக்குக் கயிற்றினை இறுக்குவதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. எதிர்வரும் 5-ம் திகதி தூக்குத் தண்டனையை நிறைவேற்றும்படி சென்னைத் தடா நீதிமன்றம் வேலூர்ச் சிறைச்சாலைக்கு உத்தரவினைப் பிறப்பித்துள்ளது. ஆயினும் முருகன், நளினி, சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் இந்திய ஜனாதிபதியிடம் கருணை மனுவினைப் பிறப்பிக்க அவகாசம் இருப்பதால் தூக்குத் தண்டனை நவம்பர் 5-ம் திகதி நிறைவேற்றப்படும் என உறுதியாகத் தெரிவிக்கமுடியாதெனச் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது ஒருபுறமிருக்க நான்கு தமிழர்களையும் தூக்கில் போட வேண்டாமென உலகத் தமிழர்களின் ஒருமித்த குரல் தற்பொழுது இந்தியாவில் குவிந்தவண்ணம் இருக்கிறது. மனித நேயத்தில் அக்கறை கொண்ட பத்திரிகைகளும் இதழ்களும் இவர்களைக் காப்பாற்றும்படி அனைவருக்கும் அறைகூவல்விடுத்துள்ளது.

## போஸ்டர் பால்!






மேற்குறித்த தண்டனையை நிறுத்தாவிடில் திருச்சி மாவட்ட ஆட்சி அலுவலகம் முன்பாக தான் தூக்கில் தொங்கப்போவதாக சிறீபால் என்ற வழக்கறிஞர் பகிரங்க அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளார். தனது முடிவு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய சிறீபால் முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி ஆகியோர் ராஜீவ் கொலையில் சம்பந்தமற்றவர்கள் எனவும் இவர்கள் கொடுக்கப்போகும் கருணை மனுவினை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டு தண்டனையை ரத்துச் செய்யாவிடில் தான் தூக்கில் தொங்கப்போவது உறுதியெனத் தெரிவித்திருக்கின்றார்.







# சோனியாவுக்கு எதிரான தடைச் சட்டம் வருமா?

உயர்ந்த பதவிகளை வெளி நாட்டவர் வகிக்க தடைச்சட்டம் கொண்டு வரப்படுமா? என்பதற்கு மத்திய அமைச்சர் ராம் ஜெத்மலானி பதில் அளித்துள்ளார். இந்தியாவின் உயர்ந்த பதவிகளான ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, தலைமை தேர்தல் கமிஷனர் உட்பட 10 உயர் பதவிகளை வெளிநாட்டவர் வகிப்பதைத் தடை செய்யும் வகையில் பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டு வருவோம் என்று தேசிய ஜனநாயகக் கூட்டணி (பா.ஜ.க. கூட்டணி) தனது தேர்தல் அறிக்கையிலேயே வாக்குறுதி அளித்திருந்தது.

இந்நிலையில் தேஜ.கூட்டணி தேர்தலில் அமோக வெற்றி பெற்று மத்தியில் ஆட்சியைப் பிடித்துள்ளது. வாஜ்பாயும் மீண்டும் பிதமராகப் பதவி ஏற்று விட்டார். வாஜ்பாய் அரசில் பிரபல வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி சட்டத்துறை மற்றும் கம்பெனி விவகாரத்துறை அமைச்சராகப் பதவி ஏற்றிருக்கிறார்.

நேற்று இவர் பொறுப்பேற்றுத் தனது பணியினை துவக்கினார். பிறகு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு ஜெத்மலானி பேட்டி அளிக்கும்போது

காங்கிரஸ் உட்பட அனைத்து அரசியல் கட்சிகளின் கருத்துக்களையும் கேட்டறிந்த பிறகு தான் உயர்ந்த பதவிகளை வெளி நாட்டவர் வகிப்பதைத் தடை செய்யும் வகை செய்யும் மசோதாவை பாராளுமன்றத்தில் கொண்டுவர முயற்சி செய்வோம்.

சட்ட ரீதியாக, அரசியல் சட்ட ரீதியாக, அரசியல் ரீதியாக இந்த மசோதா குறித்து முழுமையாக ஆய்வு செய்ய வேண்டியது அவசியம் எனத் தெரிவித்துள்ளார்.

# மூப்பனார் கருணாநிதி வைகோ சந்திப்பு

த.மா.கா. தலைவர் ஜி.கே. மூப்பனாரைத் தமிழக முதல்வர் கருணாநிதி நேரில் சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.

த.மா.கா. தலைவர் மூப்பனார் சமீபத்தில் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இதய அறுவை சிகிச்சை செய்துகொண்டார். சிகிச்சை முடிந்து மயிலாப்பூரில் உள்ள தனது வீட்டிற்கு திரும்பிய மூப்பனாரை தமிழக முதல்வர் கருணாநிதி, அமைச்சர்கள் ஆலடி அருணா, கோ.சி.மணி, ஆற்காடு வீராசாமி, பொன்முடி ஆகியோர் உடல் நலம் விசாரித்தனர். சுமார் 15 நிமிடம் பேசிய பின் முதல்வர் கருணாநிதி கோட்டைக்குச் சென்றார். மறு நாள் வைகோ மூப்பனாரின் இல்லம் வந்து அவரை சுகம் விசாரித்தார்.



# ஆட்சியில் பங்கு கேட்க மாட்டோம்; சட்டமன்ற தேர்தலிலும் தி.மு.க. கூட்டணி தொடரும்

## – ராமதாஸ்

வருகிற சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க., பா.ம.க. கூட்டணி தொடரும் என்றும், ஆனால் ஆட்சியில் பங்கு கேட்க மாட்டோம் என்றும் டாக்டர் ராமதாஸ் கூறினார்.

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் சென்னையில் நிருபர்களுக்குப் பேட்டியளிக்கும்போது இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்ததாவது

தமிழகத்தில் இனிமேல் வரும் எல்லாத் தேர்தல்களிலும் தி.மு.க. வுடன் எங்கள் கூட்டணி தொடரும். ஆனால் ஆட்சியில் பங்கு கேட்கவும் மாட்டோம். கூட்டணி அரசில் சேரவும் மாட்டோம். தமிழகத்தைப் பொறுத்த



மட்டில் கூட்டணி அரசு என்பது ஒத்துவராது, தனிக்கட்சி ஆட்சிதான். ஒரு கூட்டணி என்றால் அதில் இடம் பெற்றுள்ள எல்லா கட்சிகளின் வாக்குகளும் முக்கியம்தான். ஒவ்வொரு வாக்கும் முக்கியமானது. எனவே எந்தக் கட்சிக்கு வாக்கு அதிகம் யாருடைய வாக்கால் வெற்றி என்று பார்க்கக்கூடாது. வாழப்பாடி ராமமூர்த்தியின் வெற்றிக்கு பா.ம.க.கடுமையாகப் பாடு பட்டது. அதில் எந்தக் குறையும் இல்லை. த.மா.கா. வினர் செய்த சதிதான் அவரது தோல்விக்குக் காரணம். அ.தி.மு.க. அதிக இடங்களில் போட்டியிட்டது. தி.மு.க. 18 இடங்களில் தான் போட்டியிட்டது. எனவே அ.தி.மு.க.வின் வாக்கு சதவீதம் அதிகம் என்பது சரியல்ல. மத்திய அமைச்சரவையில் எங்களுக்கு அளித்துள்ள இடம் திருப்தியாக இருக்கிறது. எத்தனை பேர் மந்திரிகள் என்பது முக்கியமல்ல. தமிழ்நாட்டுக்கு என்ன செய்கிறோம் என்பதுதான் முக்கியம் எனவும் அவர் தெரிவித்தார்.

# சோனியாவிற்கு இரு பதவிகளா? கட்சியில் சலசலப்பு

பாராளுமன்றக் கட்சித் தலைவர் பதவி, எதிர்க்கட்சித் தலைவர் பதவி இரண்டும் எனக்குத்தான் என்று சோனியா முடிவெடுத்து இருப்பதால், கட்சியில் மோதல் ஏற்படும் சூழ்நிலை உருவாகிவருகிறது.

காங்கிரஸ் பாராளுமன்றக் கட்சி சட்டவிதிப்படி, பாராளுமன்றக் கட்சித் தலைவர்தான் இரு சபைகளின் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் நிர்வாகிகளை நியமிக்க வேண்டும்.

இது குறித்து அர்ஜூன்சிங் கூறுகையில், சோனியாவே எதிர்க்கட்சி தலைவராகும்போது அவர் இன்னொருவரை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றார். இன்னொரு காரியகமிட்டி உறுப்பினர் கூறுகையில், போட்டிக்கு வாய்ப்பு உள்ளது. ஆனால் எம்பிக்கள் சோனியா எதிர்க்கட்சி தலைவராவதையே விரும்புகிறார்கள் என்று கூறினார். ஆனால் காரிய கமிட்டி உறுப்பினரும் எம்.பியுமான ராஜேஷ்பைலட், ஏற்கனவே எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு நான் போட்டியிடுவேன் என்று அறிவித்து உள்ளார். இதுபோல் என்.டி.திவாரி, மாதவராவ் சிந்தியா ஆகியோரது பெயர்களும் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு அடிபடுகின்றன.

# திருமாவளவனுக்குத் தடை

விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத் தலைவர் திரமாவளவன் மற்றும் அவரது ஆதரவாளர்கள் வாகனங்களில் கடலூர் மாவட்டத்துக்குள் நுழைய மாவட்ட ஆட்சியர் தடைவிதித்துள்ளார். திருமாவளவன் இம் மாவட்டத்திற்குள் நுழைந்தால் தலித்- வன்னியர் ஆகிய பிரிவினருக்கிடையே பதற்றம் அதிகரிக்கும் என்பதேகாரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# வாஜ்பாய் தலைமையில் 70 அமைச்சர்கள் பதவியேற்பு

(13.10.99)

அடல்பிகாரி வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு கடந்த 13-ம் திகதி (புதன்கிழமை) காலையில் பதவியேற்றது. மூன்றாவது முறையாகப் பிரதமர் பதவியை ஏற்றார் வாஜ்பாய். அவர் உள்பட 70 பேர் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் வாஜ்பாய் உள்பட 26 பேர் கபினட் அமைச்சர்கள். தனிப்பொறுப்புடன் கூடிய இணை அமைச்சர்கள் 7 பேர். இணை அமைச்சர்கள் 37 பேர். திரிணமூல், ஐக்கிய ஜனதா தளம், தி.மு.க. சிவசேனைபோன்ற பலம் வாய்ந்த கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர். முந்தைய அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த பலர் இந்த அமைச்சரவையிலும் உள்ளனர். ஆனால், சிக்கந்தர் பக்த், ராமகிருஷ்ண ஹெக்டே இருவரும் இடம்பெறவில்லை. ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த சரத் யாதவ், ராம் விலாஸ் பாஸ்வான், திரிணமூல் காங்கிரஸ் தலைவர் மமதா பானர்ஜி. தி.மு.க.வைச் சேர்ந்த முரசொலி மாறன், டி.ஆர். பாலு மாகாராஷ்டிர முன்னாள் முதல்வர் மனோகஷ் ஜோஷி (சிவசேனை) ஆகியோருக்கு கபி



னட் அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது. மத்திய பிரதேசம், ஹிமாச்சலப் பிரதேசத்தில் பா.ஜ.க சிறப்பான வெற்றியைப் பெற்றதைத் தொடர்ந்து அந்த மாநிலங்களின் முன்னாள் முதல்வர்களான சுந்தர்லால் பட்வா, சாந்தகுமார் இருவரும் மத்திய அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏராளமான புதுமுகங்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கும் அமைச்சர் பதவி அளிக்கப்பட்டுள்ளது. பஞ்சாபில் இரு இடங்களை வென்ற அகாலி தளம் அமைச்சரவையில் இடம் பெறவில்லை. அமைச்சரவையில் ஹெக்டே இடம்பெறாதது குறித்துக் கருத்துத் தெரிவித்த மூத்த அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், அமைச்சரவையில் இடம் அளிப்பது பிரதமரின் உரிமை என்றார். அமைச்சர்கள் தேர்வில் நிர்ப்பந்தம் ஏதுமில்லை என்று எல்.கே.அத்வானி தெரிவித்தார்.

தேர்தலில் தோல்வியுற்ற சுர்ஜீத் சிங் பர்னாலா, வாழப்பாடி ராமமூர்த்தி இருவரும் அமைச்சரவையில் இடம்பெறவில்லை. தெலுங்கு தேசம், இந்திய தேசிய லோக் தளம் இரண்டும் அமைச்சரவையில் சேரவிரும்பவில்லை.

குடியரசுத் தலைவர் மாளிகை வளாகத்தில் காலை 10.32 மணிக்கு வாஜ்பாய் பதவியேற்றார். அவரைத் தொடர்ந்து மற்ற அமைச்சர்கள் பதவியேற்றனர். பதவியேற்பு விழாவில், குடியரசு முன்னாள் தலைவர் ஆர். வெங்கடராமன், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தமிழக முதல்வர் கருணாநிதி, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, காஷ்மீர் முதல்வர் பாரூக் அப்துல்லா, ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ, பாமக நிறுவனர் ராமதாஸ், வாழப்பாடி ராமமூர்த்தி, தலைமைத் தேர்தல் ஆணையர் எம்.எஸ்.கில் உள்பட முக்கிய தலைவர்கள் பலர் பங்கேற்றனர்.

## புதிய மத்திய அமைச்சர்கள்

1. எல்.கே. அத்வானி-உள்துறை.
2. அனந்த குமார்-கலாச்சாரம், இளைஞர் நலம், விளையாட்டு.
3. டி.ஆர்.பாலு-சுற்றுச்சூழல், வனவளம்.
4. மமதா பானர்ஜி- தொடருந்துத்துறை.
5. ஜோர்ஜ் பெர்னாண்டஸ்-பாதுகாப்பு.
6. ஜக்மோகன்-நகர்ப்புற வளர்ச்சி.
7. சத்தியநாராயணண் ஜாட்டியா - நகர்ப்புற வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு.
8. ராம் ஜேட்மலானி-சட்டம், நீதி, கம்பெனி விவகாரம்.
9. மனோகர் ஜோஷி-கனரக தொழில், பொதுத்துறை நிறுவனங்கள்.
10. முரளி மனோகர் ஜோஷி-மனித ஆற்றல் மேம்பாடு, விஞ்ஞானம் - தொழில்நுட்பம்.
11. ரங்கராஜன் குமாரமங்கலம்-மின்சாரம்.
12. பிரமோத் மகாஜன்-நாடாளுமன்ற விவகாரம், நீர் வளம்.
13. முரசொலி மாறன்- வர்த்தகம், தொழில்.
14. ராம் நாயக்-எரிநெய், நிலவாயு.
15. நிதீஷ் குமார்-தரைவழிப்போக்குவரத்து.
16. ஜுயெல் ஓரம்-பழங்குடியின மேம்பாடு.
17. ராம் விலாஸ் பாஸ்வான்-தகவல் தொடர்புத்துறை.
18. நவீன் பட்நாயக் சுரங்கம், கனிமம்.
19. சுந்தர்லால் பட்வா-ஊரக வளர்ச்சி.
20. சுரேஷ் பிரபு-இரசாயனம், உரம்.
21. காசிராம் ராணா-ஜவுளி.
22. சாந்தகுமார்-நுகர்வோர் விவகாரம் பங்கீட்டு விநியோகம்.
23. ஜஸ்வந்த் சிங்-வெளியுறவு. .
24. யஷ்வந்த் சின்ஹா-நிதி.
25. சரத் யாதவ்-விமானப்போக்குவரத்து.

# தமிழகத்திற்கு 8 அமைச்சர் பதவிகள்

தமிழகத்தைச் சேர்ந்த எட்டுப் பேருக்கு மத்திய அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் தி.மு.க.வைச் சேர்ந்த முரசொலி மாறன், டி.ஆர்.பாலு ஆகியோருக்கும் பா.ஜ.கவைச் சேர்ந்த ரங்கராஜன் குமாரமங்கலத்துக்கும் காபினட் அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. தி.மு.க. வைச் சேர்ந்த மற்றொருவருக்கு இணை அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று ம.தி.மு.க. வைச் சேர்ந்த செஞ்சி ரா்மச்சந்திரன், கண்ணப்பன் மற்றும் பா.ம.க.வைச் சேர்ந்த என்.டி. சண்முகம், பொன்னுச்சாமி ஆகியோருக்கும் இணை அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

# தாமரைக்கனி ஒரு துரோகி - அ.தி.மு.க. அறிக்கை

எம்.ஜி.ஆர். காலத்திலிருந்து நீக்கப்பட்டுப் பின்னர் மன்னிப்புக் கோரி மீண்டும் கழகத்தில் சேர்க்கப்பட்ட தாமரைக்கனி தன்னை மூத்த உறுப்பினர் என்று சொல்லிக்கொள்வதற்கு எந்த உரிமையும் கிடையாது. கழகப் பொதுச்செயலாளர் பதவியைப் பற்றி எந்தவித கேள்வியையும் எழுப்பும் உரிமை தாமரைக் கனிக்கு எந்த விதத்திலும் இல்லை. உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்கிற தாமரைக்கனி எந்தக் காலத்திலும் தலைமைக்கு விசுவாசமாக இருந்ததில்லை என்பது பலமுறை நிரூபிக்கப்பட்டுவிட்டது. சட்டப்பேரவைக்குள் தாமரைக்கனி செய்த அநாகரிக செயல்களுக்கெல்லாம் எம்.ஜி. ஆரும், ஜெயலலிதாவும் வேதனைப்பட்டிருக்கிறார்களே தவிர அவரது செயல்பாட்டை ஊக்குவித்ததில்லை.

எதையோ குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தாலும் அது தன் புத்தியைக் காட்டிவிடும் என்று சொல்வதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருபவர் தாமரைக்கனி என்பதைப் பலமுறை பார்த்திருக்கிறோம். ஜெயலலிதாவுக்கும், கழகத்திற்கும் துரோகம் செய்தவர்கள், அரசியலில் காணாமல் போன பட்டியலில் தாமரைக்கனிக்கும் ஓர் இடம் கிடைத்துவிட்டது. இவ்வாறு அ.தி.மு.க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

தமிழ் அச்சகம்

(மக்கள் கடை அருகில்)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணி வரை

59, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!

திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

Pub

# வைகோவை அமைச்சராகும்படி வாஜ்பாய் வற்புறுத்து

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ. பிரதமர் வாஜ்பாயை நேற்றுக் காலை அரவது வீட்டில் சந்தித்துப் பேசினார். அதன் பிறகு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

பிரதமர் வாஜ்பாயை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினேன். அப்போது மத்திய அமைச்சரவையில் சேரும்படி என்னை வாஜ்பாய் கேட்டுக்கொண்டார். நீங்கள் சேர்ந்தால் அது மத்திய அமைச்சரவையின் பலத்துக்கு ஒரு தூணாக அமையும் என்றார். அமைச்சர் பதவி அளிக்க முன்வந்ததற்காக வாஜ்பாய்க்கு நன்றி தெரிவித்தேன். அதே சமயம் மந்திரி பதவியை ஏற்க இயலாததை வாஜ்பாயிடம் கூறிவிட்டேன். கட்சிப் பணிகளில் தீவிர கவனம் செலுத்தவேண்டியிருப்பதை வாஜ்பாயிடம் தெரிவித்தேன். மந்திரிசபையில் இடம் பெறாவிட்டாலும் பாராளுமன்றத்தில் உங்களுக்கு பலம் சேர்க்கும் தூணாக இருப்பேன் என்று வாஜ்பாயிடம் உறுதி அளித்தேன்.

**கேள்வி:** நீங்கள் அமைச்சரவையில் சேராவிட்டாலும் உங்கள் கட்சி சார்பில் மற்றவர்கள் மந்திரிசபையில் இடம்பெறுவார்களா?

**பதில்:** அது தொடர்பாக வாஜ்பாயிடம் சில பிரேரணைகளைக்கூறி இருக்கிறேன். அதே சமயம் எந்தவிதமான நிபந்தனைகளையும் வைக்கமாட்டேன் என்பதையும் வாஜ்பாயிடம் தெளிவுபடுத்திவிட்டேன். ஏனெனில் அமைச்சரவை அமைப்பது பிரதமரின் தனிப்பட்ட உரிமை. அதில் அவர் எந்த முடிவு எடுத்தாலும் அதற்கு கட்டுப்படுவோம்.

**கேள்வி:** மத்திய அமைச்சரவையில் ம.தி.மு.க சார்பில் 2 பேர் இடம்பெறுவார்களா?

**பதில்:** அது பிரதமர் எடுக்க வேண்டிய முடிவு. வாஜ்பாய் தலைமையில் அமையும் அரசு புதிய சகாப்தம் படைக்கும். 24 கட்சிகளைக்கொண்ட இந்தக் கூட்டணி அரசு, அரசியல் ரீதியாகவும் பூகோள ரீதியாகவும் உண்மையான இந்தியாவைப் பிரதிபலித்து அதை 2000-வது ஆண்டுக்கு வழிநடத்திச் செல்லும். இவ்வாறு கூறினார்.

# காங்கிரசின் சரிவிற்கு பொறுப்பேற்கிறேன் - சோனியா

காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சியின் பொதுக்குழுக் கூட்டம் நேற்று டெல்லியில் நடந்தது. இதில் நாடாளுமன்றக்கட்சித் தலைவர் பதவிக்கு சோனியா காந்தி பெயரை, மூத்த காங்கிரஸ் தலைவர் என்.டி.திவாரி முன்மொழிந்தார். மக்களவை முன்னாள் துணைச் சபாநாயகர் பி.எம்.சையது உட்பட பல தலைவர்கள் வழி மொழிந்தனர். அதைத் தொடர்ந்து தலைவர் பதவிக்குச் சோனியா ஏகமனதாகத் தேர்ந்து எடுக்கப்பட்டார்.

இதன் பிறகு கூட்டத்தில் சோனியா சுருக்கமாகப் பேசியதாவது: மக்களவைத் தேர்தலில் காங்கிரசுக்கு ஏற்பட்ட சரிவுக்கு நான் தார்மீகப் பொறுப்பு ஏற்கிறேன். இதற்காக கட்சி என்ன தீர்ப்பு அளித்தாலும், என்ன நடவடிக்கை எடுத்தாலும் ஏற்கத் தயாராக இருக்கிறேன். கட்சி அமைப்பைப் பலப்படுத்தி இந்தச் சரிவை நான் சரி செய்துவிடுகிறேன். சபையில் (மக்களவையில்) இனி நான் அதிகநேரம் செலவழிக்கப்போகிறேன். பாராளுமன்றப் பணியில் அதிக கவனம் செலுத்துவேன்.

வாஜ்பாய் அரசின் அதிகார தோரணைக்கு பணியாதீர்கள். முந்தைய அரசின் சர்க்கரை இறக்குமதி ஊழல் உள்பட பல தவறுகளைச் சுட்டிக்காட்டுங்கள். வகுப்புவாத சக்திகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராட காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. இவ்வாறு சோனியா பேசினார்.

மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் எப்போதும் இல்லாத அளவுக்கு மிகக் குறைவாக 112 தொகுதிகளை மட்டுமே கைப்பற்றித் தோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது.




# பாகிஸ்தானில் ஜனநாயகத்தைப் பேண சர்வதேசம் அழுத்தம்

பாகிஸ்தானில் பிரதமர் நவாப் செரிப் தலைமையிலான அரசு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இராணுவப் புரட்சிமூலம் கவிழ்க்கப்பட்டு இராணுவமே ஆட்சியைக் கைப்பற்றியுள்ளதைத் தொடர்ந்து சர்வதேசத்தின் கவனம் பாகிஸ்தானின் பக்கம் மீண்டுமொருமுறை ஈர்க்கப்பட்டுள்ளது. இராணுவத் தளபதி ஜெனரல் பேவைஸ் முஷாரப் நாட்டின் தலைவராக தன்னைப் பிரகடனப்படுத்திவிட்டு பாகிஸ்தான் தழுவிய இராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, அரசியல் சாசனத்திற்கு செயற்தடை விதித்துள்ளார். தற்போதைய நிலைமையின்படி பாகிஸ்தானின் நிறைவேற்று அதிகாரியாக இராணுவத் தளபதியே இருக்கின்றார்.


பிரதமர் நவாப் ஷெரிப்


இராணுவத் தளபதி முஷாரப்


தொலைக்காட்சி நிலையத்தைக் கைப்பற்ற முனையும் இராணுவம்

செவ்வாய் இரவு 11.15 மணியளவில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. சிறீலங்காவில் நடைபெற்ற இராணுவ வைபவம் ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் ஜெனரல் முஷாரப் பாகிஸ்தான் திரும்பிக்கொண்டிருந்த வேளை பிரதமர் நவாப் ஷெரிப், அவரைப் பதவி நீக்கிய பின்னர் பாகிஸ்தான் புதிய தளபதியாக அந்நாட்டின் புலனாய்வுத்துறைப் பொறுப்பதிகாரியை நியமித்தார். தனது பதவி நீக்க அறிவித்தலை விமான நிலையத்தில் அறிந்துகொண்ட தளபதி உடனடியாகத் தனது சகாக்களுடன் தொடர்புகொண்டு கராச்சி விமானநிலையத்தின் பாதுகாப்பினை அதிகரித்துக்கொண்டார்.

அதனை அடுத்து கேந்திர நிலையங்களைக் கைப்பற்றுமாறு படையினருக்கு அவர் உத்தரவிட இராணுவப் புரட்சி வெடித்தது. பிரதமர் நவாப் ஷெரிப்பினதும் அமைச்சர்கள் அனைவரினதும் வாசஸ்தலங்கள் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு அவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். அத்துடன் அவர்களின் தொலைபேசி இணைப்புக்களும் துண்டிக்கப்பட்டன. பிரதமர் நவாப்ஷெரிப் கைது செய்யப்படும்போது அவருடன் இருந்த பாகிஸ்தானின் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந் நிகழ்வுகளின்பின்பு பாகிஸ்தானின் புதிய தலைவராகத் தன்னைப் பிரகடனப்படுத்திய தளபதி, நாட்டு மக்களுக்கு நள்ளிரவிற்குப் பின்னர் உரையாற்றினார்.

பாகிஸ்தான் அரசு சதிப் புரட்சிமூலம் இராணுவத்தால் கவிழ்க்கப்பட்டதையடுத்து சர்வதேச நாடுகள் அதிருப்தி தெரிவித்ததுடன், பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயக ஆட்சி மலரவேண்டுமென வலியுறுத்தியுள்ளனர். அமெரிக்க இராஜாங்க அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில், பாகிஸ்தான் அரசியலமைப்பிற்கு விரோதமான முறையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளமைக்கு விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜப்பான், சீனா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும், கனடா, பொதுநலவாய அமைப்பு ஆகியவையும் இராணுவப் புரட்சிக்குக் கண்டனம் தெரிவித்ததுடன் பிரதமர் நவாப் ஷெரிப் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் எனவும் கோரியுள்ளன. பாகிஸ்தான்மீது பொருளாதாரத்தடை கொண்டுவருவது குறித்தும் தற்பொழுது சர்வதேச ரீதியில் ஆராயப்பட்டு வருகின்றது.

இதேவேளை முன்னாள் பிரதமர் பெனாசிர்பூட்டோ இப் புரட்சி பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் நவாப் ஷெரிப்பின் அரசு பின்பற்றிய சுயநலக்கொள்கைகளால் நாட்டின் அத்திவாரமே ஆட்டம் கண்டதால் இவ்வாறான நிலைமையில் இருந்து நாட்டைக் காப்பது இராணுவத்தின் கடமை எனவும், அதையே தான் இராணுவம் செய்ததெனவும் குறிப்பிட்டுள்ளார்.



கராச்சி விமான நிலையத்தை கைப்பற்றிய துருப்பினர்

## செனற்சபை நிராகரிப்பால் அணு ஆயுதப் பரிசோதனைத் தடை ஆர்வம் குன்றிவிடவில்லை
### - கிளின்டன் அறிவிப்பு -

அணு ஆயுதப் பரிசோதனைத் தடை ஒப்பந்தத்தினை அமெரிக்க செனற்சபை நிராகரித்தமையால், அணுஆயுதப் பரிசோதனை தடையை மீள் பரிசோதிப்பதற்கு அமெரிக்காவிற்கு இருந்த ஆர்வம் குன்றிவிட்டதாக எண்ணக்கூடாதென அமெரிக்க அதிபர் பில்கிளின்டன் தெரிவித்திருக்கின்றார். அத்துடன் அணு ஆயுதப் பரிசோதனைகளை நடத்த வேண்டாமென அவர் சர்வதேசத்தினைக் கேட்டுக்கொண்டதுடன், இவ்விடயத்தில் இந்தியாவையும், பூாகிஸ்தானையும் தான் எச்சரிக்க விரும்புவதாகவும் கூறினார். முன்னதாக மேற்படி தடை ஒப்பந்தத்தினை அமெரிக்க செனற்சபை நிராகரித்துவிட்டமை கிளின்டனுக்கு ஒரு பின்னடைவாகவே கருதப்படுகிறது. அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் மீது குடியரசுக் கட்சியினருக்கு இருக்கும் வெறுப்பே அவர்களின் ஒப்பந்த நிராகரிப்பிற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக் கட்சியின் சார்பாகப் போட்டியிடும் தற்போதைய துணை ஜனாதிபதி அல்கோர் கருத்துத் தெரிவிக்கையில், தான் அமெரிக்காவின் ஜனாதிபதியாக வரும் பட்சத்தில் மீண்டும் அவ் ஒப்பந்தத்தினை செனற்றின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## பணயக் கைதிகள் மூவர் விடுதலை

கடந்த மாதம் ஈக்குவடோர் நாட்டின் அமேசன் காட்டுப் பகுதியில் கடத்திச் செல்லப்பட்ட மூன்று உல்லாசப் பிரயாணிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். விடுதலை செய்யப்பட்டவர்கள் ஸ்பெயின் மற்றும் பெல்ஜிய நாட்டைச் சேர்ந்தவர்கள். கொலம்பியாவில் போராடிவரும் மார்க்சிஸ் குழுவே இக் கடத்தலை நடாத்தியிருக்கக்கூடும் என்ற சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 11-ம் திகதி பல வெளிநாட்டவர்கள் உட்பட பன்னிரண்டு ஊழியர்களை இவர்கள் கடத்திச் சென்றது குறிப்பிடத்தக்கது.

## மேற்குத் தீமோர் எல்லையில் படைகளைக் குவிக்கப்போவதாக இந்தோனேசியா அறிவிப்பு

மேற்குத் தீமோர் எல்லையில் இந்தோனேசியத் துருப்பினரைக் குவிக்கப்போவதாக இந்தோனேசிய அரசு அறிவித்துள்ளது. கிழக்குத் தீமோர் எல்லையில் அவுஸ்திரேலியாவின் தலைமையிலான சர்வதேசப் படையினருக்கும் இந்தோனேசியப் படையினருக்கும் இடையே மோதல்கள் ஆரம்பித்ததைத் தொடர்ந்து ஆத்திரமடைந்த இந்தோனேசியத் தரப்பு மேற்படி அறிவிப்பினை விடுத்துள்ளது. மேற்குத் தீமோருக்குள் அத்துமீறி உட்புக பன்னாட்டுப்படையினர் முனைந்தால் அவர்களைச் சுட்டுவீழ்த்தும்படியும் இந்தோனேசியத் துருப்பினருக்கு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.. சர்வதேசப் படையினர் மேற்குத் தீமோருக்குள் உட்புக முனைந்தபோது எழுந்த மோதலில் தனது சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதால் ஆத்திரமடைந்த இந்தோனேசிய அரசு சர்வதேசப் படையினரின் செயற்பாட்டில் குற்றம்சாட்டியுள்ளது.

ஆனால் இக் குற்றச்சாட்டினை சர்வதேசப் படைகளின் தளபதி மறுத்துள்ளார். கிழக்குத் தீமோருக்குள் அத்துமீறிப் புகுந்த இந்தோனேசியத் துருப்பினரே சர்வதேசப் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அதற்காகத் தாம் பதில் தாக்குதல் நடாத்தியதாகவும் எனிமேலும் அவ்வாறான தாக்குதல் நடந்தால் பதில் தாக்குதல் நிச்சயம் நடாத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இது ஒருபுறம் இருக்க மேற்குத் தீமோர் பகுதியில் கடும்மழை பெய்துவருவதால் அங்கு அகதிகளாக உள்ள 2 1/2 இலட்சம் பேர் பெரும் அவதியுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அறுநூறாவது கோடிக் குழந்தைக்கு ஐ.நா. வாழ்த்து

பொஸ்னியத் தலைநகரில் கடந்த புதன் நள்ளிரவன்று பிறந்த குழந்தையுடன் உலகின் சனத்தொகை 600-வது கோடியை எட்டியுள்ளது. கெலக் பாத்திமா என்னும் தாய்க்கே சரஜேவோ பல்கலைக்கழக மருத்துவமனையில் இவ் ஆண்குழந்தை பிறந்துள்ளது.

இக் குழந்தையை ஐ.நா. செயலாளர் நாயகம் சென்று பார்த்து, பெற்றோர்களுக்கு தனது வாழ்த்தினைத் தெரிவித்திருக்கின்றார். பொஸ்னியாவிற்கு கோபி அனான் உத்தியோகபூர்வமான விஜயத்தினை மேற்கொண்டபோதே இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

## ஐ.நா. அதிகாரிகள் கொலை

புருண்டியில் இரு ஐநா. அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர். தன்சானிய எல்லையில் உள்ள அகதி முகாம் ஒன்றிற்குச் சென்றுகொண்டிருந்த வேளையிலேயே இவ்விருவரும் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கொலை செய்யப்பட்டதற்கான காரணங்கள் எதுவும் தெரியவரவில்லை.

# நையரேரேக்கு தான்சானிய மக்கள் அஞ்சலி

தான்சானியாவின் ஸ்தாபகரும் முன்னாள் ஜனாதிபதியுமான ஜீலியஸ் நையரேரேக் இங்கிலாந்தின் மருத்துவ மனையொன்றில் காலமானார். அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக திங்களன்று பல்லாயிரம் மக்கள் தலைநகர் தார் எல் சலாமில் கூடினார்கள். ஏயார் தான்சானியாவின் போயிங் விமானம் அவரது உடலைத் தாங்கியபடி தலை நகரின் விமான நிலையத்தில் இறங்கியபோது பல ஆயிரம் மக்கள் கதறியழுது தங்களது இழப்பினை வெளிப்படுத்தினார்கள். கொளுத்தும் வெளியில் காத்திருந்த மக்களில் பலர் மயங்கி விழுந்தனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜீலியஸ் நையரேரே 1961-ம் ஆண்டு தான்சானியா பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது முதல் தலைமை தாங்கிவந்தவர் 1962-ம் ஆண்டு முதல் 1985-ம் ஆண்டு வரையான 23 வருடகாலமாக தான்சானியாவின் ஜனாதிபதியாக விளங்கியவர். காலணித்துவத்தின் பின் பதவியேற்ற ஜனாதிபதிகளில் தானாக முன்வந்து பதவி விலகியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நையரேரேயின் உடல் இவ்வாரம் வியாழன்வரை அரச மரியாதையுடன் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும். உலகத் தலைவர்களின் அஞ்சலியின் பின் சனியன்று அவரது சொந்தக் கிராமமான புட்டீடாவில் அடக்கம் செய்யப்படும். ஜனாதிபதி பென்ஜமின் ம்காபா 30 நாட்களுக்குத் துக்கதினங்களாக அறிவித்துள்ளார்.

# பின்லாடெனை ஒப்படைக்க வேண்டும் அமெரிக்கா

## முடியாதென்கிறது ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தானில் தற்போது தங்கியுள்ளதாகக் கருதப்படும் சவுதி கோடீஸ்வரரான ஓசாமா பின்லாடெனை அமெரிக்காவிடம் விசாரணைக்காக ஒப்படைக்க வேண்டும். இல்லாதுவிடின் அந்நாட்டின்மேல் மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார தடையைக் கொண்டுவர ஐ.நா. பாதுகாப்புச்சபை முடிவுசெய்துள்ளது. கடந்த வெள்ளியன்று கூடிய பாதுகாப்புச்சபையிடம் தன்சா்னிய, கென்யா போன்ற நாடுகளில் இருந்த தமது தூதரகங்கள் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளானதில் 224 பேர் கொல்லப்பட்டனர் என்றும் அக்குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரி எனக் கருதப்படும் ஓசாமா பின்லாடென் ஆப்கானிஸ்தானில் தலிபான் பாதுகாப்பில் வாழ்ந்து வருகிறார் என்றும் கூறிய அமெரிக்கா அவரை விசாரணைக்காக ஒப்படைக்கத் தலிபான் ஆட்சியாளர்கள் உடனடியாக முன்வரவேண்டும் என்றும் இல்லாதவிடத்து அவர்களது சொத்துக்கள் முடக்கப்படவேண்டும் என்றும் கோரியது. அதனை ஏற்றுக்கொண்ட பாதுகாப்புச்சபை அமெரிக்காவின் கோரிக்கையை ஏகமானதாக நிறைவேற்றியது. அதன்படி நவம்பர் மாதம் 14-ம் திகதியிலிருந்து ஒரு மாதத்தில் பொருளாதாரத்தடை அமுலுக்கு வரும் எனப் பாதுகாப்புச்சபை தெரிவித்தது.

ஆனால் ஆப்கானிஸ்தான் ஆட்சியாளர்கள் பாதுகாப்புச் சபையின் நகர்வினை வன்மையாகக் கண்டித்தனர். அத்துடன் எந்தக் காரணம் கொண்டும் பின்லாடென் யாருக்கும் ஒப்படைக்கப்படமாட்டார். அவர் குற்றவாளியென்பது நிரூபிக்கப்படவில்லை. அத்துடன் அமெரிக்காவுடன் நாம் நாடுகடத்தல் ஒப்பந்தம் எதனையும் கொண்டிருக்கவில்லை. இவைகளைவிட பின்லாடென் எமது விருந்தினர். 1980-ம் ஆண்டில் சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடியவர். என ஆப்கான் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

# அரசியல் தஞ்சப் பொதுக்கொள்கைக்கு ஐரோப்பிய சமுகத் தலைவர்கள் உடன்பாடு

பின்லாந்தில் கூடிய ஐரோப்பிய சமுகத் தலைவர்கள் அரசியல் தஞ்ச விடயத்தில் தமக்கிடையே பொதுவானதொரு கொள்கையை ஏற்படுத்திக் கொள்வதில் உடன்பாடொன்றிற்கு வந்தனர்.

கடந்த சனியன்று 15 ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் தங்களது பேச்சில் ஐரோப்பிய சமுக நாடுகள் யாவும் அரசியல் தஞ்சம் கோருவோர்களுக்கும் அகதிகளுக்கும் ஒரேவிதமான பொதுவான கொள்கை விதிகளை அமுல்படுத்தும் என்றும், இதற்கான தயாரிப்பு வேலைகளை ஆரம்பிக்குமாறும் ஒரு வருடத்திற்குள் அரசியல் தஞ்சப் பொதுக் கொள்கை விதிகள் அமுலுக்கு வரும் என்றும் தெரிவித்தனர். அத்துடன் அகதிகள் விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள சில நாடுகளுக்கு அடுத்த ஐந்து வருடங்களில் 265 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக அளிப்பது என்றும் அவ் உதவியின் காரணமாக அந்த நாடுகளில் இருந்து அகதிகள் வெளியேறுவது குறையும் என்றும் இம்மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது.

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கலகரமான நிகழ்ச்சிகள், மற்றும் மேடை நிகழ்ச்சிகள் அனைத்திலும் இசைமழையில் நனைந்திட ஐரோப்பா புகழ்

* ஈழநிலா *

தொடர்புகட்கு:
இயக்குநர் எஸ்.எஸ். தில்லைச்சிவம்
Tel: 01 40 37 56 69

## ஐரோப்பா

★ எதிர்வரும் நவம்பர் மாதம் 15-ம் திகதிக்குள் பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துவதற்கான திட்டத்தினை தற்போதைய இராணுவ ஆட்சியாளர்கள் அறிவிக்காது போனால் அந்நாட்டிற்கான உதவிகளை நிறுத்தப் போவதாக ஐரோப்பிய ஒன்றியம் கடந்த சனியன்று நடந்த மாநாட்டில் அறிவித்தது.

★ ரஷ்ய கோடீஸ்வரர் ஒருவரும் அவரது இரண்டு விமான நிறுவன அதிகாரிகளும் சேர்ந்து 600 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் திருடி சுவிஸ் நாட்டில் ஒழித்து வைத்துள்ளார்கள் என ரஷ்ய உளவு அதிகாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். ரஷ்ய விமான நிறுவனமான ஏரோபுளொட்டின் வருமானத்தின் பெரும்பகுதியையே இவர்கள் திருடி சுவிஸ் நாட்டின் இரண்டு நிறுவனங்களில் முதலிட்டுள்ளனர் என மேலும் உளவுத்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

★ அமெரிக்க அரசு 1972-ம் ஆண்டு ரஷ்யாவுடன் செய்துகொண்ட ஏவுகணை எதிர்ப்பு ஒப்பந்தத்தினை மீளச் செயற்படுத்த விரும்புகிறது என அந்நாட்டின் பிரபல பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அவ் ஒப்பந்தத்தினைச் செயற்படுத்த ரஷ்யா தயாராக இருந்தது. ஏவுகணைகளைக் கண்டு பிடிக்கும் பாரிய ராடார் ஒன்றினைத் தயாரிப்பதில் அமெரிக்கா உதவும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

★ இலக்கத் தகடு பொருத்தப்பட்டிராத வாகனமொன்றில் வந்தவர்கள் ஒரு சேர்பிய தம்பதியினரைச் சுட்டுவிட்டு மறைந்துள்ளனர். இது கடந்த சனியன்று இடம்பெற்றுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் கொசோவோவில் தினசரி சகஜமான ஒன்றாக மாறியுள்ளது எனக்கூறும் சேர்பியர் கொசோவோ பாதுகாப்பு படை என பெயர் மாற்றம் கண்டுள்ள அல்பேனிய போராளிகளைத் தடைசெய்ய இயலாத நிலையில் கொசோவோ பல்தேசிய அமைதிப்படையினர் உள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளனர்.

★ பெலாரூஸ் தலைநகர் மின்ஸ்க்கில் இடம்பெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஏற்பட்ட கைகலப்பில் ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பெலாரூஸ் நாட்டினை ரஷ்யக் கூட்டமைப்புடன் இணைக்க அந்நாட்டின் தலைவர் அலெக்சான்டர் லுகசென்கோ முயன்று வருகிறார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே 20.000 இற்கும் அதிகமானோர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

## ஆசியா

★ அரசியல் ரீதியாக பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள மலேசிய அரசு தான் முதல் முதலாக நடத்திய 'Grand Prix' வேகக்கார் பந்தயத்தின் மூலம் மீண்டும் உலகைக் கவர முயன்றுள்ளது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். மலேசியாவில் நடந்த வேகக் கார் ஓட்டப் பந்தயம் 660 மில்லியன் மக்களைச் சென்றடைந்துள்ளது எனக் கூறும் அந்நாட்டின் உல்லாசப் பயணத்துறையினர் குறைந்து போயுள்ள உல்லாசப் பயணத்துறையும் இதனால் அதிகரிக்கும் எனத் தெரிவித்துள்ளனர்.

★ கிழக்குத் தீமோரின் சுவாய் நகரத்தில் இரண்டு தேவாலயங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்ட விவகாரத்தினை அமைதிப்படை அதிகாரிகள் கடந்த வியாழனன்று ஆய்வு செய்தனர். அத்துடன் மலைப்பகுதிகளில் இருந்து திரும்பி தமது சொந்த இடங்களுக்கு வந்துள்ள மக்களும் அவுஸ்திரேலிய அதிகாரிகளால் விசாரணை செய்யப்பட்டனர்.

★ 112 மில்லியன் வருடங்களுக்குமுன் கடலில் வாழ்ந்து வந்ததாகக் கருதப்படும் டைனேசர் ஒன்றின் எலும்புகள் ஒன்று அவுஸ்திரேலியாவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பினேசியோசர் என அழைக்கப்படும் இம் மிருகத்தின் எலும்புகளை குயின்ஸ்லாந்து பகுதியில் ஒரு மீனவர் தற்செயலாகக் கண்டெடுத்துள்ளார். அதனையடுத்து கடந்த இரு வாரங்களாக ஆய்வுக் குழுவினர் அதன் மற்றைய பாகங்களைக் கண்டறியும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

★ சீன விமான நிறுவனத்தின் போயிங் விமானம் ஒன்று 23,000 அடியில் இருந்து திடீரென 19,000 அடிக்கு இறங்கியதால் அதில் பயணம் செய்த பயணிகள் பலர் காயமடைந்தனர். கடந்த ஞாயிறன்று கன்மிங் நகரிலிருந்து ஹொங்கொங்குக்குப் பறந்துகொண்டிருந்த இவ்விமானம் திடீரென இறங்கி ஏறியதால் 55 பயணிகள் காயமடைந்தனர். அவர்களில் 23 பேரின் நிலை கவலைக்கிடம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் ஹொங்கொங் மருத்துவ நிலையங்களில் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

## மத்திய கிழக்கு

★ இஸ்ரேலிய பிரதமர் எகுட்பராக் சட்டவிரோதமாக எழுப்பப்பட்ட யூதக்குடியேற்றங்களை இடிக்கப்போவதாக அறிவித்துள்ளதை எதிர்த்து பல ஆயிரம் வலதுசாரி யூத மக்கள் பிரதமரின் வாசஸ்தலவாசலில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். எகுட்பராக் பிரதமராக பதவியேற்றதன் பின் நடந்த முதலாவது பாரிய ஆர்ப்பாட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

★ ஈரானுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட அமெரிக்கா விரும்புவதாக அந்நாட்டின் உதவி இராஜாங்க செயலர் மார்ட்டின் இன்டிக் கடந்த வியாழனன்று விடுத்த வேண்டுகோளை ஈரான் நிராகரித்தது. கடந்தகால அவமதிப்புக்களைப் பூசி மெழுக தற்போதைய நட்பு வார்த்தைகள் உதவாது என அது அமெரிக்காவைச் சாடியுள்ளது.

★ ஹமாஸ் இயக்கப் போராளிகளுடன் ஜோர்தானிய அரசு மேற்கொண்டுவரும் கெடுபிடிகள் நீக்கப்பட்டு இப்போது அவ்வமைப்புடன் காணப்படும் இழுபறிகள் முடிவுக்குக்கொண்டு வரப்படும் என ஜோர்தானிய அரசர் அப்துல்லா தெரிவித்துள்ளார். ஜோர்தான் ஒரு மிகப் பெரிய குடும்பம். அதற்குள் பிரச்சினைகள் ஏற்படுவது வழக்கம். ஆனால் அவை விரைவிலேயே தீர்க்கப்படும் என தேசிய தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

★ தனது நாட்டுக்குள் ஊடுருவி தாக்குதல்களை நடத்தும் மேற்கு விமானங்களைத் தனது படைகள் தொடர்ந்தும் எதிர்கொள்ளும் என ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசேன் தெரிவித்துள்ளார். அவர்களுக்கு நவீன தொழில்நுட்ப வளங்கள் இருக்கலாம் ஆனாலும் எம்மிடம் உறுதியுள்ளது. அப்பாவிப் பொது மக்களைக் குறிவைத்துத் தாக்கும் விமானங்களைத் தாக்கியழிக்க எனது விமானப் படை முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினார்.

## ஆபிரிக்கா

★ தென்னாபிரிக்காவின் முன்னாள் தலைவரான நெல்சன் மண்டேலா மத்திய கிழக்கு நாடுகளுக்கான சுற்றுப் பயணம் ஒன்றினை ஆரம்பித்து ஞாயிறு அன்று சிரியா வந்துசேர்ந்தார். இவரது பயணம் ஈரான், சிரியா, ஜோர்தான், காசா என இஸ்ரேலில் முடிவடையும் என் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ சோமாலியாவில் ஐ.நாவின் உணவு வாகனத் தொடரைத் துப்பாக்கி நபர்கள் தாக்கியதில் 10 பேர்கள் கொல்லப்பட்டனர். 20 பேர்கள் காயமடைந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. தலைநகர் மொகடீதவிலிருந்து 70 மைல் வடக்கேயுள்ள மகாட்டே பகுதியில் கடந்த வெள்ளியன்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. 25 வாகனங்களில் 250 தொன் உணவு வகைகளுடன் சென்று கொண்டிருந்த வாகனத் தொடர் தாக்குதலுக்கு உள்ளான போதிலும் பயணம் தொடர்ந்ததாக உலக உணவு நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

★ ஐ.நா. பொதுச்சபை மேலும் ஐந்து புதிய அங்கத்தவர்களை பாதுகாப்புச் சபைக்கு தெரிவு செய்துள்ளது. கடந்த வியாழனன்று மாலி, துனிசியா போன்ற ஆபிரிக்க நாடுகளும் மேலும் மூன்று நாடுகளுமே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

★ சியேராலியோனின் போராளிகளுக்கு அமெரிக்க வெளியுறவு செயலர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஆபிரிக்க விஜயமொன்றினை மேற்கொண்டுள்ள ஆல்பிறைட் சியேரா லியோனில் போராளிகள் அமைப்பின் தலைவரான போடே சங்கோவுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். அதன் போதே கடந்த எட்டு வருட யுத்தத்தில் போராளிகளின் மனித உரிமை மீறல்களை எடுத்துக்கூறியவர். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அமைதி உடன்படிக்கைக்கு மதிப்பளித்து அதன்படி செயற்படவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

# Carte Internationale Telephonique

# Titanic Com




உங்கள்
உறவுகளுடன்
நீண்ட நேரம்
உரையாட
தர நிறைவோடு
வெளிவந்து
விட்டது
**Titanic Com**




திறப்புவிழாவை முன்னிட்டு
~~100~~ = 80Frs மட்டுமே.

## விலை விபரம்:

| | Local | vert |
|---|---|---|
| Australia | 120 | 90 |
| Austria | 70 | 50 |
| Brazil | 60 | 45 |
| Canada | 200 | 150 |
| China | 50 | 40 |
| Denmark | 90 | 80 |
| Finland | 90 | 70 |
| Germany | 130 | 90 |

| | Local | vert |
|---|---|---|
| Hong Kong | 120 | 50 |
| Italy | 100 | 70 |
| Kuwait | 27 | 16 |
| Malaysia | 75 | 55 |
| Mexico | 68 | 50 |
| India | 40 | 23 |
| Netherlands | 125 | 80 |
| New zealand | 100 | 80 |
| Norway | 150 | 80 |

| | Local | vert |
|---|---|---|
| Pakistan | 50 | 20 |
| Philippines | 65 | 40 |
| S.Arabia | 25 | 17 |
| Singapore | 90 | 60 |
| Srilanka | 45 | 30 |
| Switzerland | 140 | 80 |
| U.K | 150 | 100 |
| U.S.A | 200 | 120 |
| Thailande | 48 | 32 |

உங்கள் இல்லங்களில் இருந்தபடியே அட்டைகளின் சுட்டிலக்கங்களைக்கொடுத்து வர்த்தகம் செய்திட விரும்புவோர் நேரிலோ, தொலைபேசியூடாகவோ தொடர்பு கொள்ளுங்கள்!

# TITANIC COM

மொத்தமாகவும் சில்லறையாகவும் விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்

**துரித பணமாற்றுச் சேவைக்கு முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்!**

**178, Rue Fbg.saint denis**
**75010-Paris**
**Tel: 0140383523**
**Fax: 0140383506**

**203. Rue Fbg.Saint Denis**
**75010 Paris**
**Tel: 01 53263610**
**Fax: 0153263611**

ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# தேர்தலுக்கு முன்னான சமாதானச் சவடால்கள்

பல்கலைக்கழக வாழ்வில் புத்தி ஜீவி எனக் கருதப்பட்ட சிறீலங்காவின் நீதி அரசியல் அமைப்புத்துறை அமைச்சர் பீரிஸ் தற்பொழுது பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பாக தமிழ் மக்களைப் போருக்கு அறைகூவல் விடுத்துள்ளார். ஜே.ஆர். ஜெயவர்த்தனா பாணியிலான போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்ற பாங்காக அல்லாது தந்திரமான முறையில் சமாதானக் கதைகளைப் பேசி இப்போருக்கான அழைப்பினை அவர் விடுத்துள்ளார். கனடாவில் நடைபெற்ற உலக நாடுகளின் கூட்டாட்சி என்ற கருப்பொருள் மாநாட்டில் உரையாற்றிய பீரிஸ் தமிழ் தேசியத்தின் பிரச்சினைகள் தொடர்பாக சில அப்பட்டமான பொய்யுரைகளைத் தெரிவித்தமை அவரின் பேரினவாத மனோநிலையின் வெளிப்பாடாகும். கூட்டாட்சியியலை ஏற்றுக்கொள்வதற்கு சிறீலங்கா மக்கள் இன்னும் பக்குவப்படவில்லை என்ற தந்திரமான கதையினைக் கூறிய பீரிஸ் அதற்கு முடிவுரையாக வடக்குக் கிழக்கு மாகாணங்களைப் பிரித்து கூட்டாட்சி ஏற்படுத்த முடியாதெனத் தெரிவித்திருக்கிறார். முழுமையான ஒரு இனப் படுகொலையைப் புரியும் அரசின் சார்பான ஒரு அமைச்சர் தனது நாட்டின் உண்மை நிலையினை மறைத்து இவ்வாறான பொய்க் கதைகளைத் தெரிவிப்பது அவர் கற்றுக்கொண்ட பேரினவாத ஆக்கிரமிப்புப் பாடத்தின் விளைவுதான்.

டொனமூர் அரசியலமைப்பின் பின்னர் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பு பேரினவாத காட்டுமிராண்டிகளின் தமிழின் அழிப்பிற்குத்தான் துணையோனது. அன்று தொடக்கம் இன்றுவரை சிறீலங்காவின் அரசியலமைப்பு தமிழ் தேசியத்தினை ஒடுக்குவதற்காகத்தான் பயன்பட்டு வந்துள்ளது. அந்த அரசியல் அமைப்பினைத் தற்பொழுது கையாளும் பீரிஸ் தனது பங்கினை சிங்களப் பேரினவாதிகள் குறைகூறாதவண்ணம் செய்துகொண்டிருக்கின்றார்.

கடந்த 5 வருடங்களாக இனப்படுகொலை, பாலியல்வன்முறைகள், வகைதொகையற்ற கைதுகள், சித்திரவதை, சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள் ஆகிய தமது 'ஜனநாயக' அலகுகளை தமிழ்த் தேசியத்தின்மேல் பிரயோகித்துவரும் சந்திரிகா அரசு அதன் பிரதிபலனாக தனது மக்களுக்கு சமூக வன்முறைகளையும், இலஞ்சம் ஊழல் ஆகியவற்றினையும் வழங்கிவருகிறது. எனினும் மீண்டுமொருமுறை ஆட்சிக் கதிரையைத் தக்கவைத்துக்கொள்வதற்காக 'ஒரு மாதத்தில் சமாதானம் இல்லையேல் பதவி துறப்பு' என்ற சவடால் பேச்சுக்களையும் சந்திரிகா பல்லவியாகப் பாட ஆரம்பித்துள்ளா. சந்திரிகாவின் இந்த பல்லவிகளின் சுயரூபம் தமிழ் தேசியத்திற்கு ஒன்றும் புரியாத விடயமல்ல. சமாதானம் என்பது அடங்கிப்போதல் என்ற வியாக்கியானத்தைத் தமிழ்த் தேசியத்திற்கு சிங்களத் தேசம் கற்பிக்க முயலுமானால் அதன் விளைவுகளை அது அனுபவித்துத்தான் ஆகவேண்டும்.




நன்றி: 'தினக்குரல்'

# செம்மணிக் கொலையாளிகளின் 'கலர்புல்' விளக்கம்

## பார்வை

செம்மணி நாடகம் முடிவுக்கு வருவது போலுள்ளது. முன்னாள் சிங்கள இராணுவ வீரர்கள் கூறியது போல் செம்மணியில் எதுவித பாரிய இரகசிய புதைகுழிகளும் இல்லை என சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது. யாழ். சிங்கள நீதிமன்றத்தின் தமிழ் நீதவான் முன் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், 25 இடங்களை செம்மணியில் தோண்டிய போதும் 15 எலும்புக் கூடுகளே அகப்பட்டுள்ளதால் எதுவித பாரிய இரகசிய புதைகுழிகளும் இல்லை எனக் கூறி விசாரணைகள் முடிவுக்கு வருகின்றன. தமது நாடகத்திற்கு சாட்சியாக சில மேற்கத்தேய நிபுணர்களையும் பத்திரிகையாளர்களையும் செம்மணிக்கு கூட்டிச்சென்ற சந்திரிகா அரசு, பெரியதொரு படுகொலையை நீதிமன்றத்தின் துணையுடன் போலி விசாரணைகளால் திரையிட்டு மூடிவிட முயல்கின்றது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் இதே அறிவிப்பை இராணுவப் பேச்சாளரும் சில தினங்களுக்கு முன் விடுத்துள்ளார்.

இவ் விசாரணைகளை போலியானதும் இராணுவத்தைக் காப்பாற்ற நடப்பதுமாகும் என புலிகள் தெளிவாக இனம் காட்டியிருந்தனர்.

கொலைகாரர்களே கொலையை விசாரிக்கும் 'கொடூரத்தின் முடிவு' இது.

குறிப்பு: சிங்கள நாட்டின் சட்டமா அதிபராக கமலசபேசன் எனும் தமிழர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது சேவையையும் இனத்தையும் சிங்களம் பயன்படுத்தும் என நம்பலாம்.

★ ★ ★

அனுரா பண்டாரநாயக்காவால் முட்டாள் என விபரிக்கப்பட்ட கதிர்காமர் தன் முட்டாள்தனத்தையும் அரசியல் கயமைத்தனத்தையும் கொழும்பு செய்தி ஏடான The Sunday Times ற்கு அளித்த பேட்டியில் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஐ.நாவை தாக்கி அறிக்கைவிட்டு மாட்டிக் கொண்ட இவர், தற்போது தமது சிறீலங்கா விமானப்படையினர் புதுக்குடியிருப்பில் குண்டு வீசியதைப் பற்றி ஐ.நா. விமர்சிக்க முடியாது என புலம்பியுள்ளார்.

ஐ.நா. சபை மலேரியா தடுப்பு வேலையை பார்க்கட்டும் என தான் கூறியது ஐ.நா. எவ்வாறு சிறீலங்காவில் செயற்பட வேண்டும் என்பதை வர்ணணையாக (Colourful way) கூறும்விதம் எனவும், தம்மைக் கேட்காது ஐ.நா. பணிமனை அறிக்கைகள் விடக் கூடாது எனவும் அவர் கூறியுள்ளார்.

அம்பாறையில் சிங்களவர்கள் கொல்லப்பட்டதை ஐ.நா. கடுமையாக விமர்சிக்காமைக்கு என்ன காரணம் என கேள்வி கேட்டுள்ள அமைச்சர், அதற்குக் காரணம், அவர்களுக்கு எப்படி சரியான சமநிலையில் நிற்பது எனத் தெரியாது எனக் கூறியுள்ளார்.

சிறுவர்களை போரிற்கு புலிகள் பயன்படுத்துவதை ஐ.நா வின் மற்றுமொரு பிரிவான UNICEF கண்டிக்கவில்லை என கோபம் தெரிவித்துள்ள கதிர்காமர், புலிகளுடன் மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்துடன் பேசினால் அவர்களும் தாங்களும் சமனானவர்களாக மாறிவிடுவோம் என்பதால் மூன்றாம் தரப்பை நிராகரிப்பதாக கூறுகின்றார்.

சிங்கள பேரினவாதத்தின் பெரும் தூண்களில் ஒன்றான ஐ.தே.க. கூட மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்தை ஆதரிக்க முற்படும் போது, கூலிக்காக நீலனின் சிபார்சில் மந்திரியான கதிர்காமர் தமிழர்களும் சிங்களவர்களும் சமனாக இருக்க முடியாது எனக்கூறுவது 'பதவிபற்றிய அச்ச உணர்வினால்' ஆகும்.

புதுக்குடியிருப்பு சம்பவத்தை மூடி மறைப்பதற்கும் அம்பாறையில் சிங்களவர்கள் கொல்லப்பட்டதை வெளிச்சம் போடவும் உழைக்கும் சிங்கள அரசின் அமைச்சர்கள், போர்க்கள யதார்த்தத்தினால் தமிழர்களை மதிக்க வேண்டிய கட்டாயத்திற்கு கொண்டுசெல்லப்படுகின்றனர்.

ஒரு விடுதலைப் போரிற்குரிய பண்புகளுடன் தமிழர்கள் பலமடைந்து வருகின்றனர். மறுபுறம் உண்மையை ஏற்பதா இல்லையா என்ற இழுபறிகளுடன் சிங்களம் மேலும் மேலும் போருக்குள் புதையுண்டுள்ளது.

★ ★ ★

ஐ.நா. தாம் பணம் கொடுப்பதாகவும் இதனால் வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டும் எனவும் கதிர்காமர் விட்ட அறிக்கை கொழும்பில் இருக்கும் ஐ.நா. பணிமனையை கோபப்படுத்தியது.

சிறீலங்காவானது வருடாந்தம் ஐ.நாவின் அபிவிருத்தி திட்டத்திற்கு 1 மில்லியன் டொலர்களை வழங்குகின்றது. இதன் மூலம் மூன்றாம் உலக நாடுகளில் சிறீலங்காவே பிரதான நிதி வழங்குபவராக திகழ்ந்தது. ஆனால் உண்மை என்னவெனில், சிறீலங்கா ஐ.நாவின் பிற பிரிவுகள் மூலம் நிதி உதவிகளை வறுமைப்பட்ட நாடு என்ற பெயரில் பெறுகின்றது.

வழமைபோல பொய்யை வெட்கமின்றி கூறும் சந்திரிகாவும் அவரது வெளிவிவகார அமைச்சரும் அரை உண்மையைச் சொல்லி முழு உண்மையை மறைத்தால் எவருக்கு கோபம் வராது?

★ ★ ★

தீர்வுப்பொதிக்குப் பின் நீலனின் அடுத்த பிள்ளை எனக் கூறப்படும் சமவாய்ப்பு சட்ட மூலமும் வந்து போய்விட்டது. இதனை எதிர்த்து சிங்கள கல்விக் கூடங்களும், பௌத்த விகாரைகளும், அரசியல்வாதிகளும் விடுத்த அறிக்கை தமிழர்களை தமிழீழத்தின் மீது அதீத நம்பிக்கை கொள்ள வைக்கின்றது. தற்போது இதனை எதிர்த்து சிங்கள உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் சிங்களத்தின் முன்னாள் ஐ.நா தூதுவர் தலைமையிலான குழு வாதிடுகின்றது. தாம் சிங்கள நலனை காப்பவர்கள் என இவர்கள் கூறுகின்றனர். ஆனால் தமிழர் நலன்களை கேவலப்படுத்தும் இவ் சமவாய்ப்பு சட்ட மூலம் உலகையும் ஏமாற்ற கொண்டு வரப்பட்டதாகும்.

★ ★ ★

ஏன் தமிழ்ப் பெண்கள் கொழும்பில் சித்திரவதைக்கும் தொல்லைக்கும் ஆளாகுகின்றனர்?

ஏனெனில் பெண்கரும்புலிகள் இருப்பதாலேயே என ஒரு பதில் கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை தந்தவர்கள் இராணுவ பொலிஸ் பேச்சாளர்கள் அல்ல, பெண்கள் பற்றிய கொழும்பு ஆய்வுக் குழுவாகும்.

காலம் காலமாக தமிழ்ப்பெண்கள் சிங்கள பேரினவாதத்தால் சித்திரவதைக்கு உள்ளாகின்றனர் என்பதை இப் புத்திஜீவிக்குழு மறைத்து பெண்கள் கொழும்பில் சித்திரவதைப் படுவதற்குக் 'காரணம் கூறுவது', சிங்கள பேரினவாதத்தை பாதுகாக்கவாகும்.

- ராஜா

# கனடாவில் வெளிப்பட்ட G.L. பீரிசின் கூட்டாட்சி 'குட்டு'

அண்மையில் கனடா நாட்டில் 'உலக நாடுகளின் கூட்டாட்சி' என்ற கருப்பொருளில் மாநாடொன்று நடைபெற்றது. சிறீலங்கா உட்பட பல நாடுகளின் பிரதிநிதிகள் இம் மாநாட்டில் கலந்துகொண்டனர். சிறீலங்கா சார்பில் கலந்துகொண்ட அமைச்சர் G.L. பீரிஸ் மாநாட்டில் உரையாற்றும்போது கூட்டாட்சி, தமிழ் மக்களது பிரச்சினை ஆகியவை தொடர்பாக சில தந்திரமான பொய்யுரையினை மேற்கொண்டிருந்தார். பீரிஸ் அவர்களின் பொய்யுரைக்கு அதே மாநாட்டில் கலந்துகொண்ட பல பேராளர்கள் பதிலடி கொடுத்திருந்தனர்.

சென்னைப் பல்கலைக்கழக பொருளாதாரத்துறை பேராசிரியர் முனைவர் மு.நாகநாதன் அவர்கள் மாநாட்டின் விபரங்களை ஈழமுரசின் வாசகர்களுக்காக தொகுத்து வழங்குகிறார்.

கூட்டாட்சி இயல் முதல் உலக மாநாடு கியூபெக் (Quebec) மாநிலத்தில் உள்ள மோண்ட்டிரெம்பாயிண்ட் பகுதியில் ஒக்டோபர் 5-8 வரை நடைபெற்று முடிந்த இம்மாநாட்டில் கனடா நாட்டின் பிரதமர் ஜோன் கிரிட்ஷியன் (John Cretian) துவக்க உரையும், மெக்ஸிகோ நாட்டின் குடியரசுத் தலைவர் சிறப்புரையும் (5-ம் நாள் ஒக்டோபர்) நிகழ்த்தினார்கள். அமெரிக்க குடியரசுத்தலைவர் பில் கிளின்டன் (Bill Clinton) நிறைவுரை நிகழ்த்தினார். ஐரோப்பிய, ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளின் அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், அறிஞர்கள்,. பேராசிரியர்கள் பங்கு பற்றினர். கியூபெக் மாநிலத்தின் பிரதமர் புஷாட் அவர்களும் கலந்துகொண்டு, 7-ம் திகதி மாலை உரை நிகழ்த்தினார்கள்.

உலக நாடுகளில் இனம், மதம், மொழி, மற்றும் பண்பாட்டின் அடிப்படையில் ஏற்படும் சச்சரவுகளை ஜனநாயக அடிப்படையிலும், கூட்டாட்சி இயல் முறையிலும் எப்படி சுமூகமாகத் தீர்ப்பது என்ற கருத்தின் அடிப்படையில் விவாதங்கள் நடைபெற்றன. மாநிலங்களுக்கான பொருளாதார, சமூக, உரிமைகளை அரசியல் மட்டத்தின் அடிப்படையில் தீர்வு காணும் போது ஏற்படும் சிக்கல்களைப்



பற்றி மாநாடு ஆய்வு செய்தது. அரசியல் மட்ட வல்லுநர்கள் உரிமைகள் பாதுகாப்பது பற்றி ஆய்வுகளை நடத்தினார்கள்.

அண்மையில் யூகோசிலவாக்கியா நாட்டில் நடந்த இன, மதக் கலவரங்கள், இந்தோனேசியாவில் திமோரில் நடைபெற்ற பொதுமக்கள் வாக்கெடுப்பு,

**தொகுப்பு: இராசரத்தினம்**

அதன் தொடர்பாக நடைபெற்ற மோதல்கள், அயர்லாந்தில் தனி நாட்டிற்காக நடைபெற்றுவரும் நீண்ட, கொடிய போராட்டம் பற்றியும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. சில தினங்களில் மலரவிருக்கும் 21-ம் நூற்றாண்டில் இது போன்ற மத, இன கலவரங்களைத் தடுத்து, அமைதியான சூழலில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஏழ்மை, கல்லாமை, போன்ற பெரும்பான்மையான உலக மக்களின் பிரச்சினைகளை முன்நிறுத்த வேண்டும் என்ற கருத்தும் விவாதங்களில் மேலோங்கியிருந்தது.

மனித உரிமை, சமூக உரிமை, பொருளாதார உரிமை போன்ற உரிமைகள் நல்ல, அமைதியான சூழலில் 21-ம் நூற்றாண்டில் போற்றி வளர்க்கப்பட வேண்டும் என்று மாநாட்டில் பல அறிஞர்கள் வலியுறுத்தினார்கள்.

இம்மாநாட்டில் திடீரென்று, ஏற்கனவே அச்சடிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு மாறாக சிறீலங்கா அரசின் நீதித்துறை அமைச்சர் காமினி லக்ஷ்மன் பீரிஸ் கருத்தரங்கில் உரை நிகழ்த்தினார். கருத்தரங்கின் தலைப்பு, 'கூட்டாட்சி இயல்பின் புதிய நோக்கம்' என்பதாகும்.

ஒக்டோபர் 7-ம் நாள் காலை 8.30 மணிக்கு துவக்கப்பட்ட இந்த நிகழ்ச்சியில் எதிர்பாராத, சுவையான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. எடுத்த எடுப்பிலேயே பீரிஸ், சிறீலங்கா அரசு கூட்டாட்சி அரசியல் சட்டத்தைக் கடைப்பிடிக்கவில்லை என்றும், ஒற்றையாட்சி முறையே பின்பற்றப்படுவதாகவும் கூறினார். மக்கள் கூட்டாட்சி இயலை ஏற்றுக்கொள்வதற்கு இன்னும் பக்குவப்படவில்லை என்றும், பக்குவப்படுத்தப்படவும் இல்லை என்ற விநோதமான கருத்தை வைத்தார். தமிழர்களும் சிங்களவரும் வரலாற்று அடிப்படையில் தனித்தன்மையோடு பிரிந்து வாழ்ந்தது இல்லை என்றும், இஸ்லாமிய சமூகத்தவர் போன்று தமிழர்களும் சிறுபான்மை பகுதியினர் என்றும், வடக்கு, கிழக்கு மாநிலங்களாகப் பிரித்து, கூட்டாட்சி அமை-ப்பை ஏற்படுத்த இயலாது என்றும் கூறினார்.

கனடா, இந்தியா போன்ற நாடுகளில் உள்ள இனப் பிரச்சினைகள் போன்றுதான் சிறீலங்காவிலும் இப் பிரச்சினைக்கு அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப் படுகின்றன எனக் கூறினார். மாநாட்டில் கலந்துகொண்ட பெரும்பாலான அறிஞர்கள் பீரிஸ் தந்திரமாக அவிழ்த்துவிட்ட 'கதைகளை' நகைச்சுவையோடு கேட்டுக்கொண்டிருந்தனர். பீரிஸ் பேச்சு முடிந்தவுடன் கனடா, ஆபிரிக்கா நாட்டின் அறிஞர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இந்த அறிஞர்கள் கூறிய கூற்றையும், மாலையில் கியூபெக் பிரதமர் பேசிய பேச்சையும் கேட்டபோது, கனடா நாட்டில் முழுமையான ஜனநாயகக் கூட்டாட்சி உணர்வு எப்படிப் போற்றப்படுகின்றது, மதிக்கப்படுகின்றது; இலங்கையில் எப்படி மிதிக்கப்படுகின்றது என்பதைப் பலர் உணர்ந்து பீரிஸின் பொய்யுரையைப் பற்றி நன்றாக உணர்ந்துகொண்டனர்.

> *இன மோதல்களை தவிர்ப்பதற்காகத்தான் கொசோவோ, இந்தோனேசியாவில் திமோர் பிரச்சினைகளில் அமெரிக்காவும், ஐக்கிய நாடுகளின் (UN) அமைப்பும் தலையிட்டதாகவும் கூட்டாட்சி இயல், இன, மத, மொழி வேறுபாடுகளுக்குச் சரியான தீர்வாயிருக்கும் என்றும், இதையும் மீறி மோதல் ஏற்பட்டால் பிரிவினை என்பது கூட தவறில்லை என்றும் கிளின்டன் கூறினார்.*

சிறீலங்காவில் இன ஒடுக்கல் நடைபெறுகின்றது என்றும், அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றனர் என்றும் பீரிஸ் தெரிவித்த ஒற்றையாட்சி முறையில் அதிகாரங்களை பரவலாக்கல் கொள்கை சரியான தீர்வாகாது என்றும் கூறினர்.

இந்தக் கருத்தரங்கில் சிறப்புரையாற்றிய நைஜீரியா நாட்டைச் சார்ந்த, நோபல் பரிசு பெற்ற (1986-ம் ஆண்டிற்கான இலக்கியப் பரிசைப் பெற்றவர்) வோல் சோயிங்கா (Wole Soyinka) ஒற்றையாட்சி முறை இன, மத, அடிப்படையில் உருவாகும் மோதல்களுக்குத் தீர்வாயிருக்க முடியாது என்றும், சிறீலங்கா மற்றும் பலநாடுகளின் பகுதிகளில் நடைபெறும் இன ஒடுக்கல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று கூறி, முழுமையான கூட்டாட்சி (Confederation) அமைப்புத்தான் சரியான தீர்வாக அமையும் என்றார். பீரிஸ் எடுத்து வைத்த பொய்யான, சொத்தையான கருத்துக்கோர்வை தவிடுபொடியானது. உலகில் உள்ள பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் தமிழ் இன ஒடுக்கலைப் பற்றி அறிந்து, உண்மை நிலை எடுத்து இயம்பியது ஆறுதலான செய்தியாகும்.

7-ம் திகதி மாலை மாநாட்டில் கியூபெக் பிரதமர் புஷாட் அவர்கள் பேசியபோது, கியூபெக் பிரச்சினைக்குத் தீர்வு, பிரிவினைதான் என்று வலியுறுத்திப் பேசினார். உண்மையான கூட்டாட்சி முறை கனடா நாட்டில் கடைப்பிடிக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார். காலையில், பீரிஸ்

8-ம் திகதி மாலை நிறைவு உரையாற்றிய அமெரிக்க குடியரசுத் தலைவர் கிளின்டன், அறிவியலில் சாதனைகளை உணர்ந்து வரும் உலகில் இன, மத, மொழி அடிப்படையான மோதல்கள் அறவே தவிர்க்கப்பட வேண்டும் என்றார். இன மோதல்களை தவிர்ப்பதற்காகத்தான் கொசோவோ, இந்தோனேசியாவில் திமோர் பிரச்சினைகளில் அமெரிக்காவும், ஐக்கிய நாடுகளின் (UN) அமைப்பும் தலையிட்டதாகவும் கூறினார். கூட்டாட்சி இயல், இன, மத, மொழி வேறுபாடுகளுக்குச் சரியான தீர்வாயிருக்கும் என்றும், இதையும் மீறி மோதல் ஏற்பட்டால் பிரிவினை என்பது கூட தவறில்லை என்றும் கூறினார்.

உலகில் முக்கிய தலைவர்கள் கூட்டாட்சி இயலைப் பற்றி வலியுறுத்தி, இன,மத, மொழி உரிமைகளைப் பாதுகாத்து மனித நெறிகளைப் போற்றுவோம் என்று உரை நிகழ்த்தியபோது, பீரிசின் பேச்சு, சிறீலங்கா அரசின் தமிழ் இன ஒடுக்கல் நடவடிக்கைகளை மறைப்பதற்காகத் திட்டமிட்டு நடத்தப்பட்ட நாடகமாயிருந்தது.

கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் வெளிப்பட்டுவிடும் என்பது தமிழ் முதுமொழி. ஆனால் மோண்ட் - டிரெம்பாயின்ட்டில் நடைபெற்ற மாநாட்டில் பீரிஸின் புளுகு எட்டு மணித்துளிகளில் உடைபட்டுப் போனது. உண்மை என்றுமே வெல்லும். எனவே ஈழமக்களின் உரிமைகளும் வெல்வது உறுதி! உறுதி!


**சுவிஸ் வாழ் தமிழ் மக்களே!**

சிறீலங்காவில் உள்ள தேவையான உங்கள் ஆவணங்கள் சம்பந்தமான அலுவல்களை செய்ய பெற்றுத்தர உறுதியான முகவர் சேவை இங்கும்!

* பிறப்பு / இறப்பு பதிவு ஆவணங்களை பெற்றுத்தர
* திருமணப் பதிவு, திருமணமாகாத சான்றுப் பத்திரம்
* அடையாள அட்டை தொலைந்த / புதிதாக எடுக்க
* உறவினர்களை அழைப்பதற்கான சிறீலங்காவில் சுவிஸ் தூதரக ஆவண ஏற்பாடுகள் (இலங்கையில்)
* கடவுச்சீட்டு பெறத் தேவையான ஒழுங்குகள்

மற்றும் இவை சம்பந்தமான பலசேவைகளை (விரும்பினால் சுவிஸ் தூதரக உறுதிச்சான்றுடன்) வழங்க காத்திருக்கின்றோம்

* தொடர்புக்கு (சுவிஸ்) 076-5450938 ராம்

திங்கள் - வெள்ளிக்கிழமைகளின் 14h - 17h30 - வரையும் சனி ஞாயிறு 24 மணி நேரமும்

sw 23043



ஜேர்மனி பொன் (Bonn) நகரில்

**யாழ் ரவல்ஸ்**

**YARL TRAVELS**

*Thomas Mann Str 21,53111 Bonn*

**உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்**

*பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்*

**சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.**

தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652985

GE-Pub.

# இன்றைய சினிமாவினால் மக்கள் கெட்டுப்போகின்றார்கள்

## — லெனின்

'கலைஞன் வியாபாரியாகும்போது தோற்றுப்போய் விடுகிறான்'. சினிமாவை நிறையப் பேர், இது பணம் போட்டுப் பணம் எடுக்கும் தொழில் என்கிறார்கள். பணம் அத்தியாவசியம்தான். பணமே சினிமாவில் பிரதானமாகிவிடாது. கொஞ்சமாவது கலையும் முக்கியம். 'கலையெல்லாம், கதையெல்லாம் வேண்டாம், காசுதான் குவிப்பேன், ஏனெனில் பணம் பத்தும் செய்யும்' என்பவர்களுக்குச் 'சொல்வேன்' பணம் உன்னை அழிக்கவும் செய்யும்.' என்று கூறும் பி.லெனின் இன்றைய தமிழ் சினிமாவின் முக்கிய படத் தொகுப்பாளர். இவர் இன்றைய திரையுலகுபற்றி மனந்திறக்கிறார்.



★ **இன்றைய சினிமாச் சூழல் எப்படியிருக்கிறது?**

மோசமாக, ரொம்ப மோசமாக, இன்றைய சினிமாவில் பங்களிக்கும் கலைஞர்களுக்குப் பணமே பிரதானம். இவர்களுக்கு எவ்விதமான சமூக பொறுப்புணர்வும் இல்லை. சமூகப் பொறுப்புணர்வு இருக்கட்டும். தாங்கள் செய்யும் தொழிலில்கூட பொறுப்புணர்வு இல்லை. நிறைய விரயம் செய்கிறார்கள். ஒரு காட்சியை, எதற்காக எடுக்கிறோம் என்று தெரியாமல் எடுக்கிறார்கள். படப் பிடிப்பிற்குரிய இந்த ஃபிலிம் எப்படி உருவாகிறது, இதை வெளிநாட்டில் இருந்து தருவிக்க நம் அரசு எவ்வளவு தங்கம் செலுத்துகிறது, துணி ஏற்றுமதி செய்கிறது என்பதெல்லாம் இவர்களுக்குத் தெரியுமா? சினிமாவால்தானே அரசுக்கு நிறைய வரி கிடைக்கிறது என்பார்கள். இவர்கள் தரும் காகித ரூபாய்க்கு அன்னிய நாட்டில் என்ன மரியாதை இருக்கிறது? 13 ஆயிரம் அடி படத்திற்கு எழுபதாயிரம் அடி, 150 ஆயிரம் அடி எல்லாம் எடுத்துத் தள்ளுகிறார்கள். முப்பதாயிரம் அடி எடுத்தால்போதும். இந்த அநியாயம், அசட்டுத்தனம், பெரிய நடிகர்கள், பெரிய இயக்குநர்கள், பல பெரிய... பெரிய... பெரிய... வர்கள் சம்பந்தப்பட்ட படத்தில் தான் நடக்கிறது. எனக்கொரு சந்தேகம், தொழில் தெரிந்த கலைஞனென்றால், கைதேர்ந்த கலைஞன் என்றால் ஏன் இத்தனை மடங்கு ஃபிலிமை வீணடிக்க வேண்டும்? நூறு பேர் சாப்பிடும் விருந்துக்கு, ஐநூறு பேருக்கான உணவுப் பொருளைக் கொண்டா உணவு தயாரிக்கிறார் சமையல் கலைஞர்? திட்டமில்லாமல் ஃபிலிமை வீணடிக்கிறார்கள் என்றால், இந்தப் பெரிய கலைஞர்களுக்குக் கலை கைவரவில்லை என்றுதானே அர்த்தம்? விரயத்திற்கு இவர்கள் சொல்லும் விளக்கம், 'கலைக்கு எல்லை இல்லை' என்பது. இவர்கள் கூறும் கலைக்கு எப்படி எல்லை இல்லையோ அப்படியே இவர்கள் செய்யும் விரயத்திற்கும் எல்லை இல்லை. நீ என்னதான் கற்பனை செய்தாலும் அது ஒரு வட்டத்திற்குள் அடங்க வேண்டாமா? 'ஒரு சினிமா இரண்டு மேஜைகளில் உருவாகிறது' என்பார் சத்யஜித்ரே. ஒன்று எழுத்தாளனின் மேசை. இன்னொன்று படத்தொகுப்பாளரின் மேசை. முதலில் எழுத்தாளன் ஒரு படத்திற்குரிய திரைக்கதை, வசனத்தை முழுமையாக எழுதி முடித்த பின்தான் 'செல்லுலாய்டு'க்குச் செல்லவேண்டும். நாம் எழுத்தாளர்களை மதிப்பதில்லை. இயக்குநரே எல்லாம் செய்து கொள்வார். விசயமுள்ள பிறரைப் பயன்படுத்திக்கொள்ளும் எண்ணமெல்லாம் கிடையாது. நடிகனைச்சுற்றி, நடிகனின் விருப்பத்தைச் சுற்றியே இவர்கள் இயங்குவதால்தான் இவர்கள் ஆபாசத்தின் உச்சிக்குப் போனாலும்கூட, இவர்கள் சரக்கு மக்கள் மத்தியில் போகமாட்டேனென்கிறது.

★ **தமிழ் சினிமாவில் புதிய புதிய தொழில் நுட்பங்களும், புதிய புதிய மாற்றங்களும் அரங்கேறி வருவதாகக் கூறுவது பற்றி?**

என்ன மாற்றம் நிகழ்ந்துவிட்டது? இங்கு சாதாரண 'மூவியாலா' இருந்த இடத்தில், இன்று அதி நவீனமான 'ஸ்டீன்பெக்' என்ற எடிட்டிங் இயந்திரம் வந்திருக்கிறது. கருத்து வந்திருக்கிறதா? புதுசு புதுசாய் கதை வந்திருக்கிறதா? புதுப்புது தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதாய் பறைசாற்றிக்கொள்கிறார்களே- இவர்கள் என்ன தொழில் நுட்பத்தை அமுல்ப்படுத்திவிட்டார்கள். டெக்னிக் இரண்டாம் பட்சம்தான். விஷயமே முக்கியம். ஒரு இயக்குநர் செய்யும் புதுமை அந்தப் படத்தின் படத்தொகுப்பாளருக்கே புரியாதபோது மக்களுக்கு மட்டும் எப்படிப் புரியும்? சென்சார் கண்ணில் மண்ணைத் தூவி எப்படி ஆபாசத்தை வாரித் தெளிக்கலாம், கொலை செய்வதை எப்படி புதுசு புதுசாகச் சொல்லலாம் என்பதற்குத்தான் இந்த தொழில் நுட்பங்கள் பயன்படுகின்றன. நல்ல படம் எடுப்பவர்களுக்கு இந்த தொழில் நுட்பங்கள் எட்டாக்கனியாகவே இருக்கின்றன. ஆனால் சமூகத்தை சர்வநாசம் செய்யும் படங்களுக்கே கிடைக்கின்றன.

★ **இந்த இறுக்கமான சூழலுக்குக் காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்?**

நம் சினிமா கலைஞர்களும், நடிகர்களும்தான். இந்த கலைஞர்கள் தங்கள் வீட்டுக் குழந்தைகளுக்கு நல்ல இலக்கியத்தைப் படிக்கத் தருவார்கள். நல்ல படத்தைக் காட்டுவார்கள். மக்களுக்கு மட்டும் குப்பையைக் கொடுப்பார்கள். கேட்டால், 'மக்களுக்கு இதெல்லாம் புரியாது' என்பார்கள். 'கேரளத்திலும், வங்காளத்திலும் நல்ல சினிமா ஓடுகிறதே, அதுபோல் நாமும் முயற்சிக்கலாமே' என்றால் 'அந்த மாநில மக்களின் ரசனையே வேறு. மேலும் அங்கு மக்களில் பெரும்பான்மையானோர் கல்வி அறிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள்.' என்று காரணம் காட்டுவார்கள். இதெல்லாம் வெறும் சாக்கு, பொய். உதிரிப்பூக்கள் இங்கு ஓடவில்லையா? புதுமைப்பித்தன் கதையை மக்கள் புரிந்து கொள்ளவில்லையா? பார்வையால் யாரை வேண்டுமானாலும் ஈர்க்கலாம். நாம கொடுக்கல. இருபது வருடமாக தொடர்ந்து எம்.எஸ். விஸ்வநாதனின் இசையைக் கேட்டு வந்த மக்கள், ஒரு வித்தியாசமான 'சவுண்டைத்' தந்த இளையராஜாவின் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளவில்லையா? நிறைய் படங்கள் இன்று அடிபடக் காரணம், நடிகர்களின் மாயையும், சாதிப்பதற்காக வந்த இளைஞர்கள், எதற்காக வந்தோம் என்பதையே மறந்துவிட்டதும்தான். இவர்களுக்கு ஆசை இருக்கிற அளவிற்கு உழைப்பு இல்லை என்பதுதான் உண்மை. கலைஞன் கலைஞனாக இருக்க வேண்டும். இப்போதெல்லாம் ஓர் இளம் இயக்குநரின் முதல் படம் வெற்றி பெற்றதும், உடனே நம்மால் ஏன் பிறர் லாபம் சம்பாதிக்க வேண்டும் என்றும் அவ்வளவும் முழுசாய் தனக்கே வேண்டும் என்றும் சொந்தப் படம் ஆரம்பிக்கிறார்கள். கலைஞன் வியாபாரியாகும்போது தோற்றுவிடுகிறான்.

மோசமான படங்களைக்கொடுத்து அவன் காசையும் பறித்து அவன் சிந்தனையை மழுங்கடிக்கும் இந்த சூப்பர் ஸ்டார்கள், மறுபக்கம் தங்கள் பிறந்த நாளுக்குப் பிச்சைச் சோறு போடுகிறார்கள். வேட்டி, சட்டை தருகிறார்கள். சாமியார்களுக்கு மடம் கட்டுகிறார்கள். தையல் மிஷின் தருகிறார்கள்.

இன்றுள்ள நடிகர்களோ— இயக்குநர்களோ, 'தாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு திரையுலகில் நுழைந்திருக்கிறோம். நாங்கள் சம்பாதிக்க வேண்டும்' எங்களைச் சாதனை பண்ணச் சொல்லலாமா?' என்று கேட்கிறார்கள்.

அன்று சாதனை புரிந்த பல கலைஞர்களும் முட்களைக் கடந்து வந்தவர்கள்தான். நேஷனல் ஸ்ரூடியோ பெருமாள் ஏற்றுக்கொண்ட சிவாஜியை, முதலில் ஏ.வி. எம், செட்டியார் ஏற்றுக் கொள்ளவில்லை. ஹேமமாலினி, ஸ்ரீதரால் புறக்கணிக்கப்பட்டவர்தான். இந்தி நட்சத்திரம் ரேகாவை ஏற்கவில்லை என் தந்தை பீம்சிங்.

இன்றைய சினிமாவினால்தான் மக்கள் கெட்டுப் போகிறார்கள்.. முன்பு நல்ல படங்களைப் பார்த்து மிகவும் மென்மையானவனாக இருந்த நான், இப்போது தொடர்ந்து வன்முறைப் படங்களுக்கு வேலை செய்து... வேலை செய்த அந்த வன்முறை என்னையும் பற்றிக் கொண்டது. நாடு நடிகர்களின் பின்னால் போய்க்கொண்டிருக்கிறது. இளைஞர்கள் ரசிகர் மன்றைத்தட்டி எழுதிக்கொண்டிருக்கிறார்கள். மோசமான படங்களைக்கொடுத்து அவன் காசையும் பறித்து அவன் சிந்தனையை மழுங்கடிக்கும் இந்த சூப்பர் ஸ்டார்கள், மறுபக்கம் தங்கள் பிறந்த நாளுக்குப் பிச்சைச் சோறு போடுகிறார்கள். வேட்டி, சட்டை தருகிறார்கள். சாமியார்களுக்கு மடம் கட்டுகிறார்கள். தையல் மிஷின் தருகிறார்கள். அப்பாவி இளைஞர்களோ இவர்களுக்கு புகழ் சேர்ப்பதற்காக கண்தானம், ரத்த தானம் செய்து சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மக்களை சுரண்டிக் கொண்டே, மறுபக்கம் சத்துணவு போடுகிற மாதிரித்தான் இது. இந்த விஷம் எத்தனை பரம்பரைக்கு பாயப்போகிறதோ?



★ **சினிமாவை இவ்வளவு கடுமையாக விமர்சிக்கும் நீங்கள், இந்த மோசமான சூழலுக்கு மாற்றாக என்ன செய்யப் போகிறீர்கள்?**

சினிமாவில் வித்தியாசமான முயற்சிகள் செய்ய இன்னும் கொஞ்சம் நாளாகும். இப்போது இது வீடியோவில்தான் சாத்தியம். மக்களுக்கு பயன்படும் விதமாய் சில கதைகளை, கருத்துக்களை வீடியோவிலும், சில சிறு படங்களை சினிமாவிலும் எடுத்து கிராமம் கிராமமாய் சென்று போட்டுக் காட்டும் திட்டம் வைத்துள்ளேன். யாரிடம் மேன்மையான விஷயங்கள் போய்ச் சேராது என்று இவர்கள் சொல்லி வருகிறார்களோ அவர்களிடம் என் விஷயத்தைக்கொண்டு செல்வேன். சாப்பாடு, அதை மக்கள் தருவார்கள். என் தாகத்தை மக்கள் தணிப்பார்கள்.

*நன்றி: சுபமங்களா*




# வாழ்க்கையைத் தேடி

திறந்திருந்த சாளரத்தினூடு மெல்லிய குளிர்காற்று அந்த அறைக்குள் மெல்ல நுழைந்தது. சந்திரன் இழுத்து மூடிய போர்வைக்குள் குறுகி முகத்தை மட்டும் வெளிக்காட்டிக் கொண்டிருந்தான். உறக்கம் கலைந்து இரவின் அந்த மங்கிய வெளிச்சத்தில் பார்வையை வெறுமனே எங்கெங்கோ ஒரு நிலையின்றி ஓடவிட்டிருந்தான்.

அந்த அமைதியான அறைக்குள் கடிகாரத்தின் ஒரே சீரான 'டிக் டிக்' சத்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. நீண்டநேரமாக அதே ஒலி. சந்திரனும் அப்படியே கிடந்தான். அவனால் எதையும் சிந்திக்கவும் முடியவில்லை. செயல் படவும் முடியவில்லை. உறக்கமற்றுக் கிடந்தாலும் உழராமல் அப்படியே கிடந்தான்.

என்ன செய்வது? எதைச் செய்வது? எப்படிச் செய்வது? 'என்று ஒன்றும் புரியாதவனாய் தன் வாழ்க்கையின் அடுத்த கட்ட நகர்வு எப்படியிருக்கும் என்பதைக்கூட அவனால் தீர்மானிக்க முடியவில்லை. இந்தப் பரந்துபட்ட உலகில் அவனுக்கு நிம்மதியாக இருக்க ஒரு இடமில்லை என்பதுதான் அவனுக்கு இப்போது தெளிவாகப் புரிந்த உண்மை. இன்றைய மாலைவரை, ஏன் படுக்கைக்குப்போகும் வரைகூட எங்கெங்கோ அலைந்தான். யார் யாரிடமோ உதவிகள் கேட்டான் அறிவுரைகளைக் கேட்டான். நியாயங்களை, தர்மங்களை இன்னும் என்னென்னவோவெல்லாம் கேட்டான். முடிவு நடப்பது நடக்கட்டும் என்ற நிலைக்குத் தள்ளி இப்படி அமைதிக்குள் ஆழ்த்திவிட்டது.

கடிகாரத்தின் இடைவிடாத ஓட்டத்தில் விடியல் வருவதற்கான நேரம் வந்து கொண்டிருந்தது. சந்திரன் எழுந்தான். எவ்வளவு நேரம்தான் இப்படியே கிடப்பது! நன்கு கைகளையும் உடலையும் வளைத்து முறிவெடுத்தான். இடுப்பிலிருந்து சாரம் வழுகிவிழ சட்டென சாரத்தைப் பிடித்து அள்ளிக்கட்டிக்கொண்டான். அவனுக்குள்ளேயே ஒரு சிரிப்பு. நகுலன் இப்போதிருந்திருந்தால் ஆகா ஓகோ என்று சிரித்து இப்படித்தான் அங்கொருக்கா... என்று தொடங்கி ஒரு துணைக் கதையும் சொல்ல ஆரம்பித்திருப்பான்...

பாவம் நகுலன் வெலிக்கடைச் சிறையில் என்னபாடு பட்டுக்கொண்டிருக்கிறானோ? சட்டெனச் சந்திரனுக்கு நகுலனின் நினைவு நெஞ்சைத் தொட அவனது கட்டில் பக்கம் திரும்பினான். வெறுமையான அந்தக் கட்டிலை ஒழுங்குபடுத்தி அழகான துணியொன்று விரித்துவைத்திருந்தான் அவன்.

நகுலன் மனித நேயமுள்ளவன். யாரையும் சட்டெனக் குற்றம் சொல்லமாட்டான். தவறு செய்தவனையும் சிரிக்க வைத்து, சிந்திக்கவைத்துவிடும் அருமையானவன்.

சந்திரனின் மனதில் இனம்புரியாத ஒரு வலி. 'அவன் என்ன பாவம் செய்தான்? இவங்கள் நாட்டவிட்டுப் போ எண்டு பிடிச்சனுப்ப, அவர்கள் பிடிச்சு அங்கை சிறையில போட்டிருக்கிறாங்களே. இதென்ன கொடுமையப்பா.' நெடுகச் சிரிச்சுக்கொண்டிருப்பான். இப்ப எப்படி அழுது கொண்டிருக்கிறானோ? வேதனை நிறைந்து வந்த ஒரு பெருமூச்சோடு யன்னலை மிக மெதுவாகத் திறந்தான் சந்திரன்.

அந்தக் காலைப் பொழுதை குயில்களின் இனிய குரல்களோ சிட்டுக்குருவிகளின் சங்கீத பாசையோ அல்லது ஏனைய பறவைகளின், வீட்டுமிருகங்களின் குரல்களோ ஆரவாரித்து ஆனந்தத்துடன் வரவேற்பதாய் அவனுக்குத் தெரியவில்லை. அடிவானத்தில் மெல்ல எழும் விடிவெள்ளியைக்கூட காண முடியவில்லை. மொத்தத்தில் அது ஒரு காலைப்பொழுதாக அவனுக்குத் தெரியவில்லை.

நிலம் வெளிக்குமுன் சதங்கை சத்தங்களுடன் ஓடும் வண்டில்கள் 'கய் கய்' என மாடுகளுக்கு உசார் ஊட்டும் கமக்காரர்கள் இதுபோல் இன்னும் எத்தனை அற்புதமான செயல்கள் அந்தக் காலைப்பொழுது நிகழும். சந்திரனுக்கு உடல் ஒருமுறை கூசிச் சிலிர்த்தது. அந்தக் காலைப்பொழுதைத்தான் தொலைத்ததுபோல் தன் தேசமும் இப்பொழுது தொலைந்துவிட்டதை எண்ண அவனுக்குள் ஒரு குற்ற உணர்வு நெஞ்சை அடைத்தது.

ஊரில் சந்திரனின் உற்ற நண்பன் நிரஞ்சன். அவர்களது நட்பு ஒரு அற்புதமான நட்பாக, இப்படியும் நண்பர்களா என அறிந்தவர்களை அதிசயிக்க வைக்கும் ஆழமான நட்பாக இருந்தது. நிரஞ்சன் அதிகம் பேசமாட்டான் தனக்கு தேவையற்றவிடயங்களில் ஒருபோதும் தலையிடமாட்டான்.

அந்த நண்பர்களிடையே நாட்களின் நகர்வு சில மாறுபாடுகளை ஏற்படுத்தத் தொடங்கியது. வழமையாகவே அதிகம் பேசாத நிரஞ்சன் இன்னும் சில சமயங்களில் மௌனமாகவே இருப்பான். அவனது மௌனத்தின் பொருள் சந்திரனுக்கு புரிவதில்லை. பல சந்தர்ப்பங்களில் அவனைக்காணவே முடியாது எங்கோ போய்விடுவான். ஆனால் அவன் எங்கு போகிறான் என்ன செய்கிறான் என்பதும் யாருக்கும் தெரிவதில்லை.



நல்ல நண்பனாக இருக்கும் சந்திரனுக்குக்கூட நிரஞ்சனின் போக்குப் புரியவில்லை. ஒருநாள் சந்திரன் நிரஞ்சனிடம் அவனது மாற்றத்தைப் பற்றிக் கேட்டேவிட்டான். அப்போது நிரஞ்சன் அமைதியாகக் கூறினான்.' மச்சான் நானிப்பதான்ரா தெளிவா இருக்கிறன். வீட்டிலகூட நான் எங்கேயோ போறன் வாறன் எண்டு எல்லாரும் திட்டுகினம். விசித்திரமா பாக்கினம். நான் அவையளுக்கு ஒண்டுமே சொல்லேல்ல. ஆனா உனக்கு மட்டும் ஒண்டு சொல்லுறன். இப்போதைக்கு ஆரிட்டையும் சொல்லிப்போடாத நான் போனப், பேந்து ஆருக்கும் சொல்லுறதெண்டாச் சொல்லு.' என்று நிரஞ்சன் நிறுத்தியதும் சந்திரனுக்குச் சட்டென விளங்கிவிட்டது. 'மச்சான் இயக்கத்துக்குப் போகப் போறியே?' ஆவலோடு கேட்டான் சந்திரன். நிரஞ்சன் மௌனமாய் தலையை மட்டும் ஆட்டினான்.

சந்திரனால் சட்டென எதுவுமே கூறமுடியவில்லை. அவர்களிடையே சிறிது நேரம் மௌனம்தான் பேசியது. 'மச்சான்...' சந்திரன் எதையோ சொல்ல முயன்று வார்த்தைகளைத் தொலைத்து விட்டவன் போல் மீண்டும் மௌனமானான். அவர்களது மௌனத்தை, வானில் பேரிரைச்சலுடன் தாழப்பறந்த ஒரு உலங்கு வானூர்தி துரத்தி அண்ணாரவைத்தது.

'டேய் மச்சான் சுத்துறானடா உதுக்க எங்கயோ அடிக்கப்போறான் வா எங்கேயேலும் மறைவம்.' நிரஞ்சன் சந்திரனை இழுத்துக்கொண்டு அருகிலிருந்த பனங்கூடலுக்குள் பாய்ந்தான்.

அவர்கள் பாய்ந்து மறைவதுக்குள்' சடசடவெனக்' குண்டுகளைப் பொழிந்தது அந்த உலங்கு வானூர்தி. வீதியில் போய் வந்துகொண்டிருந்த மக்கள் சிதறி அல்லோலப் பட்டுக் காணும் இடங்களுக்குள் பாய்ந்து தலைகளை மறைக்க முயன்றனர். அந்த திடீர் தாக்குதலைச் சற்றும் எதிர் பாராத வயோதிபர்களும் தனித்து நின்ற சிறுவர்களும் திக்கு முக்காடி இடுங்கிப்போயினர்.

ஒருசில நிமிடங்களில் பெரும் பூகம்பம் நடந்தது போன்ற பிரமை எல்லோரிலும், அந்தப் பிரமையை அமைதியாய் அடங்கிப்போன அந்தச் சூழலை மெல்ல மெல்ல ஈனத்தில் எழுந்த அழுகுரல்களும், சிதறிய பின் தேடிய உறவுகளின் புலம்பல்களும், எங்கெங்கிருந்தோ அவ்விடம் தன் தந்தையை, தாயை, பிள்ளையை என தம் உறவுகளைத் தேடி எதையும் ஊகிக்க முடியாது, ஐயைய்யோ என ஓங்கி ஓலமிடும் மனதை கைகளால் அழுத்திப்பிடித்துக்கொண்டு ஓடிவரும் உறவுகளாலும் துயரத்தின்பிடி ஆழமாய் பெரும் சோகமாய் இறுகப்பற்றியது.

காயம் பட்டவர்கள், கை, கால்களை இழந்தவர்கள் ஒருபுறம் தலையை இழந்தவர்களும். சாவை சற்றும் எதிர்பாராத பலர் காரணமின்றி சடலமாகிக் கிடந்தவர்கள் மறுபுறமுமாய் எங்கும் இரத்தக்கறை, இழப்புகளின் எதிரொலி, அழுகை, ஒப்பாரி ஓலம்... அப்பகுதியை கொடூரமாக்கியிருந்தார்கள் கயவர்கள்.

நிரஞ்சனும், சந்திரனும் தாம் தப்பியிருப்பதை நிதானித்துக்கொள்ள சிலகணங்களானது. அவர்களால் எதையும் பேசிக்கொள்ள முடியவில்லை. இருவரும் எழுந்து ஓடினர். சாவுக்குள் அகப்படாதவர்கள். குமுறும் தம் இதயங்களை மௌனமாக்கிக்கொண்டு மனித நேயத்தில் சுழன்றனர். அந்த நண்பர்களும் ஓடி அவர்களோடு சேர்ந்துகொண்டனர்.

நேரம் மெல்ல நகர்ந்தது. 'அம்மா இனி இதிலையிருந்து அழாதைங்கோ. அறுவான் திரும்பி வந்தானெண்டா எல்லாரும் போகவேணும். இனியென்ன செய்யிறது?... மெல்ல எழும்புங்கோ. தம்பியவ இஞ்ச வாங்கோ கிடக்கிற இரத்தத்துக்கு மண்ணை அள்ளிப்போட்டு மூடிவிடுங்கோ.

'அக்கா அவர ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயாச்சுது. அவருக்கு பெருசா காயமில்லை நீங்க வீட்ட போங்கோ சபாபதியண்ணர்ர வண்டில்லதான் போனவர் அவரே கொண்டு வந்துவிடுவார்.' 'இடுப்பில் குழந்தையோடு அப்படியே இடிந்து போய் நின்றவளுக்கு ஒரு சோதரன் அன்போடு கூறியது அவளுக்குக் கேட்கவில்லை. அவளால் அசைய முடியவில்லை. உணர்வுகள் செத்துவிட்டது போலும். 'ஐயோ கடவுளே ஒண்டுமறியா என்ர பிஞ்சின்ற கால ஓடிச்சுப்போட்டாங்களே... அம்மாளாச்சி அந்த பாவியள சும்மா விடாத. அவங்கட கண் அவிஞ்சுபோக போற வழியில கெடுவந்து சாக... ஐயய்யோ என்ர பிள்ளய ஊனமாக்கிப் போட்டாங்களே.' கண்ணீரால் நனைந்து கொண்டிருந்த அந்தத் தாயை யாராலும் ஆறுதல் படுத்த முடியவில்லை. அவர் அழுது கொண்டேயிருந்தார்.

சந்திரன் கண்களைத் துடைத்துக் கொண்டான். அவன் மனக்கண்ணில் பதிந்து போன இதுபோன்ற பல நிகழ்ச்சிகள் அழுகையாலும் குருதியாலும் சிதறிய தலைகளாலும் பிணைந்து கிடந்தது. மனம் வலித்தது. கண்களை மூடி மௌனமாய் அழுதான். கண்ணீருக்கு எதுவித தடையும் அவனால் விதிக்க முடியவில்லை.

அந்தக் காலையை அவனால் வரவேற்க முடியவில்லை. அவனுக்காகவா அந்தக் காலை வருகிறது? நிராகரிக்க முடியாத ஒரு உண்மை. அதேபோல் தேற்றுதலும் ஒவ்வொருவருமே தமக்குத்தாமே கட்டாயம் தேடிக்கொள்ள வேண்டிய நிலைதான் இப்போது. அவன் மீண்டும் ஒரு பெருமூச்சோடு தன்முகத்தை இறுக அழுத்திக்கொண்டான்.

காலை வெளிச்சமாகிக் கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் நிரஞ்சன் சிரித்துக்கொண்டிருப்பது தெரிந்தது. 'ஆயிரமாயிரம் வேங்கைகள் இரத்தத்தில் ஊறிய கொடியிது.' மச்சான் இந்தப்பாட்டக் கேட்டுப்பார் என்ன அருமையான கருத்தெண்டு... எனக்கொரு ஆசை மச்சான்...

அவன் தன் ஆசையைச் சொன்னான் அதன்படியே செய்தான். 'என்ர துளி இரத்தத்திலயும் எங்கட கொடி நனைய வேணும்.' அவன் தேசியமானபோது தேசியக் கொடியே பூரிப்போடும் நேசத்தோடும் அவனை இறுக அணைத்துக்கொண்டது.

கட்டிலில் மௌனியாய் குறுகிப் போயிருந்த சந்திரனால் நிரஞ்சனைப் பார்க்க முடியவில்லை. நிரஞ்சனோடு தானும் போராடப் போவதாகத் தீர்மானித்து இருவருமாகவே சென்று பெயர் பதிந்து ஒப்புதல் உறுதியும் எடுத்த அந்த நாட்கள் எவ்வளவு துணிகரமானவை.

அப்பா எந்தக் காரணம் கொண்டும் அவனை அடிக்க முடியாது. அம்மா அழுவா, அக்காவை தம்பிய காணேல்ல என்று வேதனைப்படுவினம். ஆனால் அதற்காக என்ர உறுதியான முடிவை மாற்றிக்கொள்ள முடியாது. நான் நாட்டுக்காகப் போராட வேணும். நிரஞ்சன் சொன்னதுபோல் என்ர ஒரு துளி இரத்தமும் அந்தக்கொடிய, இந்த மண்ண நனைக்க வேணும். என்ர சாவு சும்மா செத்துப்போனான் என்று இருக்கக்கூடாது. நாட்டுக்காக, இந்த மண்ணிற்காக மரணித்தான் என்று இருக்கவேண்டும்.

(22-ம் பக்கத் தொடர்ச்சி)

பழ.தியான்.

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் **செல்வி பிரதிலீபனா விக்னேஸ்வரன், செல்வி அ.லக்சி, செல்வி சிவசோதிநாதன் பிரகலாதன்** ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.




## கவிதை முற்றம்

பெயர்: **திருச்செல்வம் தமயந்தி**
இடம்: 0584 OSLO, Norway
பிறந்த திகதி: **03.02.87**



### அழகிய பெண்

பெண்ணே உன் கூந்தல் இயற்கையில் வாசமே.
உன் உடை அழகோ அழகு.
உன் முகத்தில் பயம் ஏனோ.
எதற்காக இந்த வேகம்.
உனது பாதங்களில் முட்கள் குத்துமல்லவா.
உன் வேகத்தைக் கண்டு நரியாரும் சிரிக்கின்றார்கள்.
பெண்ணே உன்னைச் சுற்றியிருக்கும் ரோஜாப் பூவில் ஒன்றை எடுத்து உன் கூந்தலில் வைக்கலாமே.
அணிலே அணிலே நீ உண்ணும் பழத்தில் அந்தப் பெண்ணுக்கும் ஓர் பழம் கொடுப்பாயோ.
பெண்ணே உன்னைச் சுற்றியிருக்கும் பச்சைப் புல்லும் மரங்களும் பூக்களும் அழகாக இருக்கின்றன. இதில் உன்னைச் சுற்றி இருப்பவை எல்லாம் அழகோ அழகு.

## அறிவியல் முற்றம்

**சொற்சிதறல் எண் - 51**

பிள்ளைகளே!
சென்றவார சொற்சிதறல் 51 இல் இரு கேள்விகள் தவறவிடப்பட்டுவிட்டதால் அதனை மீளவும் இங்கு பிரசுரிக்கின்றோம்.




**இடமிருந்து வலம்**

1. 1-2 பாதை என்றும் சொல்லலாம்.
2. 4-5 தமிழீழக் கொடியின் சின்னத்திலிருப்பது.
3. 7-10 மனிதன் உயிர்வாழ இது அத்தியாவசியமானது.
4. 13-15 செல்வத்தைக் குறிக்கும். இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளது.
5 16-20 சூரியனுக்கு இன்னொரு பெயர். இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளது.
6. 21-23 உறுதி என்றும் சொல்லலாம்.

**மேலிருந்து கீழ்**

7.2-7 கடலைக் குறிக்கும் சொல். இங்கு கீழிருந்து மேலாக உள்ளது.
8. 11-21 தமிழீழ நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி போர்க்களத்தில் முதல் வீரமரணம் அடைந்த பெண் போராளி.
9. 8-23 காட்டைக் குறிக்கும் சொல்.
10. 4-19 எல்லையைக் குறிக்கும். வயல் வெளிகளையும் இதனைக் கட்டிப் பிரிப்பார்கள். [இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளன.]
11. 10-25 தமிழீழத்தில் உள்ள ஒரு ஊரின் பெயர். [இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளன.]

## குட்டிக்கதை படிப்போம்

### ஊசியும் ஆயுதமே!

தினமும் காட்டு வழியாகச் சென்றுவரும் பழக்கமுள்ளவன் ஓர் இளைஞன். கையில் எந்த ஆயுதமும் எடுத்துப் போகமாட்டான் அவன்.

'காட்டினுள் செல்லும்போது ஏதாவது ஓர் ஆயுதம் எடுத்துப்போ! வெறுங்கையோடு போகாதே! ஓர் ஊசியாவது எடுத்துப் போவது நல்லது' என்று அடிக்கடி சொல்லுவார் அவனுடைய தந்தை. அவன் எதுவும் எடுத்துப் போவதில்லை. தனக்கு எதுவும் நேராது என்று நம்பினான் அவன்.

ஒருநாள் அவன் போகும்போது எதிரே வந்த திருடர்களிடம் மாட்டிக்கொண்டான். அவர்களில் ஒருவன் கைத்துப்பாக்கி வைத்திருந்தான். அவர்கள் இளைஞனைச் சோதனைபோட்டு அவனிடம் உள்ளவற்றை எடுத்துக்கொள்ள விரும்பினார்கள். அன்று அவனிடம் பணம் இருந்தது.

'என் அப்பா சொல்லைக்கேளாதது எவ்வளவு தவறு! என்னிடம் ஓர் ஊசியாவது இருந்தால் என்னை நீங்கள் பிடித்திருக்க முடியாது' என்றான் இளைஞன்.

திருடர்கள் விழுந்துவிழுந்து சிரித்தார்கள்.

'ஊசியை வைத்து என்ன செய்வாய்? இந்தா ஊசி, செய் பார்க்கலாம்' என்று ஓர் ஊசியைக் கொடுத்தான் ஒரு திருடன்.

ஊசியை உற்றுப் பார்த்தான் இளைஞன்.

'இது உடைந்த ஊசி' என்றான்.

'இருக்காதே! நல்ல ஊசிதானே!' காட்டு பார்க்கலாம் என்று குனிந்தான் ஊசி கொடுத்தவன்.

இளைஞன் திடீரென்று ஊசியால் அவன் கண்ணைக் குத்தினான். அவன் வலி பொறுக்க முடியாமல் கத்தினான். மற்றவர்கள் அவனைக் கவனிக்கும்போது இளைஞன் அந்தத் திருடனிடமிருந்து கைத்துப்பாக்கியைப் பிடுங்கிக்கொண்டான்.

உடனே திருடர்கள் பயந்துவிட்டனர். ஆளுக்கொரு பக்கம் ஓடித் தப்பித்தார்கள்.

வீடு திரும்பிய இளைஞன் அப்பாவிடம் சென்றான்.

'அப்பா நீங்கள் சொன்னது நல்ல அறிவுரை. உண்மையில் ஊசிதான் என் உயிரையும் பணத்தையும் காத்தது' என்றான் அவன்.

*- ஆபிரிக்கக் கதை*



**ரவித்தா ரவீந்திரன்**
**Steeler-Str-202**
**45138 Essen**
பிறந்த திகதி: **29.12.1990**

### நவராத்திரி

நவம் என்றால் ஒன்பது என்று பொருள். தேவிக்கு உரிய ஒன்பது இராத்திரி நவராத்திரி ஆகும். மனிதனுக்கு வேண்டிய வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றைத் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரும் அருள்கிறார்கள். அதனால் முதல் மூன்று நாட்களும் வீரம் தரும் துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாட்களும் செல்வம் தரும் இலட்சுமிக்கும், கடைசி மூன்று நாட்களும் கல்விக்கு அரசியான கலை மகளுக்குமாக இந்துக்களால் கொண்டாடப்படுகிறது. பத்தாம் நாளான விஜய தசமி ஆயுத பூசை ஆகும். இன்று பாலர்களுக்கு ஏடு தொடக்குவார்கள். நாமும் இந்நாளில் தேவியை வணங்கி அனைத்துச் செல்வமும் பெற்று வாழ்வோம்.

தனம் தரும் கல்விதரும் ஒரு நாளும்
தளர்வறியா மனம்தரும் தெய்வ வடிவும் தரும்
நெஞ்சில் வஞ்சமில்லா இனந்தரும்
நல்லன எல்லாம் தரும்
அன்பர் என்பவர்க்கே கனம் தரும்
பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

## கண்டுபிடியுங்கள்



*இந்தப் படத்தில் எத்தனை அறுகோணங்கள் உள்ளன?*
*முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.*

**கடந்தவார விடை**




28 என்பதே சரியான விடையாகும். அது மட்டுமே இரட்டை எண். மற்றையவை ஒற்றை எண்களாகும்.




# கருத்தடை மாத்திரைகளால் அபாயம் ?!

இன்று பெண்களின் வாழ்க்கையில் நெருங்கிய ஒரு உறவைக் கொண்டுள்ள பொருட்களில் கருத்தடை மாத்திரைகளும் அடங்கும். இவ்வாறு நெருங்கிய தொடர்புள்ள இக் கருத்தடை மாத்திரைகளையும் அதன் பாவனைகளையும் பற்றித் தற்போது டென்மார்க் நாட்டைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் ஒருவர் எச்சரிக்கை கலந்த அறிக்கையொன்றை வெளியே தெரியப்படுத்தியுள்ளார். அதாவது இக் கருத்தடை மாத்திரைகளின் பாவனை என்பது பெண்களிடம் தடுத்து நிறுத்த முடியாத ஒரு பொருள் என்றும், அதே நேரம் அதன் பாவனையால் ஆபத்துக்களும் உண்டென்கிறார் இம் மருத்துவர். அதாவது டென்மார்க் மருத்துவ நிபுணரான டாக்டர் லினி மீலம், ஜாயெர் மற்றும் அவருடனான மருத்துவ ஆராய்ச்சிக் குழுவினரே இச் செய்தியை வெளியே தெரியப்படுத்தியுள்ளனர்.

அதாவது இம் மாத்திரையைப் பாவிக்கும் பெண்கள் நுரையீரல் மற்றும் கால்களின் இரத்தக்குழாய்களில் அடைப்புப் போன்ற நோய்களுக்கு ஆளாகிவிடுகிறார்கள் என்று கூறுகின்றனர் இம் மருத்துவர்கள். இவர்கள் தம்முடைய ஆராய்ச்சியில் 15 தொடக்கம் 49 வயது வரையிலான ஏராளமான பெண்களை ஆராய்ந்த பின்பே இச் செய்தியை வெளியே தெரியப்படுத்தியதாகவும் கூறுகிறார்கள். இருந்தாலும் இதன் பாவனையை நிறுத்தத் தேவையில்லை என்றும் இதை நிவர்த்தி செய்ய இம் மாத்திரைகளை மிகுந்த ஆய்வுகளின் பின் விற்பனைப் படுத்துவதும், பெற்றுக்கொள்வதுமே சிறந்தது என்கிறார்கள் இம் மருத்துவர்கள்.

# மாதர்களுக்காய் சில மருத்துவ விளக்கங்கள்

பெண்குழந்தை பிறந்தவுடன் அதன் மார்புப் பகுதியை நசுக்கி ஒரு வகையான திரவத்தை வெளியே எடுப்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் ஒவ்வொருவரும் அது பற்றிய பல விளக்கங்களை தமக்குள்ளே கொண்டுள்ளனர். சிலபேர் இதுபற்றிப் பயமும் கொள்வதுண்டு. உண்மையில்



இது எதற்காக எடுக்கப்படுகின்றது என்பதை விளக்குகிறார் ஒரு பெண் மருத்துவர். அதாவது குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும் போது அதனுடைய தாயின் உடம்பில் இருக்கும் ஓமோன் அளவுதான் அக் குழந்தையின் உடலிலும் ஓடிக்கொண்டிருக்குமாம். அதனால் தான் குழந்தை பிறந்தவுடன் அதன் மார்பில் தாயைப்போலவே பால் சுரக்கிறது. சில குழந்தைகளுக்கு அபூர்வமாக தாயைப்போல சிறிது இரத்தப்போக்கும் பிறப்புறுப்பில் காணப்படும். ஆனால் இவை ஒருசில நாளில் இயல்பாகவே நின்றுவிடும். இதுபற்றி பெரிதாக பயப்பிடுவதற்கு இல்லை. இது குழந்தை வளர்ந்த பின்பும் பாதிப்பேதும் உருவாக்குவதுமில்லை என்கிறார் இம் மருத்துவர்.

★ ★ ★

முகப்பருக்கள் தோன்றுவது பொதுவாக ஓமோன்கள் மாற்றத்தால்தான். ஆனால் இது சிலவேளை நோய்க்கான அறிகுறியாகக்கூட இருக்கிறதென தற்போது மருத்துவர்கள் கூறியுள்ளார்கள். அதாவது நோய்த் தொற்று அல்லது புழுக்கள் இருந்தாலும்கூட பருக்கள் முகத்தில் தோன்றலாம். எனவே முகப்பரு அதிகமாக இருந்தால் சிறுநீர், மலம் மற்றும் இரத்தப் பரிசோதனைகளைச் செய்தல் நன்று எனவும் கூறுகின்றனர். அத்தோடு மாதவிடாய் நிற்கும் சமயத்திற்கும் பரு அதிகமாக வரலாம். அடுத்ததாக மன அழுத்தம், மனப்பதட்ட்ம் போன்றனவும் பருவை அதிகமாகத் தோற்றுவிக்குமாம்.

# துணிவே துணையெனும் பெண் இயக்குநர்

இந்தியத் திரைப்பட வரலாற்றில் பெண் இயக்குநர் ஒருவர் சர்ச்சைக்குரியவராக இருந்ததென்றால் அது தீபாமேத்தாவாகத்தானிருக்கும். ஏனெனில் இவரால் எடுக்கப்பட்ட 'பயர்' என்னும் படம் எவ்வளவு விமர்சனத்திற்குள்ளானதென்பது பலருக்கும் தெரியும். ஆனால் இப்பெண் தனக்கெதிராக உண்டான விமர்சனங்களைப்பற்றிப் பெரிதாக எதுவும் கலங்கவில்லை.

இந்தப் 'பயர்' படத்திற்கு அடுத்ததாக `Earth' (பூமி) என்னும் படத்தை எடுத்து முடித்துள்ளார். இது விரைவிலே வெளிவரவுள்ளது. இதற்கடுத்ததாக இவர் தற்போது எடுக்கவுள்ள படம் 'Water' (தண்ணீர்) என்னும் பெயரில்தான். அதாவது ஓர் ஆணுக்கும் இரண்டு பெண்களிற்கும் இடையே ஏற்படும் நட்பையும் அதனால் ஏற்படும் சிக்கல்களையும் அலசுவதே இந்தப் படத்தின் கருவாக இருக்கிறதாம். எனவே மீண்டும் தீபா மேத்தாவின்மேல் விமர்சனங்கள் தோன்றும் என்பதில் சந்தேகமில்லை.

# வளரும் குவைத் நாடு

குவைத்தில் தற்பொழுது இராணுவத்தின் விஞ்ஞானப் பிரிவிலும், நிர்வாகப் பிரிவிலும் பெண்கள் இடம்பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு கி.பி 2003-ம் அளவில் குவைத் பெண்களுக்கு வாக்குப்போடும் உரிமையையும் தேர்தலில் போட்டியிட அனுமதியையும் வழங்கியுள்ளது குவைத்நாட்டு அரசு. இருந்தாலும் இஸ்லாமியப் பெண்கள் வரலாற்றில் முதல் இஸ்லாமியப் பெண் பிரதமர் என்னும் பெருமை பெனாசிர் பூட்டோவுக்கே சேரும். இருப்பினும் இவர் அரசியலில் நுழைந்து 10 வருடங்களின்பின்தான் இஸ்லாமிய நாட்டுப் பெண்களுக்கு அரசியலில் உள்ளே நுழைய அனுமதி கிடைத்ததென்பது குறிப்பிடத்தக்கது.

# குற்றச்சாட்டின் பிடியில் 'மார்லின் ஒட்டே'



சர்வதேச விளையாட்டரங்கில் ஓட்டப்போட்டியில் இரண்டு தடவை உலக சம்பியன் விருதைப் பெற்றவர் ஜமேக்கா நாட்டைச்சேர்ந்த மார்லின் ஒட்டே. ஆனால் இவர் இனி விளையாடக்கூடாதென இவர்மீது குற்றச்சாட்டொன்றைச் சுமத்தியுள்ளது சர்வதேச தடகள சம்மேளனம். ஏனெனில் இவ் வீராங்கனையை மருத்துவ சோதனைக்கு உட்படுத்தியபோது இவர் ஊக்க சக்தி மருந்தான நான்ட் ரோலன் என்னும் மருந்தை அதிகளவில் உட்கொண்டிருந்தார் என்பது இவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு. ஆகவே தற்போது ஜமேக்கா நாட்டின் தடகள சம்மேளனமும் இவர் மீது செலுத்தப்பட்டுள்ள இக் குற்றச்சாட்டை தாம் விசாரிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளது. இதன் காரணமாக ஜமேக்காவின் தடகள சம்மேளனமும் இவர் மீதான தம் விசாரணை முடியுமளவும் இவரை விளையாடுவதற்குத் தாம் அனுமதிக்கப்போவதில்லை என அறிவித்துள்ளது. இவர் மீதான விசாரணை வரும் கார்த்திகை மாதமளவில் ஆரம்பமாக உள்ளது. அவ் விசாரணையின் முடிவுகளே நாளை மார்லின் ஒட்டே இனியும் விளையாடுவாரா என்பதைத் தீர்மானிக்கும் என்கிறார்கள் விளையாட்டுத்துறை அதிகாரிகள்.

# மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

பிரெஞ்சு, ஆங்கில மொழிகளில் இருந்து தமிழில் மொழிபெயர்க்க மொழி பெயர்ப்பாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:

திரு. வேலழகன்
Chez EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris.

தொலைபேசி: 0140376363
தொலைநகல்: 0140376464
E-mail: eelamurasu@aol.com

Pub.Gra

NÆRKØB -DKS Video

Danmark பதறேஸ்சியா மாநகரில் (Nærkøb) நியர்குய்ப் DKSVideo ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்

இடமாற்றம் 01.09.99 முதல் NÆRKØB ரவல்ஸ் கு Mony Exchence

புதிய முகவரி

NÆRKØB ரவல்ஸ் 5
Vestcenter,Venvsvej-10, 7000 Freclericia, Danmark.
தொலைபேசி: 75915840 -75915841 / Fax: 75915842

Nærkøb Travels®

Nærkøb Tvavels புதிய நவீன படுக்கை வசதிகள் கொண்ட பஸ்சேவை - வாரம் 3 நாட்கள்

| | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark - London- | 540Kr | 890Kr |
| Danmark - Paris | 358Kr | 574Kr |
| Danmark - Hambvrg | 205Kr | 327Kr |

இலையுதிர்கால மலிவு பயணச்சீட்டுகள் October கடைசிவரை பாரிஸ் சென்று அதே பஸ்சில் திரும்பிவர 398 Kr மட்டுமே
பிரான்ஸ் நாட்டில் இருக்கும் டிஸ்னிலான்ட் (Disnny Land Paris) சென்று திரும்பிவர 6.78 Kr மட்டுமே
2 வயதிற்குமேல் 12 வயதுக்குட்பட்டவருக்கு 598 Kr மட்டுமே
உடன் தொடர்புகொண்டு ஆசனங்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள்: 75915840 - 75915004
Fax 75915842 Fax 75915806

Nærkøb Money Transfer

15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த இடத்துக்கும் கொடுக்கவோ/ பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள்.

இவ்வாரம் முதல் Okotober 30ம் திகதி வரை
மலிவான விமானப் பயணச்சீட்டுக்கள்.
Copenhagen - Colombo - 3,200 Kr மட்டும் (Tax 165 Kr)
Copenhagen - Colombo - India (திருவனந்தபுரத்திற்கு) - 3800 Kr + Tax 185 kr

# பாகிஸ்தானின் அரசியலில் மீண்டும் இராணுவம்

பாகிஸ்தானின் அரசியல் விவகாரங்களில் இராணுவம் தலையிடுவதென்பது புதுமையானதொன்றல்ல. அந்நாடு பிரித்தானியாவிடமிருந்து 1947-ம் ஆண்டு சுதந்திரம் பெற்றுக் கொண்டது முதல் இன்றுவரையான 52 வருட காலத்தில் மூன்று முறை இராணுவ ஆட்சிக்கு அந்நாடு தள்ளப்பட்டது. அதன் வரலாற்றில் 24 வருடங்கள் இராணுவ ஆட்சியிலேயே கழிந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றுக்கொண்ட பாகிஸ்தானில் அன்று முதலே இராணுவத்தின் செல்வாக்கு அதிகமாகத்தான் இருந்தது. பாகிஸ்தானின் தலைவராக இருந்த மிஸ்ரா இராணுவத்தின் ஆதரவுடன்தான் தனது நிர்வாகத்தை நடத்திவந்தார். 1958-ம் ஆண்டு இராணுவ ஆதரவுடன் அதுவரை இருந்துவந்த அரசியல் அமைப்பை இரத்துச் செய்தார். அத்துடன் உடனடியாக அவசர காலச் சட்டத்தை அமுல்படுத்தி 59-ம் ஆண்டு ஜனவரி மாதம் நடாத்துவதென தீர்மானிக்கப் பட்டிருந்த தேர்தல்களையும் இரத்துச் செய்தார். அப்படியிருந்தபோதிலும் அதே வருடம் ஒக்டோபர் மாதம் பதவியிலிருந்து மிஸ்ரா இராணுவத்தால் தூக்கியெறியப்பட்டார். அப்போது இராணுவத் தளபதியாக இருந்த பீல்ட் மார்சல் அயுப்க்கான் புதிய அதிபராக பதவியேற்றுக்கொண்டார். அயுப்கானின் பதவிக்காலம் 1969 வரை நீடித்தது. அவரது காலத்தில் 1965-ம் ஆண்டில் காஷ்மீர் பிரச்சினைக்காக இந்தியாவுடன் யுத்தமொன்றும் ஏற்பட்டது. 66-ம் ஆண்டில் அன்றைய இந்தியப் பிரதமர் ராவ்பகதூர் சாஸ்திரியுடன் அமைதி ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டார். அயுப்கான் இடையே அமுல்படுத்தியிருந்த அவசரகாலச் சட்டத்தை இரத்துச் செய்தார். இதனையடுத்து அன்று அயுப்கானின் வெளியுறவு அமைச்சராக இருந்த சுல்பிகார் அலிபூட்டோ அவரிடமிருந்து பிரிந்து பாகிஸ்தான் மக்கள் கட்சியினை ஆரம்பித்தார். அத்துடன் 69-ம் ஆண்டு ஜனவரியில் பாகிஸ்தானிய எதிர்கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டுமுன்னணி ஒன்றை அமைத்துக்கொண்டன. நாட்டின் பல பகுதிகளிலும் இராணுவத்திற்கு எதிரான கலவரங்கள் வெடித்தன. பல நகரங்களுக்கும் இராணுவம் அனுப்பப்பட்டு கலவரங்களை அடக்கும் முயற்சிகளில் ஈடுபட்டன. 1969-ம் ஆண்டு மார்ச் 25-ம் திகதி பாகிஸ்தானில் மீண்டும் அவசரகாலச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன் கட்டுப்பாட்டு அதிகாரியாக ஜெனரல் யகியாக்கான் நியமிக்கப்பட்டார். இதற்கிடையே அதிபர் பதவியில் இருந்து அயுப்கான் ஓய்வுபெற அவரது இடத்திற்கு ஜனரல் யகியாக்கான் நியமனமாகினார். ஆனால் முன்னைய ஆட்சியாளரைப்போல் அல்லாது யகியாக்கான் உடனடியாகத் தேர்தல்களை நடாத்துவதில் முயற்சிகளை மேற்கொண்டார். இதன்படி 1971-ம் ஆண்டு டிசெம்பர்மாதம் சுல்பிகார் அலிபூட்டோ பாகிஸ்தானின் பிரதமராக பதவியேற்றார். பிரதமராகப் பதவியேற்ற சுல்பிகார் அலிபூட்டோ தனது ஆட்சியை ஸ்திரப்படுத்திக்கொள்ளும் வகையில் கூட்டுப்பாதுகாப்புப் படைப்பிரிவு என்ற ஒன்றினை தனது ஆதரவாளர்களைக் கொண்டு ஆரம்பித்தார். இப்படைப்பிரிவு உண்மையில் சுல்பிகார் அலிபூட்டோவின் பிரத்தியேக பாதுகாப்பு அணியினர் போன்றே செயற்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பூட்டோ தனது பதவிக் காலத்தில் 1400 இராணுவ அதிகாரிகளை பதவியில் இருந்து வெளியேற்றித் தனது ஆதரவாளர்களை அப்பதவிகளுக்கு நியமித்தார். இராணுவத் தளபதியாக இருந்த திக்காகான் 1976-ம் ஆண்டு ஓய்வுபெற அப்பதவிக்கு இராணுவத் தலைமை அதிகாரியாக இருந்த முகமத் சியாவுல் ஹக்கினை அப்பதவிக்கு நியமித்தார். 1971-ம் ஆண்டு தேசிய மற்றும் பிராந்தியத் தேர்தல்களை நடாத்துவதற்கு பூட்டோ முன்வந்தார்.




**1947-ம் ஆண்டு சுதந்திரம் பெற்றுக் கொண்டது முதல் இன்றுவரையான 52 வருட காலத்தில் மூன்றுமுறை இராணுவ ஆட்சிக்கு அந்நாடு தள்ளப்பட்டது. அதன் வரலாற்றில் 24 வருடங்கள் இராணுவ ஆட்சியிலேயே கழிந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.**

அதன்படி நடாத்தப்பட்ட தேர்தல்களில் 155 ஆசனங்களை அவரது மக்கள் கட்சி பெற்றுக்கொண்டது. 36 ஆசனங்களை எதிர்க் கட்சிகள் பெற்றுக்கொண்டிருந்தன. பூட்டோ எதிர்பார்த்தபடியே தேர்தல்களை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. முடிந்த தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றன என்றும், மக்கள் கட்சி களவாக வாக்குக்களைப் போட்டு வெற்றி பெற்றது என்றும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. அத்துடன் புதிய தேர்தலொன்று நடாத்தப்படவேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கைவிடுத்தன. அரசுக்கும் எதிர்க் கட்சியினருக்குமிடையே நாட்டின் அமைதி தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருந்தபோது மீண்டும் பாகிஸ்தான் அரசியலில் இராணுவம் தலையிட்டது. யூலை மாதம் 25-ம் திகதி பூட்டோ உட்பட சகல அரசியல் தலைவர்களும் இராணுவத்தால் கைது செய்து சிறைக்குள் தள்ளப்பட்டனர். மீண்டும் அந்நாட்டில் அவசர காலச் சட்டத்தினை இராணுவம் பிரகடனப்படுத்தியது. தலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரியாகக் கடமையாற்றிய சியாவுல் ஹக் தன்னை நாட்டின் தலைவராக நியமித்துக்கொண்டார். இவரே பாகிஸ்தானின் வரலாற்றிலேயே மிக நீண்ட காலமாக பதவியில் இருந்த ஒரு தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆட்சியைக் கைப்பற்றிய தளபதி ஹக் அடுத்த 90 நாட்களுக்குள் பாகிஸ்தானில் புதிய தேர்தல்களை நடத்துவேன் என்றும் ஜனநாயக ரீதியான மாற்றத்தைக் கொண்டுவருவேன் என்றும் அறிவித்தார். அதன்படி தேர்தலுக்கான வேட்பு மனுக்களும் கோரப்பட்டன. எல்லா அரசியல் கட்சிளிடமிருந்தும் வேட்பு மனுக்கள் வந்திருந்த நிலையில் தேர்தல்களை ஹக் இரத்துச் செய்தார். பூட்டோவின் ஆட்சிக் காலத்தில் நடந்த மோசடிகள் இராணுவ ஆட்சியாளரால் கிளறப்பட்டன. அவரது கூட்டுப்பாதுகாப்பு படையினரின் அத்துமீறல் நடவடிக்கைகளும் பெரும் விமர்சனங்களிற்கு உள்ளாகின. அதனையடுத்து பூட்டோ நீதிமன்ற விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டார். அதில் குற்றவாளியாகக் காணப்பட்ட அவர் 1979-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் தூக்கிலிடப்பட்டார். இதற்கிடையே பாகிஸ்தானின் அரசியல் கட்சிகளை இராணுவம் தடைசெய்தது. 1978-ம் ஆண்டு மார்ச் 1-ம் திகதி பாகிஸ்தானின் பல பத்திரிகைக் காரியலாயங்கள் மூடப்பட்டன. அன்று தொடங்கிய பாகிஸ்தானின் கடும்போக்கு இராணுவ ஆட்சி 85-ம் ஆண்டு வரை தொடர்ந்தது. 85-ல் தேசிய பிராந்தியத் தேர்தல்கள் இடம் பெற்றபோதிலும் மூன்று வருடங்கள் கழித்து 88ம் ஆண்டு அவை கலைக்கப்பட்டன. பின்னர் அதே வருடம் நவம்பர் மாதம் ஹக் புதிய தேர்தல்களை அறிவித்திருந்தபோதிலும் 88-ம் ஆண்டு ஒகஸ்ட் 17-ம் திகதி மர்மமான முறையில் விமானவிபத்தொன்றில் அவர் கொல்லப்பட்டார்.

அன்றுடன் பாகிஸ்தானின் இராணுவ ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்பின் சுமார் 11 வருடங்கள் பெனாசீர் பூட்டோவினதும், நவாஸ் செரீபினதும் ஆட்சிகள் இடம்பெற்றன. இன்று மீண்டும் பாகிஸ்தானின் அரசியலில் இராணுவம் தலையிட்டுள்ளது. இப்போதும் புதிய ஆட்சியாளர் விரைவிலேயே தேர்தல்கள் நடாத்தப்பட்டு ஜனநாயகமுறைக்கு நிர்வாகம் மாற்றப்படும் எனக் கூறியுள்ளார். ஆனால் நாட்டின் வரலாற்றில் இராணுவத் தலைவர்களின் கூற்றுக்களில் இதுவரை காலமும் உண்மைகள் பேணப்படவில்லை. இம்முறை எப்படியோ....?

*- உதயன்*

## கைதிகளை வெளியேற்றுவதில் பிரச்சினை

நாட்டைவிட்டு பலவந்தமாக வெளியேற்றப்படும்போது குழப்பம் விளைவிக்கக்கூடிய கைதிகளைக் கையாள்வது பற்றி ஐப்பசி மாதத்திற்கு முன்பு சுவிஸ் விமான சேவையும் ஐக்கிய அரச சபையும் ஓர் உடன்படிக்கைக்கு வர விரும்புகின்றனர். 'புரிந்துணர்விற்கான அடையாளம்' என்பதற்கமைய சகல திறந்த கேள்விகளிற்கும் விடைகாணப்பட வேண்டும் எனச் சூரிச் விமான நிலையத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அகதிகளிற்கான ஐக்கிய திணைக்களம், சுவிஸ் விமான போக்குவரத்துச் சேவை, மாவட்ட வெளிநாட்டவர் பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றின் பேச்சாளர்கள் தெரிவித்தனர். அகதிகளிற்கான ஐக்கிய திணைக்களத்தின் தலைவர் திரு.Jean-Daniel Gerber தெரிவிக்கும்போது எல்லோருக்கும் பொருத்தமான தீர்மானம் எடுக்கப்படும் என்பதில்தான் நம்பிக்கை கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஐக்கிய திணைக்களமானது 'மூன்றாவது வகையான நாடு கடத்தல்' என அழைக்கப்படும் இந்தக் கடினமான நடவடிக்கையைக் கைவிட முடியாது எனவும், அப்படி இம்முயற்சி கைவிடப்பட்டால் ஒவ்வொரு நிராகரிக்கப்பட்ட அகதியும் தனது நாடு கடத்தப்படும் முயற்சியை இப்படியாகத் தடைசெய்ய முயற்சிக்கலாம் எனவும் திரு.Jean-Daniel Gerber தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கும்போது நாம் இங்கு விட்டுக்கொடுக்க முடியாது கால்கள் கட்டப்பட்டு, வாயடைப்புச் செய்யப்பட்டு பொலிசாரினால் அழைத்துச் செல்லப்பட்டு மூன்றாவது வகையான நாடுகடத்தலிற்கு உள்ளாவதாக அவர் தெரிவித்தார்.

திரு.Gerber மேலும் தெரிவிக்கும்போது இப்படியாக குழப்பம் செய்வோர் மிகக் குறைவானவர்களே எனவும், இதுவரை 6449 நாடு கடத்தல்கள் இடம்பெற்றுள்ளன எனவும், இதில் 6383 வெளிநாட்டவர் எந்தவித நிர்ப்பந்தங்களும் இல்லாமல் தமது நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள். இதிலும் 41 பேரிற்கே சிறிய அளவு கட்டாய நிர்ப்பந்தங்கள் (கைச்சங்கிலி) திணிக்கப்பட்டன, இது இரண்டாவதுவகை நாடு கடத்தலைச்சாரும் எனவும் அவர் தெரிவித்தார். ஐக்கிய திணைக்களம், சுவிஸ் விமான போக்குவரத்துச்சபைக்கிடையில் தொடரும் பேச்சு வார்த்தையில் வாடகை விமா்னங்களை அமர்த்த முடியுமா? எனவும் ஆராயப் படுகின்றது. இதன்முடிவு விமானங்களுக்கான செலவிலேயே தங்கியுள்ளதென்பதுடன் வாடகை விமான சேவையானது எப்பொழுதும் உகந்ததல்ல எனவும் சில நாடுகள் இவற்றைத் தரை இறங்க மறுக்கின்றன எனவும் தெரிவித்தார்.

இதற்கிடையே சுவிஸ் விமானங்களினுள் ஏற்பட்ட பல குழப்பங்களின்பின், புரட்டாசி மாதம் 10ம் திகதியிலிருந்து கட்டாய நிர்ப்பந்தத்தின் கீழும், கை கால்கள் கட்டப்பட்டவர்களையும் அவை ஏற்றிச்செல்வதில்லை. சுவிஸ் விமானசேவையின் பேச்சாளர் ஒருவர் பத்திரிகையாளர் மாநாட்டில் பலவந்தமாக ஒரு பயணி ஏற்றப்படும்போது மற்றைய சக பயணிகளின் முறைப்பாட்டிற்கு அது உள்ளாக்கப்பட்டதாகவும், சிலவேளைகளில் உண்மையில் மற்றைய சக பயணிகளிற்கு இது உகந்ததாக இருக்கவில்லை எனவும் தெரிவித்தார். கடைசியில் எழும் கேள்வி, பயணிகளின் பாதுகாப்புப் பற்றியதே எனவும், சென்ற வைகாசி மாதம் ஓர் கொங்கோ நாட்டைச் சேர்ந்தவர் நாடு கடத்தப்படும்போது, விமானம் கின்சாசா நோக்கிச் செல்லும்போது அவர் மற்றைய சக பயணிகளைச் சீண்டியதால் மூன்று பொலிசாரால் நையப் புடைக்கப்பட்டதால் பயணம் இடைநிறுத்தப்பட்டு, 'நாடு கடத்தப்பட்டவர் திரும்பவும் சுவிஸ் நாட்டினுள் விடுவிக்கப்பட்டார்' எனவும் தெரிவித்தார். சுவிஸ் விமானசேவை நாடுகடத்தப்படுவோரை ஏற்றிச் செல்ல கடமைப் பட்டுள்ளதா என திரு.Gerber இடம் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதில் அளிக்கையில் 'இப்படியான சட்டம் எதுவும் இல்லை. மனச்சாட்சியின்படி அவர்கள் அதற்கு கடமைப்பட்டுள்ளார்கள்'. விமானங்கள் மூலமே அகதிகள் இங்கு வருகிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.


**1ம் ஆண்டு நினைவு தினமும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும்**

**உதிர்வு: 23.10.1998**

தமிழீழம், கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், இல.420, ஸ்கந்தபுரத்தை தற்காலிக முகவரியாகவும் கொண்ட ஞா.அந்தோனிப்பிள்ளையின் (சமாதான நீதவான் வெள்ளை அண்ணர்) அன்பு மனைவி தேவியம்மா அந்தோனிப்பிள்ளை அவர்களின் 1-ம் ஆண்டு நினைவு தினமும், ஆத்ம சாந்தி பிரார்த்தனையும், எதிர்வரும் 24.10.1999-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தில் பகல் 12.00 மணிமுதல் 1.30 மணிவரை நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

'ஓம் சாந்தி'

இவ்வண்ணம்
ஞா. அந்தோனிப்பிள்ளை (J.P)
ஸ்கந்தபுரம், தமிழீழம்.


€ur calling card
Cartes téléphoniques
ECC
TELEPHONEZ A PRIX REDUITS
EN TOUTE SECURITE.
€ur calling card
80 Unités
50 F
ECC
100 F
160 Unités
TÉNOR
QUALI
100 F
160 Unités
Organisation professionnelle de télécommunications
ECC Securité à la charte QUALITE TENOR

# ARCHIES

205 Edgware Road, Colindale, London NW 9.6 Ly - T.P: 0181-205 3652

ஆச்சீஸ் ஐந்து ஆண்டு நிறைவை முன்னிட்டும் Millennium ஆண்டுக்குமான

## மாபெரும் மலிவு விற்பனை

★ ஆச்சீஸ் அரிசிமா–மிளகாய்த்தூள் ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசம்.

★ ஆச்சீஸ் சின்னம் பொறிக்கப்பட்ட வேறு அனைத்து இலங்கைத் தயாரிப்பு பொருட்களும் இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்.

★ அனைத்து இலங்கைத் தயாரிப்புப் பொருட்களும் 15% கழிவு

**5 CD க்கள் £10 மட்டும்**
**5 Video £10 மட்டும்**
**3 ஒறிஜினல் பிரமிட் ஐங்கரன் Video £10 மட்டுமே**



**மலிவு விற்பனை 01.10.1999 தொடக்கம் 31.12.99 வரை நீடிக்கும்**

ஆச்சீஸ் ஸ்தாபனத்தார் தமது வாடிக்கையாளர்களுக்கு தீபாவளி வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

Pub



# தற்போது அமோக விற்பனையில்...

இலங்கை - 43 நிமிடங்கள் Numero Vert இல்

# Radja Com

PARIS
LYON
MARSEILLE
LILLE
BORDEAUX
STARSBOURG
TOULOUSE
BREST
NICE
De toutes les Villes de France

## Cartes Telephoniques Prepayees

Economisez jusqu'a 75 % Sur tous vos appels Internationaux

Up to 75% Savings on your calls

**Appel Gratuit Par Numero Vert**

Algerie..........77 Mn
Egypte..........40 Mn
Maroc..........75 Mn
Tunisie..........76 Mn
Benin..........32 Mn
Ghana..........40 Mn
Guinee..........45 Mn
Haiti..........45 Mn
Mali..........42 Mn
Nigeria..........40 Mn
Senegal..........41 Mn
Bangaladesh....40 Mn
Chine..........62 Mn
Pakistan..........42 Mn
Srilanka..........43 Mn
Vietnam..........32 Mn
Portugal..........60 Mn
Italie..........65 Mn
Espagne..........80 Mn
U.S.A..........130 Mn

**4, RUE CAULAINCOURT, 75018 PARIS.**
M°: Place de Clichy -Bus 80/95-Arret: Clichy Caulaincourt
En face d'Hotel ibis/Mercure
**Tél: 0144 90 06 10-Fax: 01 44 90 06 59**

வெகுவிரைவில் இந்தியா, மொரிசியஸ் நாடுகளுக்கான நிமிடங்கள் அதிகரிக்கப்படும்

தொடர்புகட்கு: Radja Com - முகுந்தன் - மேலதிக தொடர்புகளுக்கு: Nice: 06 14 32 23 44

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

# வாழ்க்கையைத் தேடி

அன்று நிதானமாக நின்ற சந்திரன் இன்று யேர்மனியில் அகதியாய் வாழ்வுரிமை அற்றவனாய் வாழ, புக்கிடம் புரியாது தவித்து நிற்கிறான். இனி வாழ வேண்டுமா என்ற ஒரு விரக்தி. சாவை எப்படியும் சந்திக்க அவன் தயாராக இருந்தாலும். வாழ வேண்டும் என்ற உறுத்தலும் அவனை விட்டுவிலகவில்லை. ஒரே குழப்பம் தலையைப் பிய்த்துக்கொள்ளுமளவு சூனியமான ஒரு நிலை.

'தம்பியவ அவன் எங்களுக்கு ஒரே ஆண்பிள்ளையன. உவன உதுல விட்டுவிட்டா நிக்கிற குமருகள ஆரன பாப்பினம். அவன்ரை அப்பருக்கு ஆஸ்த்துமா, அவரால என்ன செய்யமுடியும். தம்பி உன்ன என்ர மூத்த மகனாய் நினைச்சுக் கேக்கிறன். அவனட்ட ஒருக்கா கதைச்சுப்பாரன. அவன் ஏதோ ஒரு துடிப்பில வந்திட்டான்....'

'சரியம்மா உங்கட நிலம எங்களுக்கு விளங்குது. ஆனா அவன் தான் நாட்டுக்காகப் போராடப் போறனெண்டு பிடிவாதமா நிக்கிறான். வேணுமெண்டா நீங்களே ஒருக்கா கதைச்சுப்பாருங்கோ.'

அந்த முகாம் பொறுப்பாளர் சந்திரனைத் தாய் தந்தை உறவுகளுடன் கதைக்க விட்டார். அவர்கள் கதைத்தார்கள் மணிக்கணக்காக... பின் நாட்கள் சில தவறாது வந்து.....

சந்திரன் தளர்ந்தான். உறுதியை மெல்ல வழுவவிட்டான் அக்காமார்! அப்பாவால் இயலாது. அம்மா அழுதார். அப்பாகூடக் கலங்கினார். சந்திரன் இறங்கினான். வீடு வந்தான் 'அவசரமாக நாடு கடத்தப்பட்டான்.



யேர்மன்தான் பொய் சொல்லி புகுந்த நாடு. புதிய நாடு. புதிய வாழ்க்கை, புதிய நண்பர்கள், எல்லாமே புதிதுதான். வாழ பழகிக்கொண்டான். உழைத்தான். சமூக சீரழிவுக்கு ஒரு காரணமான சீதனம்- அதற்காக கடுமையாக உழைத்தான். அவனது உழைப்பால் அவனது அக்காமாருக்குக் கொழுத்த விலையில் மாப்பிள்ளைகள் அகப்பட்டார்கள், நல்ல வாழ்க்கையைத் தாம் அமைத்துக்கொடுத்துவிட்டதாக பெற்றோர் ஆனந்தப்பட்டனர். ஆனால் அந்த ஆனந்தம் நிலைக்கமுடியாதபடி ஆதிக்க வெறியர்கள் ஏவும் குண்டுகளும் அவர்களது அடாவடித்தனங்களும் ஆக்கிரமிப்புகளும் அவனது குடும்பம் மட்டுமல்லாது அவனது இனத்தையே ஊர் ஊராகத் துரத்தியது.

சொந்த நாட்டுக்குள்ளேயே அகதியாக அலைந்து நிம்மதியைத் தொலைத்து சாவின் வருகை, எப்போது எப்படி, எங்கே, எனச் சொல்ல முடியாதபடி ஒரு மரண சூழலுக்குள் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றனர்.

பணம், பதவி உயர்வு, தாழ்வு எல்லாமே ஒரு முகமாக அகதியாக்கப்பட்டு வாழ்க்கையைத் தேடியோடும் மக்களாக விடுதலையை நேசிக்கும், விடுதலையைத் தேடும் மக்களாக ஆக்கப்பட்டுவிட்டார்கள்.

தன்னைத் தன் இலட்சியத்தைச் சிதறடித்த அப்பாகூட இன்று தன் தள்ளாத வயதிலும் தொண்டர்படையில் இணைந்து களத்தில் சுதந்திரவீரனாக நிற்கிறார். தனது தேசமும் மக்களும் சுதந்திர வேட்கையில் எழ, தன்னையும் தன் நிலையையும் எண்ணிய சந்திரனது கண்களில் கண்ணீர் தடையின்றி ஓடியது.

கட்டிலில் சாய்ந்து கிடந்த சந்திரன் கண்களை மூடிக்கொண்டான். யேர்மன் அரசு அவனது அகதி கோரலை நிராகரித்து நாட்டைவிட்டுப் போகும்படி கூறிவிட்டது. இன்றைய நிலையில் அவன் எந்த நேரத்திலும் நாடு கடத்தப்படலாம். அவனது நண்பர்கள் அவனை இந்த வீட்டில் இருக்கவேண்டாம் என எச்சரித்துள்ளனர். அவனும் இரண்டு வாரங்களாகத் தன் நண்பர்கள் வீட்டில் தங்கினான். இன்று மனம் சோர்ந்தவனாக தன் வீட்டிலேயே தங்கிவிட்டான். தன்வாழ்க்கையைத்தேடி அவனால் எங்கும் ஓடமுடியவில்லை. எல்லாப்பக்கமும் ஏதோ வகையில் ஒரு முட்டுக்கட்டை. ஏன் வாழ்கிறோம் என்ற ஒரு விரக்தி. போர்வையை இழுத்து மூடிக்கொண்டான் தன்னை வதைக்கும் நினைவுகளை மெல்லத் துரத்த முயன்றவனாய் உறக்கத்தைத் தேடினான்.

சந்திரனின் கண்கள் மெல்லச் சோர்ந்து உறக்கம் அவனை ஆட்கொள்ளும் நேரம். அவனது அறையின் கதவு தட்டப்படும் சத்தம் கேட்க சட்டென எழுந்தான். 'இந்த நேரம் யாராக இருக்கும்!' தனக்குத்தானே கேட்டுக்கொண்டே கதவில் இருந்த சிறு துவாரம் ஊடாக வெளியே பார்த்தான். பார்த்தவன் திடுக்குற்றவனாய் செய்வதறியாது ஒருகணம் தடுமாறிப்போனான்.

இரண்டு பொலிசார் கதவருகே அமைதியாக நின்று கொண்டிருந்தனர். நேரத்தின் நகர்வு அவர்களை மீண்டும் கதவைத் தட்டவைக்க செய்வதறியாது நின்ற சந்திரன் அந்தத் தட்டலோடு பரபரப்பானான். கையில் அகப்பட்டதை அள்ளி எடுத்துக்கொண்டவனுக்கு எங்கு போவது என்பதைப்பற்றிய கவலையைவிட இப்போது எந்தவழியாக வெளியேறுவது என்ற பிரச்சினை அங்குமிங்கும் ஓடினான். தப்ப வழியெதையும் காணோம். யன்னலால் எட்டிப்பார்த்தான். அந்த மூன்றுமாடிக் கட்டடத்தின் கீழ்த்தளம் அவன் குதித்தாலும் காப்பாற்றும் நிலையில் இல்லை. அதைப் பார்க்கவே அவனுக்கு தலைசுற்றியது.

பொறுமை இழந்துவிட்ட பொலிசார் பலமாகத், தொடர்ச்சியாகக் கதவைத் தட்டினர். இனி கதவு உடைபடும் என்பதை உணர்ந்துகொண்ட சந்திரன் அள்ளியதையெல்லாம் அப்படியே போட்டுவிட்டு யன்னல் வழியே வெளியேறித் தப்பும் வழியைத் தேடினான்- மழைநீர் வடிந்தோடும் குழாய்தான் அவனுக்குக் கைகொடுப்பது போன்று அருகே தெரிந்தது. மிகவும் சிரமப்பட்டு அதைப்பிடித்துக்கொண்டு கீழிறங்கி ஓடினான்.

படுத்திருந்த உடுப்போடு கையில் பணமுமின்றி பொலிசாரிடம் அகப்பட்டுவிடக்கூடாது என்ற அச்சத்தோடும் யாராவது தனக்கு உதவுவார்கள் என்ற நம்பிக்கையோடும், வேகமாக நடந்தான்.

# அறிவியல் முரசு - 3

1. மழைக்காடுகள் என அழைக்கப்படும் காடுகள் உள்ள கண்டம் எது?
   ☐ ஆசியா ☐ ஆபிரிக்கா ☐ அமெரிக்கா ☐ ஐரோப்பா?
2. சர்வதேச மன்னிப்புச்சபை தோற்றுவிக்கப்பட்ட வருடம்?
   ☐ 1900 ☐ 1972 ☐ 1961
3. முதன்முதல் கண்டுபிடிக்கப்பட்ட புகைப்படக்கருவி எது?
   ☐ கனொன் ☐ யசிக்கா ☐ கொடெக்
4. உலக அதியங்களில் ஒன்றான பிரான்சில் அமைந்திருக்கும் ஈபிள் கோபுரம் கட்டப்பட்ட ஆண்டு?
   ..............................................
5. பில்கேடஸ் எந்த நிறுவனத்தின் உரிமையாளர்?
   ☐ சொனி ☐ மைக்ரோ சொப்ற் ☐ நெட்ஸ்கேப்ஸ்
6. விண்வெளியில் பறந்த முதல் மனிதன் யார்?
   ☐ நீல் ஆம்ஸ்ரோங் ☐ யூரிககாரின் ☐ பெல் பூரியர்
7. உலகின் கலைவடிவம் கொண்ட பாரம்பரிய தலைநகர் என வர்ணிக்கப்படுவது?
   ☐ பேர்லின் ☐ பாரிஸ் ☐ பிரசல்ஸ் ☐ வியன்னா
8. இதயபூமி நடவடிக்கை விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட இடம் எது?
   ..............................................
9. சீனப்பெருமதில் எத்தனை கிலோ மீற்றர் நீளம் கொண்டது?
   ☐ 9,000 ☐ 3,400 ☐ 6,700
10. பிக்பென் என்னும் மணிக்கூட்டு கோபுரம் உள்ள நாடு எது?
    ..............................................
11. சேகுவரா பிறந்த நாடு எது?
    ..............................................
12. தமிழீழத்தின் தலைநகர் யாழ். குடாவில் அமையவுள்ளது?
    ☐ ஆம் ☐ இல்லை
13. சிறீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் எப்போது முதன் முதல் கண்ணிவெடித் தாக்குதலை நடாத்தினார்கள்?
    ☐ 1982 ☐ 1983 ☐ 1984 ☐ 1985
14. உதைபந்தாட்டம் எந்த நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது?
    ..............................................
15. உலகில் மிகவும் உயரமான பகுதி எது? மிகவும் ஆழமான பகுதி எது?
    .............................................. ..............................................

பெயர்: ..............................................

முகவரி: ..............................................

..............................................

..............................................

பிறந்த நாள்: ..............................................

சந்தாதாரராயின் சந்தா எண்: ..............................................

புதிர் முரசு எண்-3 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: **29.10.1999**

- (போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

**விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:**

**அறிவியல் முரசு**

**EELAMURASU, 22, Rue Perdonnet, 75010 Paris, France.**

சரியான விடையெழுதும் வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு *'Lune Electronic Informatique'* நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க பரிசு அனுப்பி வைக்கப்படும்.

**அறிவியல் முரசு** எண்-3 இற்கான சரியான விடையும், **அறிவியல் முரசு** எண்- 4ம், 04 - 10 நவம்பர் 99 ஈழமுரசில் வெளிவரும்.

**அறிவியல் முரசு - 2 இன் சரியான விடைகள்**

1. 1948, 2. பெல்ஜியம்—லக்சம்பேர்க்—ஒல்லாந்து, 3. ஹென்றி போர்ட், 4. ஆம், 5. ஆம், 6. பேர்லின், 7. இல்லை, 8. தென்கொரியா—ஜப்பான், 9. கோர்பச்சேவ், 10. ஆம், 11. இல்லை, 12. 106, 13. ஆகாயக் கடல்வெளி, 14. 1985, 15. 1959

**சரியான பதில் அனுப்பியோரில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:**

றெஜினோல்ட் பெனடிக்ற்
75018 Paris,
France.

# உலக வரலாற்றில் பதிவானவர்கள்

# வானியல் மாற்றங்களை முதன்முதல் கண்டுபிடித்த நிக்கோலஸ் கோப்பர்னிக்கஸ்

**உலகவரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்தி பெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவர உள்ளன.**



போலந்து நாட்டைச் சேர்ந்த தலைசிறந்த வானியலறிஞர் நிக்கோலஸ் கோப்பார்னிக்கஸ். இவர் போலந்தில் விஸ்டுலா ஆற்றின் கரையிலிருந்த போருன் என்ற நகரில் 1473-ம் ஆண்டில் ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்தார். கோப்பர்னிக்கஸ் இளமையில் கிராக்கோ பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றார். அப்போது அவருக்கு வானியலில் ஆர்வம் தோன்றியது. இவர் தமது 25-ம் வயது வாக்கில் இத்தாலி சென்று, போலோக்னா, பதுவா பல்கலைக் கழகங்களில் சட்டமும், மருத்துவமும் பயின்றார். பின்னர், ஃபெரரா பல்கலைக் கழகத்தில் கிறிஸ்தவச் சமயச் சட்டவியலில் 'டாக்டர்' பட்டம் பெற்றார். பின்னர் இவர் ஃபிரான்பர்கு தேவாலயத்தில் ஒரு சமயகுருவாகப் பணியில் சேர்ந்தார். அங்கு இவர் தமது வயதுப் பருவத்தின் பெரும்பகுதியைக் கழித்தார். போப்பர்னிக்கஸ் ஒருபோதும் தொழில் முறை வானியலறிஞராக இருக்கவில்லை. தமது ஓய்வு நேரங்களில் மட்டுமே இவர் வானியல் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். இவருக்குப் பெரும்புகழ் தேடித் தந்த வானியல் பற்றிய தலைசிறந்த நூலையும் இவர் தமது ஓய்வு நேரத்திலேயே எழுதினார். இவர் இத்தாலியில் இருந்த போது, கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த சாமோஸ் அரிஸ்டார்க்கஸ் என்ற கிரேக்கத் தத்துவஞானி வலியுறுத்திய, 'பூமியும், மற்ற கோளங்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன' என்ற கொள்கை இவருடைய கவனத்தைக் கவர்ந்தது. சூரிய மையக் கருதுகோள் முற்றிலும் சரியானது எனக் கோப்பர்னிக்கஸ் உறுதியாக நம்பினார். இவர் தமது 40-ம் வயதில் இது தொடர்பாக தமது கொள்கைகளை விளக்கிக் கையால் எழுதிய துண்டறிக்கைகளைத் தம் நண்பர்களிடம் சுற்றுக்கு அனுப்பினார். பல்லாண்டு காலம் தீவிர ஆராய்ச்சிகளும், பரிசோதனைகளும், கணிப்புகளும் செய்து இவர் தமது புகழ் பெற்ற நூலாகிய 'விண் மண்டலச் சுழற்சி' (on the Revolution of the Celestial Spheres) என்ற நூலை எழுதினார். இந்நூலில், தமது கோட்பாட்டினை விவரமாக விளக்கி, அதற்கான சான்றுகளையும் விவரித்துள்ளார்.

கோப்பர்னிக்கஸ், 1533-ம் ஆண்டில் தமது 60-ம் வயதில், ரோம் நகரில் ஒரு தொடர் சொற்பொழிவாற்றினார். அந்தச் சொற்பொழிவில், இவர் போப்பாண்டவரின் கண்டனத்திற்கு ஆளாகாதவகையில் தமது கோட்பாட்டின் முதன்மையான அம்சங்களை விளக்கினார். எனினும், கோப்பர்னிக்கஸ் தமது நூலை எழுதிவிட்ட பின்னருங்கூட. திருச்சபையினரின் ஆத்திரத்திற்கு ஆளாகக்கூடும் என்ற அச்சத்தில் அதை வெளியிடுவதற்குத் தயங்கினார். எழுபது வயதை நெருங்கும் வரையில் இவர் அந்நூலை வெளியிடத் துணியவில்லை. இறுதியாகத் துணிவு கொண்ட இவர் தமது நூலை வெளியிட முடிவுசெய்தார். ஆனால், 1543-ம் ஆண்டு மே 24-ம் திகதி இவர் காலமான அன்று தான் இந்த நூலின் முதல் படி அச்சகத்திலிருந்து கிடைத்தது.

கோப்பர்னிக்கஸ் தமது நூலில், பூமி தனது அச்சில் சுழல்கிறது என்பதையும், சந்திரன் பூமியைச் சுற்றி வருகிறது என்றும் துல்லியமாகக் குறிப்பிட்டிருந்தார். பூமியும், மற்றக் கோளங்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன என்பதையும் சரியாகக் கூறியிருந்தார். எனினும், தமக்கு, முற்போந்தவர்களைப் போலவே, இவரும் சூரிய மண்டலத்தின் வடிவளவை மிகவும் குறைவாக மதிப்பிட்டிருந்தார். சுற்றுப்பாதைகள் வட்டக் கோலின் வட்டங்களாக இருப்பதாக இவர் தவறாக நம்பினார். இதனால், இவருடைய கோட்பாடு கணித முறைப்படி சிக்கலாக இருந்தது டன், துல்லியமாக இல்லாமலும் இருந்தது. ஆயினும், எதிர்பார்த்தது போலவே இவருடைய நூல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கோளங்களின் இயக்கம் குறித்து, இன்னும் துல்லியமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு டைக்கோ பிராஹி (*Tycho Brahe*) போன்ற வேறுபல தலைசிறந்த வானியலறிஞர்களை இந் நூல் தூண்டியது. டென்மார்க்கைச் சேர்ந்த டைக்கோ பிராஹி தம் ஆராய்ச்சிகளில் கண்டறிந்த உண்மைகளின் அடிப்படையில், ஜோகன்னஸ் கெப்ளர், இறுதியாகக் கோளங்களின் இயக்கம் குறித்துத் துல்லியமரன விதிகளை வகுத்தமைக்க முடிந்தது.

கோப்பர்னிக்சுக்கு 17-ம் நூற்றாண்டுகளுக்கு முன்னதாக சாமோஸ் அரிஸ்டார்க்கஸ் சூரிய மைய்க் கருதுகோளை வலியுறுத்தியிருந்த போதிலும், அந்தக் கொள்கைகளை பெரும்பகுதிப் பெருமையைக் கோப்பர்னிக்கஸ் பெற்றார். அரிஸ்டார்க்ஸ் தமது கருதுகோளை, அறிவியல் முறைப்படி பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் போதிய விவரங்களுடன் விளக்கவில்லை. கோப்பர்னிக்கஸ் இந்தக் கருதுகோளுக்கான கணிதமுறைக் கணிப்புகளை விவரமாக வகுத்தமைத்து, அதனை ஒரு பயனுள்ள அறிவியல் கோட்பாடாக உருமாற்றினார். இந்தக் கோட்பாட்டை ஊகக் கணிப்புகளுக்குப் பயன்படுத்த முடிந்தது. வானியல் உண்மைகளை இதைக்கொண்டு சரிபார்க்க முடிந்தது. 'பூமிதான் இந்த அகிலத்தின் மையம்' என்ற பழைய கோட்பாடு சரியானது தானா என்று ஒப்பு நோக்கிப் பார்க்கவும் முடிந்தது.

இந்த அண்டம் பற்றிய தமது கோட்பாட்டில் புரட்சிகரமான மாறுதலை கோப்பர்னிக்கஸ் ஏற்படுத்தியது. அத்துடன் தத்துவக் கண்ணோட்டம் முழுவதையும் அது மாற்றியமைத்தது. ஆனால், கோப்பர்னிக்கசின் முக்கியத்துவத்தை மதிப்பிடும்போது இயற்பியல், வேதியியல், உயிரியல் ஆகியவற்றைப்போன்று நடைமுறையில் வானியல் பெருமளவு பயன்படவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். கோப்பர்னிக்சின் கோட்பாட்டினைச் சிறிதும் அறிந்திராமலே ஒருவர் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியைத் தயாரித்துவிட முடியும். ஒரு காரை உற்பத்தி செய்துவிடலாம். ஒரு நவீன இரசாயனத் தொழிற்சாலையும் நிறுவிவிட இயலும். ஆனால் ஃபாரடே, மாக்ஸ்வெல், லாவாய்சியர், நியூட்டன் போன்றவர்களின் கொள்கைகளை அறிந்திராமல் இந்தக் காரியங்களைச் செய்ய முடியாது.

தொழில் நுட்பவியலின் மீது கோப்பர்னிக்கசின் நேரடிச் செல்வாக்கினை மட்டும் கருதுவது, அவருடைய உண்மையான செல்வாக்கினை முற்றிலும் புறக்கணிப்பதாகும். கலிலியோ, கெப்ளர் ஆகிய இருவரும் ஆற்றிய அரும் பணிக்கு இன்றியமையாத முன்னுரையாக அமைந்தது கோப்பர்னிக்கசின் நூலாகும். இவர்கள் இருவரும் நியூட்டனுக்க வழிகாட்டிய முக்கிய முன்னோடிகளாக விளங்கினர். இவர்களுடைய கண்டுபிடிப்புகள்தாம், நியூட்டன் தமது இயக்கவிதிகளையும், ஈர்ப்பு விதிகளையும் வகுக்கக் காரணமாக இருந்தன. வரலாற்று முறைகளில் கூறுவதாயின், கோப்பரினிக்கசின், 'விண் மண்டலச் சுழற்சி' என்ற நூல் தான், நவீன வானியலின் ஏன், நவீன அறிவியலின் தொடக்கமாகவே அமைந்தது.

> தொழில் நுட்பவியலின் மீது கோப்பர்னிக்கசின் நேரடிச் செல்வாக்கினை மட்டும் கருதுவது, அவருடைய உண்மையான செல்வாக்கினை முற்றிலும் புறக்கணிப்பதாகும். கலிலியோ, கெப்ளர் ஆகிய இருவரும் ஆற்றிய அரும்பணிக்கு இன்றியமையாத முன்னுரையாக அமைந்தது கோப்பர்னிக்கசின் நூலாகும்.


தமிழர் தொலைபேசி நிலையம்



வர்த்தகர்களுக்கு விசேட கழிவு உண்டு!

Numéro Vert (Min)
இலங்கை - 42
இந்தியா - 42

SFR
itineris
Bouygues Telecom

1 Card - 90 Frs

ALLO BOX
59, Rue d'Avron,
75020 Paris
Tel: 01 43 73 76 83 - Fax: 01 43 73 96 31
M°: Maraîchers / Buzenval
Bus: 26

புதிய படப் பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

Pub. Fra

# இரு கணங்களின் நினைவுகள்



மலர்வு: 01 - 01 - 1970

உதிர்வு: 24 - 10 - 1997

## திரு.புவனேந்திரன் சிவானந்தன் (சிவா)

ஒரு சில கணங்களே – ஆனால்
மனம் கல்லாக மாறிய கணங்கள் ஆனது
நினைவுகள் எம்மை விட்டு
தூரத்துக்கு ஓடின
எம் இனிய உறவு
எம்மை விட்டு போனதையா
இன்று வரைக்கும் கணங்களில் – பிரிந்த
உணர்வுகள் எம்மிடம் இல்லாமல் ஆனது
இருண்ட தேசத்தில் ஈராண்டு
ஆகி விட்டது
எம் மனதில் இடி விழுந்ததுபோல் – ஆன
உன் பிரிவின் தூரம்
இது வரையும் எம் மனங்கள் எண்ணவும் இல்லை.
உன் பிரிவு நிஜமானது என்று
அண்ணா என்று பாசமாகவும்
மகன் என்று செல்லமாகவும்
உச்சரித்த உதடுகள் – இன்று
வார்த்தைகள் இழந்து நிற்கின்றதே.
காலன் குறித்த மரணமா? – இது
இல்லை. ஒரு போதும் இல்லை.
காலம் ஏன் உன் வாழ்நாளைக்
குறித்தது....
ஏன் எமக்கும் உனக்கும்
காலம் இடைவெளி வைத்தது.
நெஞ்சத்தில் இருக்கும் பாரத்துக்கு
இந்தக் காலம் பதில் சொல்லுமா?
காய்ந்த விழிகளும்
சுமையான நெஞ்சங்களும்
என்றும் உன்னைத் தட்டி எழுப்புகின்றன.

என்றும் அன்புடன் குடும்பத்தினர்.

# பலதும் பத்தும்

## அதிசய பூசணி

சாதனை படைப்பது மனிதனால் மட்டுமல்ல இயற்கைகூட சாதிக்கலாம் என்பதை அமெரிக்காவிலுள்ள கிளாறன்ஸ் (Clarence) நகரில் உருவாகிய பூசணிக்காய் நிரூபித்துள்ளது. உலக பூசணிக்காய்ச் சங்க கணிப்புகளின்படி இப் பூசணிக்காயே உலகில் பெரிய அளவிலான பூசணிக்காயாகும். 1.09 மீற்றர் பெருப்பமுடைய இவ் அதிசய பூசணிக்காயின் நிறை 444 கிலோ கிராமாகும். இப்பூசணிக்காயை வளர்த்தெடுத்த விவசாயி, பில் பொபியர் (Bill bobier) விஷேடமாக ஒரு கொட்டகை அமைத்து மறைப்புக்கள் செய்தே வளர்த்திருக்கிறார். இக் கொட்டகையை 26 பாகை செல்சியல் வெப்பநிலையில் பேணுவதற்கு ஏதுவாக சிறிய சூடேற்றியும் பாவிக்கப்பட்டது. ஈரலிப்பைப் பேணுமுகமாக அரைமணித்தியாலங்களுக்கொருமுறை பூசணிக்காய் மீது தண்ணீர் தெளிக்கப்பட்டு இருந்ததும் குறிப்பிடத்தக்கது. அதிசயப் பூசணிக்காய் அறுவடை செய்த விவசாயி பில் பொபியருக்கு பரிசுத்தொகையாக 10,000 டொலர்களும் உல்லாச சுற்றுலாவுக்கான ஒரு பயணச்சீட்டும் கிடைக்கப்பெற்றது.




## 13 எண்ணும் பாரதப்பிரதமர் வாஜ்பாயும்

13 எண்ணைக் கண்டாலே பலருக்கு அலோ்ஜி, அதுவும் ஐரோப்பியர்கள் என்றால் 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி சாமி' என்பதுபோல் இவ் எண்மீது அவ்வளவு விரக்தி. அப்படிப்பட்ட 13 எண் பாரதப் பிரதமர் வாஜ்பாய்க்கு அதிர்ஷ்ட எண்ணாகிவிட்டது. 1996ல் நடைபெற்ற தேர்தலில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மைப் பலத்தைப் பெறாத நிலையில் வேறு கட்சிகளுடன் இணைந்து பலத்தைக் காட்டுவதாகக்கூறி பிரதமராகப் பதவியேற்றார். ஆனால் அவரின் கனவு 13 நாட்களில் கலைந்துவிட்டது. 13–ம் நாள் பிரதமரான வாஜ்பாய் மீண்டும் 1997–ம் ஆண்டு தேர்தலில் சற்றுக்கூடுதலான இடங்களைப் பெற்றுக் கூட்டரசாங்கத்தை அமைத்துப் பிரதமரானார். இதுவும் நீண்டநாள் நீடிக்கவில்லை. ஒருசில கட்சிகள் காலைவாரிவிட்டதால் 13 மாதங்களே அவரால் பிரதமராக நீடிக்க முடிந்தது. அண்மையில் நடைபெற்ற தேர்தலில் பெரும்பான்மை பெற்ற பாரதிய ஜனதாக்கூட்டணி ஒருதலைப் பட்சமாக இவரையே மீண்டும் பாரத நாட்டின் பிரதமராக்கியுள்ளது. மூன்றாவது தடவையாகப் பதவியேற்க வாஜ்பாய் தெரிவுசெய்த திகதி 13.10.99 ஆகும். புதிய அரசாங்கம் அமரவிருக்கும் பாராளுமன்றமும் கூடப்போவது 13–வது பாராளுமன்றமாகும். மொத்தத்தில் 13 எண் புதிய பாரதப் பிரதமருக்கு அதிர்ஷ்ட எண்ணாகிவிட்டது. தமிழ் ( T A M I L )

4 1 4 1 3 என்பதுகூட 13 எண்ணிக்கையான ஒரு சொல்லாய் இருப்பதால் தமிழின் அதிர்ஷ்டம் எப்படி அமையப்போகிறது?

## ஆட்டைக்கொன்றவருக்கு ஐந்துவருட சிறை

ஒலிவியர் கன்டலேரோ இவர் பிரான்சின் வட பகுதியில் பேக்கரியொன்றின் ஊழியர், 45 வயதானவர். 1993–ம் ஆண்டில் தெறேஸ் எனும் பெண்ணைத் திருமணம் முடித்தபின் தம்பதியர், குதிரைகள், நாய்கள், பூனைகள் ஆடுகள் என ஏராளமான மிருகங்களுடன் ஒரு நிலப்பகுதியை வீட்டுடன் வாங்கி வாழ்க்கை நடத்தத் தொடங்கினார்கள். ஒலிவியர் வீட்டினை வாங்கியபோது அங்கு வீடற்ற ஒருவர் காணியின் வெளியே அமைந்திருந்த ஒரு சிறிய வீட்டில் வாழ்ந்து வந்தார். காணியில் சிறு வேலைகளைச் செய்வதன் மூலம்தான் தொடர்ந்து அங்குவாழ ஒலிவியேர் அவருக்கு அனுமதி வழங்கியிருந்தார். ஆனால் அடிக்கடி இருவருக்கும் தகராறுகள் வருவதுண்டு. இருவரும் மோதிக்கொள்வார்கள். ஒருமுறை சண்டையிட்டபோது அந்த இடத்தில் வயதானவர் மூச்சுத்திணறி இறந்துபோனார்.

இறந்தவரை ஒலிவியேர் தனது காணிக்குள்ளேயே புதைத்தும்விட்டார். விசயம் அடங்கிப்போனது. 1997–ம் ஆண்டு அவரது மனைவி தெறேஸ் வாக்குவாதப்பட்டுக்கொண்டு ஒரு பதினேழு வயது இளைஞனுடன் சென்றுவிட்டாள். ஒலிவியர் இப்போது பயப்படத் தொடங்கினார். தான் செய்த கொலை ஒரே ஒருவருக்கு மட்டும்தான் தெரியும். ஆனால் அவரும் இப்போது தனக்கு எதிரியாகிவிட்டார். இந்நிலையில் பின் விவகாரம் வெளியே வந்தால் ஆபத்து என எண்ணியவர் தான் புதைத்த அந்தப் பிணத்தைக் கிண்டியெடுத்து அழித்துவிட்டார். பின் அந்த இடத்தில் தனது ஆடுகளில் ஒன்றினைக் கொன்று புதைத்தும்விட்டார். இப்போது தான் அவருக்கு நிம்மதி. ஆனால் ஒருவருடம் சென்றிருந்த நிலையில் ஒருநாள் அவரது வீட்டு வாசலில் பொலிசார் நின்றிருந்தனர். அவரது காணியை முழுமையாகச் சோதனையிடப் போவதாக பொலிசார் கேட்டபோது ஒலிவியர் எந்தவித மறுப்பும் கூறவில்லை. பொலிசாரும் காணிமுழுவதும் சல்லடையிட்டுத் தேடியும் எந்த மனித சடலத்தையும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் உடல் புதைக்கப்பட்டதாக கூறப்பட்ட இடத்தில் ஒரு ஆட்டின் எலும்புக்கூடுதான் இருந்தது. பொலிசார் அந்தவிடத்து நபரை ஒலிவியர் கொலைசெய்தார் என்பதில் உறுதியாக இருந்தார்கள். சாட்சியங்களும் இருந்தன. ஆனால் உடல் எங்கே? அவரைக் கேட்டபோதுதான் கொலை செய்யவில்லை என்றே மறுத்துவந்தார். அவர்மீது வழக்குப் போடப்பட்டது. விசாரணை நடந்தது. இறுதியாக சடலம் கண்டுபிடிக்கப்படாமல் ஆனால் அவர் குற்றம் செய்ததை உறுதி செய்து ஐந்து வருடம் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது. ஆக ஒலிவியர் கொலை செய்ததற்குச் சாட்சியமாக இருந்தது. ஆட்டின் எலும்புக்கூடுதான். ஆட்டைக் கொலைசெய்து புதைத்ததற்கு ஐந்து வருடங்கள் சிறைத்தண்டனையை ஒலிவியர் பெற்றுக்கொண்டார்.

## அதிர்ச்சியில் மரணமடைந்த கொள்ளையர்

அதிர்ச்சி என்பது ஆபத்தானதுதான். இந்த நூற்றாண்டில் அதிர்ச்சி எந்தத்துறையையும் அச்சுறுத்தாமல் விடவில்லை. அண்மையில் ஜேர்மனியில் நடந்த விவகாரம் ஒன்று இது. கொள்ளையர் ஒருவர் அதிர்ச்சியில் வீதியில் மரணமானார். 45 வயதான ஒருவர் வங்கியொன்றைக் கொள்ளையிட ஆயுதத்துடன் நுளைந்திருக்கின்றார். முகமூடியணிந்தபடி காசாளரை நெருங்கியவர் ஒரு வாடிக்கையாளரையும் மிரட்டிப் பணத்தை பறித்துக்கொண்டார். பின் ஒருபெட்டி நிறைய பணத்துடன் வெளியேறியவர் தனது காரிலேறித் தப்ப முயன்றுள்ளார். அப்போது குறுக்கே வந்த காரொன்றுடன் மோதியவர் பின் ஒருவாறு வேறு வழியால் காரை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். சுமார் அரைமணி நேரத்தில் பொலிசாருக்கு ஒரு செய்தி வந்தது. ஒரு வீதியின் தரிப்பிடத்தில் காருக்கு அருகில் ஒருவர் இறந்து கிடப்பதாக அந்தச் செய்தி தெரிவித்தது. கொள்ளையரைத் தேடிக்கொண்டிருந்த பொலிசாருக்கு இது வேறு தலையிடி. ஒரு அணி அந்தத் தரிப்பிடத்தை அடைந்தபோது கீழே விழுந்து கிடந்தவர்தான் கொள்ளையர் என்பதுவும் அவர் அதிர்ச்சியினால் மரணமடைந்துள்ளார் என்பதுவும் உறுதியாகியது. அவர் கிடந்த இடத்திற்கு அருகிலேயே பணப் பெட்டியும் கண்டுபிடிக்கப்பட்டது.

## மூன்று தினங்களாக நிரம்பிவழிந்த சூரிச் விமான நிலையம்

சுவிற்சர்லாந்தில் சூரிச், ஜெனிவா ஆகிய இரு சர்வ தேச விமான நிலையங்கள் இருந்தபோதும், செயற்பாட்டளவில் சூரிச் விமானநிலையமே அதிமுக்கிய போக்குவரத்து விமான நிலையமாக விளங்குகிறது. ஒக்டோபர் 8,9,10 ஆகிய மூன்று தினங்களிலும் 230,000 பயணிகள் பறந்து சென்றதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இதுபோன்ற ஒரு பெரிய தொகை எந்தவொரு கிழமை முடிவிலும் எட்டப்படவில்லை. இக்காலப்பகுதி சுவிற்சர்லாந்தின் பெரும்பாலான மாநிலங்களுக்குரிய இலையுதிர் கால விடுமுறையின் முதலாவது கிழமையாகும். ஆனால் கடந்த இலையுதிர்கால விடுமுறையின் முதல்கிழமை முடிவில் 215000 பயணிகளே பறந்து சென்றனர். 8-ம் திகதி வெள்ளிக்கிழமை 70,000 பயணிகளும் (கடந்த வருடம் 65000) 9-ம் திகதி சனிக்கிழமை 78,000 பயணிகளும் (கடந்த வருடம் 73,000) 10-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 82,000 (கடந்தவருடம் 77,000) பயணிகளும் பறந்து சென்றனர்.

முக்கிய விடுமுறைக்காலமாகக் கருதும் கோடைகாலப் பகுதியில் இவ்வருடம் 196000 பயணிகளே முதல் கிழமை முடிவில் பறந்து சென்றனர். அப்போது 854 பயணிகள் விமானங்கள் சேவையில் ஈடுபட்டன. ஆனால் இப்போது 835 விமானங்களே ஈடுபட்டன. தற்போது சேவையில் ஈடுபடும் விமானங்களின் தொகை குறைவானாலும் இருக்கைகள் அதிகரிக்கப்பட்டு வேலைப்பழுக்கள் குறைக்கப்பட்டிருப்பதாக விமானநிலைய பேச்சாளர் மார்க்சிகல் (Marc Siegel) தெரிவித்திருக்கிறார்.

எதிர்பார்த்திராத இப்பயணிகள் அதிகரிப்பால் விமானப் போக்குவரத்தில் தாமதங்கள் நிலவியதையும் அவதானிக்க முடிந்தது. ஞாயிற்றுக்கிழமை பாங்கொக்கிலிருந்து வரவேண்டிய விமானம் 8 மணித்தியாலங்கள் தாமதித்தது. அதே போல் எகிப்து, பன்ஜாலுக்கா, பல்மா — மலாக்கா ஆகியவற்றிலிருந்தும் 3 தொடக்கம் 4 மணித்தியாலம் வரை தாமதித்தே வந்தன. நிரந்தர சேவையிலுள்ள விமானங்கள் கூட 1 மணித்தியாலத்துக்கு மேல் தாமதித்துக்கொண்டன.. விமான நிலையத்தில் பயணிகள் நெரிசல், தாமதங்கள் ஏற்பட்டபோதும் வீதிப்போக்குவரத்தோ, தொடருந்து, பேருந்து சேவைகளோ எதுவித தங்குதடைகளுமின்றி சர்வசாதாரணமாக நடைபெற்றன.

- K.M.S.ராஜி—சுகுமாரன்



# ஜே.என்.டிக்ஸிற்றின் வாக்குமூலம் 8

## 'அசைன்மென்ட் கொழும்பு' என்ற நூலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டது.

திரு. புல்ஜீசுடைய இப் பேச்சுக்கள் ஓர் தந்திர உபாயங்களுடைய அடிப்படை என எண்ணிய யான், உடன் தொலைபேசியூடாக ஜனாதிபதி திரு.ஜெயவர்த்தனாவைக் கேட்டபொழுது அவர், சிரித்துக்கொண்டு, இவ்விருந்தை திரு. புல்ஜீஸ் அவர்கள் திரு.பண்டாரிக்குக் கொடுக்க விரும்பியதாகவும், அவ்விருந்தில் திரு. எஸ்மண்ட்டும், திரு. ரவியும் இணைந்து பங்கேற்பார்கள் எனவும், உங்களின் பங்கேற்பை நான் ஒருபொழுதும் தடைசெய்யவில்லை எனவும் கூறினார். ஜனாதிபதியுடன் நான் நடாத்திய பேச்சுக்கள் முடிந்த பிற்பாடு, நான் திரு. புல்ஜீசுடன் தொடர்பு கொண்டு நடந்ததைக் கூறி, என்னை இவ்விருந்துக்கு அழைக்காவிடில் நான் திரு. பண்டாரி விருந்துக்கு வருவதைத் தடைசெய்வேன் என உணர்த்தியதுடன், அவர் வெகுண்டு என்னையும் இவ் இரகசிய விருந்துக்குச் சமூகம் அளிக்கும்படி மிகத் தயவாக வேண்டினார்.

நான் இவ் விருந்திற்குச் சமூகம் அளித்தேன். நாம் எல்லோரும் சிறிது மதுபானம் அருந்திக்கொண்டிருக்கும் வேளையில், திரு.புல்ஜீஸ் அவர்கள், திரு. ரவி , ஜெயவர்த்தனா அவர்களையும், திரு.பண்டாரி அவர்களையும், எஸ்மொண்ட் விக்கிரமசிங்க அவர்களையும் அழைத்துச்சென்று வேறு ஓர் தனிப்பட்ட அறையில் பேச்சுவார்த்தைகளை இரகசிய முறையில் நடாத்தினார். அப்போது என்னருகே இருந்த திரு. ஒபயசேகரா என்பவர் என்னுடன் தமாஷாக, இவ் இரகசியச் சந்திப்பு, திரு.ரவி ஜெயவர்த்தனா இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியை டெல்லியில் சந்திக்க ஏற்படுத்தும் ஓர் திட்டமாகும் எனக்கூறினார். இச் சந்தர்ப்பத்தில் தமிழர் பிரச்சினையில் திரு.ரவி ஜெயவர்த்தனாவுடனான இந்திய பிரதமரின் சந்திப்பு ஓர் நல்ல முடிவை ஏற்படுத்தும் என்றால், திரு.ரவி ஜெயவர்த்தனாவின் முயற்சிகள் நல்லதே என திரு.பண்டாரி கருதினார்.



திரு. பண்டாரி அவர்கள் இந்தியா செல்லும் வழியில் சென்னையில் உள்ள சிறீலங்காத் தமிழ் குழுக்களுடனே ஓர் சந்திப்பு ஏற்படுத்த இருந்தார், அத்தோடு அவர் என்னையும் அவருடன் சென்னைக்கு வரும்படி அழைத்தார். சென்னையில் உள்ள ராஜ்பவனில், தமிழர் கூட்டணியைத் தவிர்ந்த ஏனைய தமிழ் குழுக்களுடன் பேச்சுக்கள் நடைபெற்றன. அப்போதுதான் முதல் முதலாக தமிழ் போராளிக்குழுக்களையும், திரு.பிரபாகரன் அவர்களையும் சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. திரு. பண்டாரி அவர்கள் தாம் சிறீலங்காவில் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் விபரப்பட்டியலை எல்லோருக்கும் தெளிவாக விளக்கினார். அவரின் கணிப்பின்படி, 'இப்போது சிறீலங்கா அரசாங்கம் தருவதை எடுங்கள். பின் காலப்போக்கில் உங்கள் திட்டங்களை மேற்படுத்த இடம் உண்டு' என விபரித்தார். ஆனால் தமிழ் போராளிகள் குழுக்கள், 'சிறீலங்கா அரசு தம்மைப் பல தடவைகள் ஆசைகாட்டி மோசம் செய்துவிட்டது' எனவும், ஓர் நல்ல முடிவு ஏற்படின், 'இந்தியா இதற்குப் பிணைநின்று செயலாற்ற வேண்டும்' எனச் சுட்டிக்காட்டினார்கள்.

திம்பு மாநாட்டில் நடைமுறைகளின் பொழுது, தமிழர்களின் செயல்முறைப்பாடும், சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர்கள் நடந்த முறையும் திரு.பண்டாரி அவர்களுக்கு விரக்தியையும், ஏமாற்றத்தையும் சிறீலங்காத் தமிழர்கள் மீது கொடுத்ததும் அல்லாமல், சிறீலங்கா அரசும், சிறீலங்காத் தமிழ் குழுக்களுக்கும்மேல் உள்ள பிடிவாத குணங்களையும், அவர்களது பேச்சுக்களில் நிதானமற்றதன்மையையும் நன்கு உணர்த்தின.

பின்பு அன்று மாலை நாம் தனிமையில் இருக்கும்பொழுது, நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கையைத் திரு. திருச்செல்வம் அவர்களிடம், நான் கொழும்பு திரும்பும்பொழுது கொடுக்கும்படி பணித்தார். நான் கொழும்பு திரும்பினேன், 'திரு. ஹரி ஜெயவர்த்தனா சிறீலங்காப் பிரதிநிதியாக திம்புவிற்கு மறுபடியும் புறப்பட்டுள்ளார். ஆனால் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஓர்வித பயனும் காணவில்லை என்பது ஓர் மனம் வருந்தக்கூடிய செய்தி. திரு. ஹரி ஜெய்வர்த்தனா திம்புவில், இப்பேச்சுவார்த்தைகளின் மூலம் ஓர் இணக்கத்தைக் காணமுயலாது, சிறீலங்கா அரசுக்கும், தமிழ் இனத்துக்கும் ஏற்பட்ட ஓர் நீதிமன்றத்தில் போடப்பட்ட வழக்கைப்போல் வாதாடியது விந்தையிலும் விந்தையாக இருந்தது.'

திரு. ஹரி ஜெயவர்த்தனா அவர்களைத் திம்புவால் ஆவணிமாதம் திரும்பும் பொழுது டெல்லி வரச்சொல்ல ஓர் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர் இவ் அழைப்பின் பொழுது, திரு. ராஜீவ் காந்தியையும் , அவரது அதிகாரிகளையும் சந்தித்து, சிறீலங்கா வாழ் தமிழ் இனத்துக்கு ஏற்றமுறையில் ஓர் பட்டியலைத் தயாரித்து, திரு. ஹரி ஜெயவர்த்தனா ஊடாக சிறீலங்கா அரசாங்கத்திடம் அளித்து, அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டதன்பின், தமிழ் குழுக்களுடன் இவ் ஏற்றுக்கொண்ட பிரதியைக் கொடுத்து சுமூக்மாக இப்பிரச்சினைக்கு ஓர் தீர்வுகாண விரும்பினார். இப்பிரதி திரு. ஜெயவர்த்தனாவிடம் கொடுக்கப்பட்டது. அவர் இப்பிரதியைத் தான் பாராளுமன்றத்திலும், மந்திரி சபையிலும் சமர்ப்பிப்பேன் என உறுதிசெய்தார். இவை அங்கு சம்மதத்தைப் பெறுமாயின், தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க ஓர் நல்லவழிகளை வகுக்கும் என்பதில் ஐயமில்லை. கொடுக்கப்பட்ட இப்பிரதியில் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இணைப்புப்பற்றியோ, தமிழ் மாகாணங்களின் ஆட்சிக் காலத்தில் ஏற்படும் செலவுகள் பற்றியோ, காணிக்கட்டுப்பாடுகள் பற்றியோ அன்றி சிறீலங்காவில் உள்ள வடமத்திய மாகாணத்தில் வாழ்ந்த தமிழரை திரும்பக்குடியேற்றும் திட்டத்தைப் பற்றியோ ஓர்வித விளக்கங்களும் இவ் அறிக்கையில் காணாதது வருந்தவேண்டியதாய் இருந்தது.

இரண்டாவது சுற்றுத் திம்பு மாநாடு, இந்திய வெளிநாட்டு அமைச்சு மிகக் கடுமையாகத் தமிழ்க் குழுக்களுடன் நின்றபடியால் தோல்வியில் முடிந்தது மட்டுமல்ல, இத் தமிழ் குழுக்களில் யாரேனும் இந்தியாவில் நிற்கவோ, அன்றி இந்தியா ஊடாகப் பயணம் செய்வதோ மறுக்கப்பெற்றது; முக்கியமாக மனித உரிமைகள் தொண்டர் திரு. சந்திரகாசனின் விசா இந்தியாவால் மறுக்கப்பெற்றது.

திம்புவில், இரண்டாவது சுற்றுப்பேச்சுவார்த்தைகளின் பிரதியைக் கொடுத்ததன் பிற்பாடு புரட்டாசி 4-ம் திகதி, சிறீலங்கா ஜனாதிபதியும், வெளிவிவகார மந்திரி திரு. கமீதும் இணைந்து, இத் திட்டங்களை ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும், காரணம் இவைகளை ஏற்றுக்கொண்டால் இத் தீவை இரு துண்டுகளாகப் பிரிக்க, முதல் கட்டமாகத் தமிழருக்கு ஓர் சாதகநிலையை ஏற்படுத்த வாய்ப்பு உண்டு எனச் சுட்டிக்காட்டியிருந்தது. நான் இங்கு நடைபெற்றவைகளை உடன் இந்தியாவுக்குத் தெரியப்படுத்தினேன்.

என்னைப் புரட்டாசி 7-ம் திகதி இந்தியா வருமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்தது. நான் டெல்கியில் புரட்டாசி 7 தொடக்கம், புரட்டாசி 14 மட்டும் நின்றேன்.

*(வளரும்)*

தொகுப்பு:
சி.சொக்கநாதன் பிரான்ஸ்

# தமிழர் நடந்த பாதை

## 14

## தமிழோடு தமிழாய் வாழும் ஆபிரிக்க மொழிகள்-2

பேரா.கு.அரசேந்திரன்



கடலுள் மூழ்கிப்போன குமரிக் கண்டத்துடன் மிக நெருக்கமாக இருந்த மிகப் பெரிய நிலப்பரப்பே ஆபிரிக்கக் கண்டம். தமிழும் தமிழினமும் குமரிக் கண்டத்தில் தோன்றி நன்கு செழித்து வளர்ந்த பிறகுதான் இரு கண்டங்களுக்கான இணைப்பு பிரிந்திருக்கவேண்டும்போல் தெரிகிறது.

எகிப்திய சுமேரிய சிந்துவெளி நாகரிகங்களின் வழிப்பட்ட நாகரிகமாகத் தமிழர் நாகரிகத்தைக் காட்டி இருக்கும் வரலாற்றாசிரியர்களின் பார்வை, தலைகீழ் வரலாற்றுப் பார்வைக்குரியது என முன்பு காட்டினோம். எத்தனை ஆயிரம் ஆண்டிற்கு முந்தையது என்று கணக்கிடவே முடியாத காலப்பகுதியில் குமரிக்கண்டத்தில் தோன்றிய மொழி தமிழாகும். இல்லையென்றால் எத்தனை ஆயிரம் ஆண்டுகட்கு முன் ஆபிரிக்கக் கண்டம் குமரிக் கண்டத்தொடர்பை இழந்தது என்று சொல்ல முடியாத நிலையில் தமிழ்மொழிக் கூறுகளும் தமிழர் நாகரிகக் கூறுகளும் எப்படி ஆபிரிக்கக் கண்டத்தில் கலந்து நிறைந்திருக்க முடியும்.

ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடுகளாகப் பிரிந்திருக்கும் ஆபிரிக்கக் கண்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்பட்டன என்று முன்பே குறிப்பிட்டோம். குமரிக்கண்டத்திலிருந்து கட்டம் கட்டமாக மக்கள் ஆபிரிக்கக் கண்டத்தில் பல்வேறு காலகட்டங்களில் பிரிந்து பிரிந்து சென்றதால்தான் இப்படி ஆபிரிக்க மொழிகள் பலப்பலவாகப் பிரிதற்குக் காரணமாயின என நாம் கருதிப்பார்க்கலாம். அரசும் ஆட்சியும் மிக வலிமையாய்த் தோற்றமெடுத்த காலம், மாந்தகுல வரலாற்றில் மிகப் பிற்காலம் சார்ந்ததாகவே இருக்கவேண்டும். அரசும் ஆட்சியும் மக்களை இணைக்கும்போதுதான் நாடும் மொழியும் பிரிவுபடாமல் பிளவுபடாமல் ஒன்றுபட்டதாக உருவாக முடியும். வரலாற்றுக் காலத்தில் இந்தியாவில் வழங்கிய மொழிகள் சிலவே. வாழ்ந்த இனங்களும் சிலவே. அப்படிப்பட்ட நிலையில்கூட இந்தியா இன்று பல்இன பல்மொழி மாநிலங்களாகப் பிரிந்து ஒருநாடு என்ற பெயரால் குறிக்கப்பட முடியாமல் இருக்கின்றது. இந்த நிலையில் குமரிக்கண்டத்தில் தோன்றிய ஒரு தொன்மொழி மிக மிகப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் கண்டம் விட்டுக் கண்டம் சென்று சிதைந்து பலப்பல மொழிகளாகப் பலப்பல இனங்களாகப் பலப்பல நாடுகட்கு உரியதாகச் சிதைந்திருப்பது வரலாற்றில் மிக எளிதாக நிகழக்கூடியதே.

மேற்சொன்ன உள்முக நோக்கின்படி இன்று ஆபிரிக்க மொழிகளையும் தமிழையும் இணைத்து நோக்கும்போது இரண்டிற்கும் இடையில் உறவுகள் இருப்பதாகத் தெரிவதே ஓர் வியப்பிற்குரிய வரலாற்றுப் பதிவாகும்.

திரு. சாத்தூர் சேகரனின் ஆபிரிக்க மொழிகள் ஓர் அறிமுகம் என்ற நூலின் துணைகொண்டு தமிழ்-ஆபிரிக்க மொழி உறவுகளை இப்பொழுது காண்போம்.

கீழே தமிழோடு ஒப்புமை காட்டவுள்ள ஆபிரிக்கமொழிகளில் Swahil, Serer, Shillak, Nilotic, Berber, Yeruba, Somali ஆகியன குறிப்பிடத்தகுந்தன.

Swahil என்னும் மொழி, புருண்டி (Burundi) சியர்(Zaire) ருவண்டா (Rwanda) தான்சானியா (Tanzania) உகண்டா (Uganda) சாம்பியா (zambia) சிம்பாவே (Zimbabwe) கோமோரா (Comoros) கென்யா (Kenya) ஆகிய நாடுகளில் பேசப்படும் மொழிகளில் ஒன்று.

'Serer' என்னும் மொழி காம்பியாவிலும் (Gambiaa) செனகலிலும் (Senegal) வேறு சில நாடுகளிலும் பேசப்படுவதாகத் தெரிகிறது. Shilluk என்ற மொழி எத்தியோப்பியா (Ethiopia) மற்றும் சூடான் (Sudan) ஆகிய நாடுகளிலும் பேசப்படும் மொழிகளில் ஒன்று. Nilotic நைல் நதிப்பகுதி நாடுகளில் பேசப்படும் மொழியாகும்.

Berber லிபியா, மொராக்கோ, அல்ஜீரியா, துனீசியா ஆகிய நாடுகளின் மொழிகளில் ஒன்று. Yeruba நைஜீரியாவின் மேற்குப் பகுதியில் நான்கு மில்லியன் மக்களால் பேசப்படும் மொழி.

Somali சோமாலி நாட்டு மொழிகளில் ஒன்று.

| தமிழ் | ஆபிரிக்க மொழிகள் | |
|---|---|---|
| நீம் (முன்னிலைப்பன்மை) | Neem | (Swahil) |
| அ (அங்கே) | Ha | (Swahil) |
| இ (இங்கே) | hi | (Swahil) |
| உ (உங்கே,இடையில்,மேலே) | hu | (Swahil) |
| கோணம் | Kona | (Swahil) |
| முட்டை | Muy-ai | (Swahil) |
| சக்கரை | sukari | (Swahil) |
| சாயம் | Chai | (Swahil) |
| எலுமிச்சை | Enunichai | (Swahil) |
| சூப்பு | Supu | (Swahil) |
| வாத்து | Baata | (Swahil) |
| குக்குடம் (கோழி) | kuku | (Swahil) |
| ஆகாரம் | achan | (Swahil) |
| கோயில் | kokalu | (Swahil) |
| குளித்தல் | Kuogelan | (Swahil) |
| தும்பிக்கை | Tumbo tembo | (Swahil) |
| நாகம் | nyoka | (Swahil) |
| களர் (நிலம்) | ghala | (Swahil) |
| மலையம் (பெருமலை) | Mliam | (Swahil) |
| கோந்து | gundi | (Swahil) |
| கோல் (எழுதுகோல்) | Kalamu | (Swahil) |
| கும்பா (Big vessel) | Kombe | (Swahil) |
| பெட்டி | Berti | (Swahil) |
| யானை | Fani | serer |
| பாம்பு | langoo | serer |
| கோணம் | Koon | serer |
| அது | achu | Shilluk |
| யான் (I) | yaan | Shilluk |
| நீ (You) | niy | Shilluk |
| நாம் (We) | naaw | Shilluk |
| வீடு | woodu-wod | Shilluk |
| காய் (hear) | kaih | nolitic |
| மருவு (கூடுதல்) | mare | nolitic |
| கண் (eye) | { kanne-me, kanno-no, kan-kon } | |
| கழுவு | kalu-tak | nolitic |
| காய்- (காய்ச்சு) | kaaz | Berber |
| கால் (கருமை) | koll, kill | Berber |
| வெள்ளை | bell-ai' | Berber |
| புகை | abuha | Berber |
| ஆறு | ru,are | Berber |
| சூப்பு (to drink) | su | Berber |
| உரி(தோல்) | erhi | Berber |
| எல் (light) | el | Berber |
| நெய் | nel | Berber |
| அப்பா | labba,laba | yeruba |
| அவ்வை (பெண்) | ayo | yeruba |
| இல் (வீடு) | ile | yeruba |
| யாய் (அம்மா) | கூyyai | yeruba |
| நான் (தன்மை ஒருமை) | naan-n | yeruba |
| அழல் | alal-balal | somali |
| எல் (ஒளி, சூரியன்) | ile (cod) | somali |
| ஆறு | ari | somali |
| கொழுப்பு | gab-il | somali |

*(வளரும்)*

## ஆரம்ப தோல்வியிலும் இறுதியில் வெற்றியை அண்மித்த இந்திய அணி

இந்திய, நியுசிலாந்து அணிகளுக்கிடையில் 14.10.99 மொகாலியில் முடிவுற்ற முதலாவது டெஸ்ட் போட்டி இந்திய அணியை வெற்றிக்கு அண்மிக்க வைத்தது. முதல் இனிங்சில் 83 ஓட்டங்களை எடுத்துக்கொண்ட இந்திய அணி முதலாவது இனிங்சில் நியூசிலாந்து அணியை ஓரளவு திருப்திகரமான அளவுக்குள் மட்டுப்படுத்தியது. நியுசிலாந்து 215 ஓட்டங்கள் எடுப்பதற்கு ஏதுவாக ஸ்பெயர்மன் 51 ஓட்டங்களைப் பெற்றார். சுழல்பந்து வீச்சுக்கு ஏதுவாக இந்திய ஆடுகளத்தில் வேகப்பந்துவீச்சாளர் சிறிநாத் அபாரமாக வீசி 6 விக்கட்டுகளைச் சாய்த்தார். முதல் இனிங்சில் கோட்டை விட்ட இந்திய அணி மீண்டும் துடுப்பாடிய போது நிதானமாக ஆரம்பித்தது. ஆமை வேகத்தில் ஓட்டங்கள் உயர்ந்தாலும் விக்கட்டுகள் காப்பாற்றப்பட்டன. ஆரம்ப சோடி ரமேஸ், காந்தி அனுபவமான ஆட்டங்காரார்கள்போல் பொறுமையாக ஆடி அரைச் சதங்களாக முறையே 73, 75 ஓட்டங்களை எடுத்து நல்ல அடித்தளத்தை ஏற்படுத்திச் செல்ல. இந்திய அணியின் துடுப்பாட்ட மலைகளான ட்ராவிட், டெண்டுல்கர் அடித்தளத்தை பலமேற்றுவது போன்று திறமையாக ஆடி சதங்களாக முறையே 144, 126-ஐ குவித்தனர். ட்ராவிட் ஆட்டமிழக்க களம்புகுந்த கங்குலியும் தனது பங்கிற்காக விரைவாக அடித்தாடி 64 ஐப் பெற்றபோது இந்திய அணி 505/3 என்ற நிலையில் தனது ஆட்டத்தை நிறுத்தி நியுசிலாந்தை ஆடப் பணித்தது. ராவிட் பெற்ற இச்சதமானது அவரின் 6-வது சதமாக இருந்தாலும் தாய்நாட்டில் பெறும் முதலாவது சதமாகும். டெண்டுல்கருக்கு இது 20 ஆவது சதமாகும்.

374 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்றநிலையில் தொடங்கிய நியுசிலாந்து ஆரம்பத்திலிருந்தே தற்காப்பு ஆட்டத்தைக் காட்டியதே தவிர வெற்றியை நோக்கி நகரவில்லை. இந்திய பந்து வீச்சாளர்கள் அனைவருமே வெற்றிக்காக பலமாக உழைத்தபோதும் நியுசிலாந்தின் 7 விக்கட்டுக்களுக்கு மேல் வீழ்த்தமுடியவில்லை. அணித்தலைவர் பிளமிங் 73 ஓட்டங்களைப் பெற்று அணியின் தோல்வியைக் காத்துக்கொண்டார். ஆட்ட நேர இறுதியில் நியுசிலாந்து 251/7 நிலையில் இருந்தபடியால் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது. சிறிநாத் ஆட்ட நாயகனானார்.

## இரட்டையர்கள் ஈட்டிய அவுஸ்திரேலிய வெற்றி

உலகசம்பியன் அவுஸ்திரேலியா சிறீலங்காவின் சந்தித்த தோல்விகளுடன் சிம்பாவேக்குள் நுழைந்தது. 14.10.99 ஆரம்பமாகிய ஒரே ஒரு டெஸ்ட்டுக்கான போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சிம்பாவே முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்பத்தில் 37 ஓட்டங்களுக்குள் முதல்நிலை 4 வீரர்களை சிம்பாவே இழந்தபோதும் அன்ரி புளோவர், ஜோன்சன் சற்று நிதானித்து அணியின் மானத்தைக் காத்தனர். ஜோன்சன் 75 ஓட்டங்களைப் பெற்றிருக்க சிம்பாவே 194 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்காடிய அவுஸ்திரேலியாக்காக இரட்டையர்களான மார்க், ஸ்ரிவ் வோவ் சகோதரர்கள் தங்கள் தனித்துவமான ஆட்டத்தை மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளனர். மார்க்வோவ் 90 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோதும் அணித்தலைவர் ஸ்ரிவ் வோவ் தளராது ஆடி ஆட்டமிழக்காமல் 151 ஓட்டங்களைப் பெற்றார். அணித்தலைவர் ஆட்டத்துக்கு ஒத்துழைத்த பந்துவீச்சாளர் பிளமிங் 65 ஓட்டங்களைத் துடுப்பாடிப் பெற்றார். கங்காரு தேசம் காட்டும் பலமான நிலையாக 422 ஓட்டங்கள் குவிக்கப்பட்டன. சிம்பாவே வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெக் 5 விக்கட்டுகளை வீழ்த்தினார். இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்கவேண்டிய சிம்பாவே ஆரம்பத்தில் மிக நிதானமாக ஆடி 200/2 என்ற உறுதியான நிலையை எடுத்தது. ஆனால் இடைநிலை, பின்நிலை தடுப்பாட்டம் திடீர் என கோட்டைவிட்டதால் 232 ஓட்டங்களுக்குள் அனைவரும் ஒடிந்துவிட்டனர். 4-ம் நாள் ஆட்டம் முடியும் தறுவாயில் வெற்றிக்கான வெறும் 5 ஓட்டங்களை மூன்று பந்தில் அவுஸ்திரேலியா பெற்றுக்கொண்டதால் 10 விக்கட் வித்தியாசத்தில் மிக இலகுவான வெற்றி கைக்கெட்டியது. அணித்தலைவர் ஸ்ரிவ் வோவ் சிறப்பாட்டக்காரனாகத் தெரிவானார்.

## வில்லியம்ஸ் சகோதரிகளை எதிர்கொள்வதில் கிங்கிஸ் திண்டாட்டம்

மாட்டீனா கிங்கிஸ் முதலாம் நிலையில் இருந்தாலும் புயலாக புதுவீச்சுப்பெற்று வளர்ந்து கொண்டிருக்கும் வில்லியம்ஸ் சகோதரிகளை எதிர்கொள்வதில் ஏகப்பட்ட பிரச்சினைகள். வீனூஸ், சரினா வில்லியம்ஸ் சகோதரிகளின் ஆட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் தோல்வியைத் தழுவி வரும் கிங்கிஸ்க்கு தனது சொந்த நர்ட்டு ரசிகர்கள் முன்னிலையிலும் இவ்வாறான ஒரு அவமானம் ஏற்பட்டுள்ளது. 'Swiss Indoors' பெண்களுக்கான ஒற்றையர் டெனிஸ் இறுதியாட்டத்தில் வீனூஸிடம் அகப்பட்டு 6:3, 6:4 என கிங்கிஸ் தோல்வியைச் சுமக்கவேண்டி ஏற்பட்டது. சூரிச் குளோட்டனில் நடைபெற்ற இப்போட்டி மூலம் வீனூஸ் வில்லியம்ஸ் 150,000 டொலர்களை பரிசுத்தொகையாகப் பெற்றுக்கொண்டார்.

## சிறந்த இளைஞனுக்கான விருதினை ரமேஸ் பெற்றார்

இந்திய கிரிக்கட் அணியின் ஆரம்பத்துடுப்பாட்டக்காரனான தமிழக வீரன் ரமேசுக்கு புதுவை கவர்னர் ரஜினிராய் சிறந்த இளைஞன் விருதினை வழங்கியிருக்கிறார். இவ்விருதை கவர்னர் வழங்கியபோது ரமேஸ் அங்கு சமூகமளிக்கவில்லை. இருப்பினும் ரமேசின் தந்தை சடகோபன் அங்கு சென்று விருதினைப் பெற்றுக்கொண்டார்.



## மலேசிய கார்ஓட்ட பந்தயத்தில் ஃபறாறியின் வெற்றியில் சர்ச்சை



உலக கார் ஓட்டப் பந்தயப் போட்டிகளின் சம்பியனை இனங்காண நடைபெறும் போட்டிகளின் இறுதிக்கு முந்திய போட்டியான மலேசியப் போட்டி 17.10.99 கோலாலம்பூரில் முடிவுற்றது. ஆனால் இக்கார் ஓட்டப் பந்தயத்தில் (Formula 1) ஏற்பட்டுள்ள முடிவுகள் இன்றும் பெரும் சர்ச்சைக்குள் அகப்பட்டு பெரும் பூகம்பமாக பேசப்பட்டு வருகின்றது. ஃபறாறி, மக்மிலான் தயாரிப்பு கார்கள் தங்கள் ஆதிக்கத்தை வெளிக்காட்ட வேண்டிய நிலையில் மிகவும் சுறுசுறுப்புடன் செயலாற்றிக்கொண்டிருந்தன. குறிப்பாக ஃபறாறி தனது மிக முக்கிய ஓட்டுநர் சூமாக்கரை எப்படியாவது களத்தில் இறக்கி வெல்லவேண்டுமென்ற குறியில் இவ்வருட இறுதிவரை போட்டிகளுக்குத் திரும்பமாட்டார் சூமாக்கர் என்ற நிலையை மாற்றி அவரையும் போட்டி போடவைத்தது. ஃபறாறியின் துரிதமான நடவடிக்கைகள், நடைபெற்ற மலேசிய போட்டியில் கைமேல் பலனாக ஓட்டுநர் ஈர்வினுக்கு முதலாம் இடமும் சூமாக்கருக்கு இரண்டாம் இடமும் கிடைத்தன: முக்கிய எதிரணி போட்டியாளர் ஹக்கினனுக்கு மூன்றாம் இடமே கிடைத்தது. இந்நிலையில் ஃபறாறியின் வெற்றி செல்லுபடியாகாது என முடிவு செய்யப்பட்டதால் தற்போது பெரும் சர்ச்சை தாண்டவமாடுகிறது. ஏனெனில் ஃபறாறி கார்களின் உடலமைப்பிலுள்ள ஒருபகுதியானது நிர்மானிக்கப்பட்டதைவிட 10 மில்லிமீற்றர் கீழே அமைக்கப்பட்டதாக காரணம் காட்டப்பட்டுள்ளது. இவ் உடலமைப்பு காற்று தடைக்கு மாற்றத்தை ஏற்படுத்தி விரைவை அதிகரித்திருப்பதாக கருதப்படுகிறது. இவ் செல்லுபடியற்ற தன்மைக்கு எதிராக ஃபறாறி நிறுவனமும் எதிர் நடவடிக்கைகளில் உக்கிரமாக ஈடுபட்டு வரும் போதிலும் முடிவுகளில் மாற்றம் ஏற்படுமா? என்பது பொறுத்துத்தான் பார்க்கவேண்டும். முடிவுகளில் மாற்றமேனும் ஏற்படாத வரைக்கும் ஹக்கினன் முதலாம் இடத்தையும், ஸ்ரிவாட் ஓட்டுநர்களான கேர்பட், பார்ச்சிலோ முறையே 2-ம், 3-ம் இடத்தையும் பெற்றுள்ளனர். அத்தோடு தற்போதைய உலக சம்பியன் ஹக்கினன் மீண்டும் உலக சம்பியனாவதும் உறுதியாகிவிட்டது. அதேபோல் மக்லேறனும் கார்கள் தரத்தில் முதல் இடம் என்பதில் ஐயமில்லை. உலக சம்பியன் போட்டிகளின் இறுதிப்போட்டி 31.10.99 ஜப்பான் சுசுக்கா நகரில் நடைபெறவுள்ளது.

தொகுப்பு: பொன். தாமோதரம்

## பிரான்சில் 'நொதேண்' அணி வெற்றி

பிரெஞ்சு கிரிக்கட் சம்மேளனத்தால் Champion du France துடுப்பெடுத்தாட்ட இறுதிப் போட்டி 17.10.99 ஞாயிறு அன்று Vincenne மைதானத்தில் நடைபெற்றது. ஈழத்தமிழர் கழகமான நொதேன் (Nothern) விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

PUC துடுப்பெடுத்தாட்ட அணிக்கும் நொதேன் துடுப்பெடுத்தாட்ட அணிக்கும் இடையில் நடைபெற்ற மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய PUC துடுப்பெடுத்தாட்ட அணி 39 பந்து மாற்றங்களில் அனைத்து விக்கட்டுகளையும் இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றது. சபீர் 51 ஓட்டங்களையும் மகேஸ், Jfran, Safras முறையே 27, 27, 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

அலெக்சான்டர் லின்டன் 29 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுக்களையும், ரவிக்குமார் 35 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும், பாஸ்கரன் 43 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக்களையும், ராஜ்குமார் 21 ஓட்டங்களுக்கு 1 விக்கட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆட களமிறங்கிய நொதேன் துடுப்பெடுத்தாட்ட அணி 36 பத்து மாற்றங்களில் 9 விக்கட்டுக்களை இழந்து 195 ஓட்டங்களை எடுத்து 99-ம் ஆண்டிற்கான Champion du France கிண்ணத்தை தமதாக்கிக்கொண்டார்கள். இந்த ஆண்டுடன் இரண்டாவது தடவையாக இக்கிண்ணத்தை வெற்றிகொண்டது குறிப்பிடத்தக்கது. இத்தொடரில் நடைபெற்ற குழுநிலைப்போட்டிகள் அனைத்திலும் இக் கழகம் வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது. இப்போட்டிக்கு பிரதமவிருந்தினராக பிரெஞ்சு கிரிக்கட் சம்மேளனத் தலைவர் திரு. டிடியே (Diddier) கலந்துகொண்டு வெற்றியீட்டிய கழகங்களுக்கும் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்ட நொதேன் அணியைச் சேர்ந்த அலெக்சாண்டர் லிண்டன் அவர்களும், PUC அணியைச் சேர்ந்த Shabeer அவர்களும் பரிசில்களை வழங்கினர்.



அலெக்சான்டர் லின்டன் 41 ஓட்டங்களையும், ரஞ்சித் 30 ஓட்டங்களையும். பாஸ்கரன் 27 ஓட்டங்களையும், ரமேஷ் (அணித்தலைவர்) 28 ஓட்டங்களையும் ரவிக்குமார் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும் எடுத்தார்கள். Guy 33 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக்களையும், சகீம் 35 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக்களையும் Sabir 26 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

# ஏது செய்தோம் நாம்
# ஏது செய்வோம் நாம்

**மீண்டும் அது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.**

எது நடக்கக்கூடாது என்று விரும்பியிருந்தாயோ
எது நடந்துவிடும் என்று பயந்திருந்தோமோ
இது நடக்காது என்று நம்பியிருந்தோமோ அது நடந்துவிட்டது.

**மீண்டும் அது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.**
**இனி எம்மால் செய்யக்கூடியது என்ன?**
**இனி நாம் செய்யத்தக்க காரியம் என்ன?**
**என்ன செய்தால் இதனைத் தடுத்து நிறுத்தலாம்?**

இது மட்டும் நமக்குத் தெரிந்துவிட்டால்,.

தலையால் நடந்து சென்றாவது அந்தக் காரியம் நாம் செய்துவிடுவோம்-அத்தனை மனச்சுமை நாம் தாங்கியிருக்கிறோம் -அத்தனை வெப்பியாரம் நம்மேல் வீழ்ந்திருக்கிறது.

**நான்கு உயிர்கள்—அவை எங்களது உயிர்கள். ஒரே நீர் நாம் குடித்தவர்கள்—ஒரே நிலத்தில் நாம் திரிந்தவர்கள்—ஒரே காற்றை நாம் சுவாசித்தவர்கள். ஒரே கடலில் மீனாய் நீந்தியவர்கள்.**

ஒரே கோயில்மணி எங்களை எழுப்பியது.
ஒரே தேவாலயத்தில் நாம் பிரார்த்தனை புரிந்தோம்.
ஒரே தோட்டவெளியில் நாம் கைவீசித்திரிந்தோம்.
ஒரே வயல்வெளியில் நாம் உழுதோம்-ஒரே
புலத்தில் விளைந்த உணவையே நாம் உண்டோம்.

உயிர் எங்களது உயிர்-பறிப்பதற்கு இவர்கள் யார்? படைத்தார்களா? பறித்துச் செல்வதற்கு

கேள்விகளை இப்படி எல்லாம் நாம் கேட்கலாம். என் அம்மாவா, என் அப்பாவா? என்னைப் படைத்ததற்குச் சிறுபங்கும் உன்னிடம் இருந்ததா? நான் வளர்ந்ததற்கு ஏதாவது ஒரு விதத்தில் நீ உதவி செய்தாயா? ஒரு துளி பால் தந்தாயா? ஒரு பருக்கை சோறு போட்டாயா? என் உருவாக்கத்தில் எந்த விதத்திலாவது உதவி புரிந்தாயா?

என்ன அடிப்படையில் எங்கள் உயிர் பறிக்க உனக்கு உரித்துண்டு? சொல்-வேற்றுமண் வந்து பெருந்தலை ஒன்றின் உயிரை வீழ்த்தினோம் என்று சொல்வாயா? ஆயுதக் கலாச்சாரத்தை அயல் நாட்டிற்குப் பரப்பினோம் என்றாயா? வன்முறைப் போராட்டத்தை அயல்நாட்டிற்கும் வழங்கினோம் என்பாயா?

எதனை எடுத்தியம்புவாய்? சொல்வதற்கு முன் சற்று யோசி-மறந்துவிட்டாயா? நான் மறக்கவில்லை-மறக்கக்கூடிய கொடுமைகளா அவை? சேட்டில் ஒட்டியிருந்த தூசியைப்போல் தட்டிவிட்டால் போகக்கூடிய துயர்களா அவை.

**எப்படி மறக்கலாம்? நுளம்புக் கடியின் வலியா நமக்கெல்லாம்? கொன்று போடும் கொடுமைகள் இங்கெல்லாம் கொசுக்கடி போல்வதொன்றா? எப்படி மறக்க? அந்தத் துயர் மிகுந்த நாட்களையும் கொடுமை மிகுந்த வாழ்வையும் எப்படி மறக்க?**

நன்றாக ஞாபகம் கொண்ட அந்த நாட்கள் நாமென்ன-காலத்தைச் சொகுசாக கழித்தா திரிந்தோம்? நம் கால்களின் கீழே பூக்கள் பரவியா கிடந்தது? பஞ்சு மெத்தையிலேயா நம் பாதம் பதித்தோம்? தென்றல் காற்றா நம்மை இதமாகத் தடவிச் சென்றது? இனிய மலர்களின் நறுமணத்தையா நாம் முகர்ந்துகொண்டு திரிந்தோம்.

**அல்ல; கல்லிலும் முள்ளிலும் நாம் காலம் கடந்தோம்—பற்றைகளும், பனைச்சிராய்களும் நம் தோலைக் கிழித்தன. மலமும், சலமும் நாறிக்கிடந்த வீதிகளில் நாம் நடந்து திரிந்தோம். மேலாகப் பசி, பட்டினியில் பரிதவித்துத் துடித்தோம்—அதனிலும் மேலாக உயிர் எம்மிடம் இல்லாதிருந்தது. எந்தக் கணத்தில் எதுவும் நிகழலாம் என்றுதான் வாழ்ந்தோம்.**

அந்த நாட்களில்தான் அது நிகழ்ந்தது. 1987 யூலையின் பின்னரான அந்த நாட்கள். அதற்குள் மறக்கமுடியுமா அந்த நாட்களை. கொளுத்தும் வெயில் எரித்துக் குறைந்துபோனால் காலம் அட்டகாசமாக வீசும் சோளகம்.

தணிந்து அடங்கிப்போகும் காலம் - அந்த

நாட்களில் வந்தது ராட்சதப்படை - அமைதி என்ற பெயரில் வந்தது ராட்சதப்படை-அமைதி என்றால்-அதற்கு ஏன் அதி நவீன ஆயுதங்கள். அதி பயங்கர ஆயுதங்கள். இந்தக் கேள்வி எழுந்ததுதான். எனினும் இவ்வளவு நாட்களும் பட்ட பாடுகளுக்கிடையில் இது அமைதி தரும் என்ற நம்பிக்கையும் இருந்ததுதான். நம்பிக்கைதானே வாழ்வு-நம்பினோம்-நம்பினார் கெடுவதில்லை.

**கெட்டுப்போனோமே-நம்பி நாம் கெட்டுப்போனோமே!**
**என்ன விதமாய் நம்பினோம்—**

**ஒரு மாலைப்பொழுது—விமானங்கள் பறந்தன. அரிசி மூட்டைகளைப் போட்டன—வயிற்றிற்குப் பால் வார்த்து என்றுதான் நம்பினோம்.**

**வாய்க்கு அரிசி போட வந்தார்கள் என்று நாம் நம்பவில்லை.**

வாய்க்கரிசி போட வந்தவர்கள்தான் அவர்கள். ஒரு வாய், இருவாய்க்கு அல்ல; ஆயிரக்கணக்கான வாய்களுக்கு அள்ளி அரிசி போட்டார்களே.

**மெய்நோக, மேனி நடுங்க,**
**ஐயோ என்று அயலவர் குழற,**
**கைவினில் அள்ளி கருணை இன்றி**
**வாய்க்கரிசி போட்டான்களே மாபாவிகள்.**
**இதனைத்தான் செய்தன—அந்த இராட்சதப் படைகள்.**

**காலத்தைப் பதிவுசெய்து வாயோன் எழுதுவது**

**மழை பெய்வதற்குச் சற்று முன்னும், மழை பெய்த போதிலும், மழை பெய்து ஓய்ந்த பொழுதிலும்—மழை மழையாகக் குண்டுகள் பொழிந்தன.**

செவிப்பறைகள் கிழிந்தன-தகரம் வெடித்துக்கிழிந்தாற்போல-அத்தனை வேகமாய் அவைகள் வெடித்துக் கிளம்பின-குற்றுயிராயின தமிழ் உயிர்கள் எங்கள் உயிர்கள்.

**தமிழ் உயிர்கள் என்றால் அத்தனை கேவலமா? கேவலம் என்றும் அல்ல; எள்ளளவும் பெறுமதியற்ற ஒன்றா? குத்துகிற நுளம்பைச் சுண்டுவிரலால் தட்டிவிட்டுப் போகிற மாதிரியான உயிரா? கண்ணுக்குத் தெரியாமல் கால் மிதிப்பில் நசுக்குண்டு போகிற மாதிரியான ஒன்றா தமிழ் உயிர்கள்.**

சில உயிர்களின் பெறுமதியை நாம் உணர்வதில்லை அல்லவா? அப்படியான ஒன்றாக தமிழ் உயிர் ஆயிற்றா? ஆயிற்று என்றுதான் அந்த இராட்சதப்படை சொல்லிற்று. அப்பாவித் தமிழ் மக்களை ஈவிரக்கமற்றுக்கொன்று குவித்தது.

**இரு நாடுகளுக்கிடையில் நிகழ்ந்த போரா இது.**
இல்லையே

எல்லைகளுக்கிடையில் எழுந்த தகராறா இது?
அதுவும் இல்லையே!

**எந்த விதத்தில் இதனை நியாயப்படுத்தலாம். இனவாதமாக இருக்குமோ?**
அல்ல.

**முன்னர் செய்த ஏதும் காரியத்திற்கான பழிக்குப் பழியா?**
அதுவும் அல்ல

**அப்படியெனில் இந்த விதமாய் இம்சைப்பட ஏதும் பாவம் செய்தோமா?**

அதையாகிலும் சொல்க. என்ன செய்தோம் நாம்-ஏன் இந்தத் துயரும் கொடுமையும், வேதனையும் எம்மைச் சூழ்ந்தன. தவமிருந்துதான் எம்மை எம் அன்னையர் ஈன்றனர். கடற்கரையில் உப்பு விளைந்தாற்போல விளைந்து-அப்படியே அள்ளிக்கொண்டுவந்தாற்போல கொண்டு வந்தவரல்ல நாம்.

**கடலினுள் விளைந்த, முத்துப்போல உருவானவர் நாம்—எவருக்கும் கிடைக்காத சொத்தாகி வளர்ந்தவர் நாம்—எப்போதும் பயன்தரும் வித்தாகி வெளிக்கிளர்ந்தவர் நாம்.**

பாவச் சுமையாய் நாம் பிறந்தோமா? இந்த உலகிற்கு எந்தப் பயனும் இல்லை என்று கருதத்தக்கதாகவா நாம் வந்தோம்? உன்னத மூலங்களால் படைக்கப்பட்ட உயிர்கள் போக, கழிவுகளினால் படைக்கப்பட்ட கழிசடைகளா நாங்கள்?

எப்படியானோம் நாங்கள்? இந்த விதமாய் எங்களை வதைக்க உங்களுக்கு உரிமை தந்தது எது?

**ஒரு குட்டித்தீவு—தீவினுள்ளும் எண்ணிக்கையில் குறைந்த இனம். இனமென்றால் இது. வல்லமை வாய்ந்த இனம். எவரையும் வஞ்சித்த இனமல்ல; எவரையும் அடக்கியாண்ட இனமல்ல; அடிமைப்படுத்திய இனம் அல்ல.**

**தனக்குள் தனித்துவங்கள் கொண்டு—தன்னைத் தின்று தன்னை வளர்த்த இனம்—தனக்கென்ற பண்பாடும், தனக்கென்ற நிலமும், தனக்கென்ற மொழியும் கொண்ட இனம்.**

இன்னும் ஒன்று சொல்லவோ? எவரிடமும் கையேந்தி நிற்கா இனம் - இந்த இனத்தைத்தான் இந்த இராட்சதப்படை அழித்தது. 1987 ஒக்டோபர் - அந்த ஒரு மாதத்தில் ஆயிரக்கணக்கில் உயிர்கள் அவலமாகச் செத்துப்போயிற்று- நூற்றுக்கணக்கில் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்பட்டனர்- ஆயிரக்கணக்கில் அங்கங்கள், அவயவங்கள் இழந்தனர்.

**இராட்சதப் படை இதனைச் செய்தது. அதனை இயக்கிய அரக்கன் அதற்குக் காரணமானான்.** மலர்ந்த புன்னகை, மகிழ்வான முகம். இனியவன் போல இருப்பான்-இருப்பினும் அரக்கன் அவன். அதனால்தான் அதனைச் செய்தான்.

**அது மாத்திரமா காரணம்? அல்ல—**
**நான் யானை—நீ எறும்பு—என்ற அந்த அகம்பாவம் அதுவும் காரணம்.**

நான் என்ன நினைக்கின்றேனோ அதனை நீ செய்யவேண்டும் என்ற அந்த இறுமாப்பு-அதுவும் அதற்குக் காரணம்.

**எனது காலடியில் நீ இருக்கிறாய்—காலடியில் இருந்தால் நசிந்திடவேண்டும் என்ற அந்தத்திமிர்—அதுவும் அதற்குக் காரணம்.**

கேள்வி கேட்க நீ யார்? என் ஆளுகைக்குள் நீ ஆட்பட்டவன்-அடங்கிப்போகவேண்டும் என்ற அந்த ஆணவம்-அதுவும் காரணம்-

**இந்து சமுத்திரம்—இது என் சமுத்திரம்— இதற்குள் அடங்குவன அனைத்தும் என் சொந்தம்—உன் சொத்து என்று எதுவும் இல்லை—எல்லாம் என் சொத்து என்ற செருக்கு—அதுவும் காரணம்.**

மேலாக தமிழர் என்ன? தவிட்டுக்கு வாங்கப்பட்டவர்கள் தட்டிக்கேட்க இவர்களுக்கு யார் இருக்கிறார்கள்-என்ற அந்த அரக்கத்தனம்-அதுவும் காரணம்-

**இத்தனை காரணங்கள் இருந்ததா? இருக்கட்டும்—ஆனால் எங்களுக்கு ஒரு காரணம் இருந்தது; ஒரே ஒரு காரணம் இருந்தது.**

நீ யானைதான்-நான் எறும்பு-ஆயினும் என்னாலும் ஏலும்-உன் காதினுள் புகுவேன்-கடிப்பேன்-கதற கதறக் கொல்வேன்-தும்பிக்கை நிலத்தில் அடித்து துடிதுடித்து நீ சாவாய்.

**அப்போது புரியும்—என் வலிமை என்னவென்று, அப்போது புரியும் என் ஓர்மம் என்ன வென்று, அப்போது புரியும் என்வெஞ்சினம் என்னவென்று அப்போது புரியும்.**

புரியும்படியாகச் செய்தனர்-சிலர்-புரிந்தவர்கள் இருக்கிறார்கள் பலர்.

**அந்தக் கதையை இப்போது நாம் விடுவோம். அது கதை அல்ல; வரலாறுதான் எனினும் இப்போது தவிர்ப்போம்.**

இப்போது எம் வேதனை இதுதான் - நான்கு உயிர்கள் மரணத்தின் வாசலில் நிற்கின்றன.

நாட்கள் எண்ணப்படுகின்றன-அந்த நான்கு உயிர்கள் இவ்வுலகில் இருப்பதற்கான நாட்கள் எண்ணப்படுகின்றன.

**எந்தப் பாவமும் அறியாதவர்கள்—பாவம் செய்ததற்கான எந்தச் சாட்சியமும் இல்லாதவர்கள். இன்னும் சொல்லப்போனால் அது பாவமும் அல்ல என்பது எங்கள் வாதம்.**

ஆனால் இந்தியாவின் பாவக்கயிறு இவர்களின் கழுத்தில் சுருக்கிடப்போகிறது. மனிதாபிமானமற்ற ஜனநாயகமற்ற, அதிகாரவர்க்கத்தைக் காப்பாற்ற அதிகார வர்க்கத்தால் உருவாக்கப்பட்ட தடாச் சட்டம்-அந்தப் பாவச் சட்டம் இவர்களின் கழுத்தை இறுக்க நிற்கின்றது.

**நாங்கள் நினைத்தால் தடுத்து நிறுத்தலாம்.**
என்ன செய்யப்போகிறோம் நாம்?


# தமிழர் வித்தியாலயம்

**75, rue Philippe de Girard, 75018 Paris - Tel: 01 40 05 11 16**

Métro: Marx Dormoy அல்லது La Chapelle அல்லது Bus: 65

இந்த ஆசிரியரிடம் பிரெஞ்சு கற்றவர்கள் கல்விநிலையங்கள் நடாத்துகிறார்கள். பிரெஞ்சு படிப்பிக்கிறார்கள். மொழி பெயர்ப்பாளராகப் பணி புரிகிறார்கள். பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்கிறார்கள். உரியவர்களிடம் உசாவிப் பாருங்கள். இலைமறைகாய் உண்மை வெளிவரும்.

★ தகைமை + அனுபவம் உள்ள ஆசிரியர்கள். தரமான கல்வி.
கூடிய நேரம். குறைவான கட்டணம்

*தரமான கல்வியைத் தேடுவோர் நாடும் ஆசிரியர்*
**ச.சச்சிதானந்தம்** *(10 நூல்களின் ஆசிரியர்)*

இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்பதையும், கற்பிப்பதையும் தொழிலாக உடையவர்கள் என்பதை பெற்றோர்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 23.10.1999**

**பிரெஞ்சு மொழிப் பயிற்சி வகுப்பு** Cours de français
*வேலை, மருத்துவம், கடிதம், குடியுரிமை போன்ற எதுவாக இருந்தாலும் உங்கள் காரியங்களை நீங்களாகவே செய்வதற்கு ஏற்ப கற்பிக்கப்படும் பிரெஞ்சு வகுப்புக்கள் ஆரம்பம் ஆகின்றன.*
- ஆறு மாத கால சனி-ஞாயிறு வகுப்புக்கள்.
- திங்கள் -புதன்-வியாழன்-வெள்ளி இடம்பெறும் மூன்று மாத கால வகுப்புக்கள்,
**காலை: 10.00 மணி—12.00 மணி அல்லது மாலை: 15.00 மணி —17.00 மணி**

இதைவிட, கற்பவர்களின் நேரம்—தரம் என்பவற்றிற்கேற்ப குறுகிய காலத்தில் பேச — எழுத கற்றுக்கொள்வதற்கான தனி வகுப்புகளும் உண்டு.

**நல்ல ஆங்கிலம்** Good English
Toefl க்குத் தயார்செய்து பரீட்சைக்குத் தோற்ற ஒழுங்கு செய்யப்படும்.

**டியூசன் வகுப்புக்கள்** Soutien Scolaire *(CP தொடக்கம் Terminal வரை)*
ஒரு பாடம் வாரத்தில் இரு தடவைகள். வகுப்பில் படித்த பாடங்களை மீட்டு, வீட்டு வேலைகளைச் செய்வதற்கு உதவி செய்வது முதல் பாடநேரத்திலும், அடுத்து படிக்க இருக்கும் பாடங்களை முன்கூட்டியே தயார் செய்வது இரண்டாம் பாடநேரத்திலும் இடம்பெறுகிறது.
**பிரெஞ்சு மூலம் கம்பியூட்டர் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**
**சனி, புதன், பிற்பகல், மாலை, ஞாயிறு காலை வகுப்புகள்**

ஆரம்பமாகும் பிற வகுப்பு:
★ நல்ல தமிழ்

Pub

# புலம் நிகழ்வுகள்

## சுதந்திரக் கீற்று

தமிழீழ விடுதலைக் களம் கண்டு வித்தாகிப்போன முதற் பெண் புலி 2-ம் லெப்டினன் மாலதி அவர்களின் நினைவு சுமந்து 10.10.99 அன்று Bagnolet எனும் இடத்தில் சுதந்திரக்கீற்று 99 உதயமானது.

தேசம் மட்டும் விடுதலை பெற்று விட்டால் போதாது. சமூக விடுதலை, பெண்விடு தலை போன்றவையும் தேசம் விடுதலை கொள்ளும்போது சேர்ந்து விடுதலை கொள்ள வேண்டும். அப்போதுதான் ஒரு ஆரோக்கியமான மக்களைக் கொண்ட வளமான நாடாக இருக்க முடியும் என்ற உயர்ந்த சிந்தனை கொண்ட தலைவர் அவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆண்களுக்கு சமமாக பெண்களையும் இணை-த்து ஈடுபடுத்தினார்.

மாணவியாய் வலம் வந்தவள் மாலதியாய் தமிழீழப் போராட்டத்தில் ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து அன்னிய இராணுவத் திற்கெதிராக, ஆண்களுக்குச் சம மாக நின்று போராடி 10.10.87 அன்று வித்தாகிப்போன எங்கள் மாலதியின் 12-வது ஆண்டு நினைவு நாளினை தமிழ்ப் பெண் கள் அமைப்பினர் சுதந்திரக் கீற்று 99 ஆக அரங்கேற்றினர்.

நேரதாமதமாகவே ஆரம்பிக் கப்பட்டாலும் சுதந்திரக்கீற்றுக்கு ஓர் சிறப்புண்டு. தமிழ்ப் பெண் கள் அமைப்பினரால் நடாத்தப் பட்ட இந் நிகழ்ச்சியில் பெண் களே அனைத்து வேலைகளிலும் ஈடுபட்டனர். நிகழ்ச்சிகளும் பெண்களால் தயாரிக்கப்பட்டு அவர்களே பங்கேற்று வழங்கப் பட்டது. மேலும் முதற்பெண்புலி மாலதி அவர்களின் நினைவினை நினைவு கூர்ந்து நடைபெறும் இச் சுதந்திரக்கீற்றானது அவர் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட நாளிலேயே நடைபெற்றது.

அமைதி வணக்கத்திற்காக அரங்கம் அமைதி கொண்டதை யடுத்து பெண்களின் ஒளி விள-க்கு வழிகாட்டியான மாலதி அவர்களின் திருவுருவப் படத் திற்கு மங்கலவிளக்கேற்றி வைக் கப்பட்டது; மக்கள் மலர்கள் தூவி வணக்கம் செலுத்தினர். தங் கள் வீரமகளை வாழ்த்தி வணங் கினர். அதனைத் தொடர்ந்து 'அம்மா உன் மகள் காவலரண் மீது நின்றாள் நான் பார்த்தேன்' என்ற பாடலோடு செவ்ரோன் தமிழ்ச்சோலை மாணவிகள் அபி நயம் தந்தனர். எமது நாட்டில் பெண்கள் போராட்டத்தில் ஈடு படுவதையும் அவர்கள் படும் இன்னல்களையும் எடுத்துக் காட் டினர். 'விரைவினிலே வெற்றிவ ரும்' என்று தமிழ்ப் பெண்கள் அமைப்பு உறுப்பினர் அவர்கள் விரைந்துவரும் விடுதலையை கவிதையாய் வெளிச்சம் போட் டுக் காட்டினார். அதைத் தொடர் ந்து 'ஒவ்வொரு தமிழனும் ஒவ் வொரு தீப்பந்தம்' என்று தமிழ ரின் ஒற்றுமையையும், ஒற்றுமை யால் உண்டாகும் நன்மையை யும் எங்கள் மண்ணுக்கு வேண் டிய தேவைகளையும் சோதியா கலைக்கல்லூரி மாணவிகள் அபி நயத்துடன் எடுத்துக் கூறினார் கள். அத்துடன் சார்சல் தமிழ்ச் சோலை மாணவிகளின் நடனங் களும், தமிழர் கலைபண்பாட் டுக் கழக, சார்சல் தமிழ்ச்சோலை மாணவிகள் இணைந்த மயிலும் பாம்பும் நடனமும் இடம்பெற் றது. பாம்பாக எதிரியையும் மயி லாக வெற்றிகொள்வதையும் வெளிப்படுத்தினர். மேலும் 'பெண்' என்னும் பெண்கள் பிரச்சினை பற்றி ஒரு வீதி நாடகம் போன்ற நாடகம் ஒன்றைத் 'தமிழ்ப் பெண் கள் அமைப்பினர் நிகழ்த்திக் காட்டினர். கதை, நெறியாள்கை அனைத்தையும் அவர்களே மேற் கொண்டு பெண்கள் பற்றிய பிரச்சினைகளை பெண்களால் பெண்களுக்கு எடுத்துக் கூறினர். அதில் ஐந்து பிரச்சினைகள் பேசப்பட்டன. சீதனம் என்று பலரால் பல வடிவங்களால் சொல்லப்பட்டாலும், சந்தையில் மாட்டிற்கு விலைபேசும் முறை யைக் கையாண்டு மனங்களைச் சந்தைக்கழைத்து மண மகனைச் சந்தையில் விலைபோகும் மாடாக்கி விட்டனர்.

பெண்ணடிமை, வீட்டில் பெண்கள் படும் துன்பங்கள், அவர்கள் மீது விழும் சுமைகள், அவைகள் அப்படியே பெண் பிள்ளைகளுக்கு கைமாறும் முறை என்பவற்றையும் பெண் சிசு பற்றிய தந்தையின் ஆத்திரத் தையும் பயத்தினையும் மூட நம்பிக்கைகளையும் விவரித்துக் காட்டினர். அதனைத் தொடர்-ந்து வன்னியின் இன்றைய நிலை வரம் பற்றி சிறப்புரை ஆற்றிய இளைப்பாறிய கிளிநொச்சி அதி பர் பெண்கள் புனர்வாழ்வு, குழந் தைகள் காப்பகம், போசாக் கின்மை, போசாக்கற்ற கர்பிணித் தாய்மார்கள், அவர்கள் படும் துன்பங்களை எடுத்துக் கூறினார். அதனைத் தொடர்ந்து தமிழீழ எல்லைக் காவல் படையின் சிறப்பாவணம் காண்பிக்கப்பட் டது. தேசத்தைக் காத்திட, தேசத் தின் எல்லையினைக் காத்திட, மக்களெல்லாம் எழுச்சிகொண்டு தேசிய சேவையாக பயிற்சி பெறும் காட்சிகள் காண்பிக்கப் பட்டன. மேலும் தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் 'பொய் முகங்கள்'எனும் நாடக மும் அரங்கேறியது. இது பலரது பொய் முகங்களை இழக்கச் செய்து நேர்மையாக வாழ வழி வகுக்கும் நாடகமாக அமைந் தது. அத்தோடு 12-ம் ஆண்டு நினைவுநாள் நிறைவுபெற்றது.

– சுபா

## பன்னிரு வேங்கைகளின் 12-ம் ஆண்டு நினைவு

(சுவிஸ்)

தமிழீழ விடுதலை வேண்டிய பாதையில் தாம் எடுத்த கொள்கை இலட்சியங்களை இறுதிவரை விட்டுக்கொடுக்கா மல் தம்மையே அழித்துக் கொண்ட தளபதிகளான கும ரப்பா, புலேந்திரன் உட்பட பன் னிரு போராளிகளுக்கான 12-ம் ஆண்டு நினைவுகூரல் பாசல் நக ரில் 10.10.99 நடைபெற்றது. இப் பன்னிரு வேங்கைகளில் ஒருவ ரான மேயர் அப்துல்லாவின் சகோதரர் ஜெயக்குமார் அவர் கள் தேசிய கொடியையும் ஈகைச் சுடரையும் ஏற்றிவைக்க அமைதி வணக்கத்துடன் விழா ஆரம்பமா கியது. விழாவுக்கு வருகைதந்த மக்கள் அனைவரும் தம் மாவீ ரர்களுக்கு மலர்தூவி வணக்கம் செலுத்தியபோது இம் மாவீரர் பற்றிய பாடல்களும் மேடையில் ஒலித்துக்கொண்டது. மலர் வணக்கத்தைத் தொடர்ந்து சுவிஸ் கலை பண்பாட்டுக்கழகத்தின ரின் புரட்சிகான இசைவேளை அமைந்தது. பாசல் கலாநிவேதன் நடனாலய மாணவிகளின் பல நடனங்கள் மேடையில் காண் பிக்கப்பட்டன குறிப்பாக ஜேர் மனியிலிருந்து வருகைதந்த பிர சாந்தன், துர்க்கா ஆகியோரின் நடனங்களிலும் கையாளப்பட்ட நடன அமைப்பு மட்டுமன்றி ஒவ்வொரு அசைவுகளும் முக பாவனையும் கூட அவர்களின் ஆடலுக்கு வலுச்சேர்ந்திருந்தது.




ஜேர்மன் கலை பண்பாட்டுக் கழக ஆசிரியை அற்புதராணி கிருபராஜாவிடம் நடனக்கலை பயின்ற

இவ்விருவர்களில் பிரசாந்தன் அரங்கேற்றம் கண்டுவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மயூ ரன் வாசித்த கவிதை, கீபோட் மூலம் சங்ககுமார் இராகவன் மீட்டிய 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்..' பாடலுக்கான இசை மற்றும் பாசல் தமிழ் வித் தியாலய மாணவ மாணவிகளின் பாடல் ஆகியவற்றுக்கிடையில் சிறப்புப் பேச்சாற்றிய கலைபண் பாட்டுக்கழக பொறுப்பாளர் 'சுதந்திர மனிதர்களாக தமிழினம் வாழ வேண்டுமானால் எமக் கென்று ஒரு சுதந்திரதேசம் வேண்டும். இந்த சுதந்திரதேசத் தைக் கட்டியெழுப்ப சொந்த மக் களின் கரங்களால்தான் முடியும் என்பதை எமது தேசிய தலை வரே தெரிவித்திருக்கின்றார். எனவே எமது போராட்டத்துக் குச் சொந்தமக்களே வலுச்சேர்க்க வாருங்கள்' என அறைகூவல் விடுத்தார். புலம்பெயர்நாட்டு வாழ்வியல் முறை போராட்டத் துக்கு வலுச்சேர்க்கிறதா இல் லையா பற்றிய வழக்காடு மன் றத்துடன், அப்பாவித் தமிழ் மக் களின் புதைகுழியாகிய அவ லத்தை எடுத்துக்காட்டிய 'புதை யாத புதைகுழிகள்' நாடகமும் மேடையேறியது. இறுதியாக கொடியிறக்கத்துடன் புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம் முழங்கி விழா நிறைவுபெற்றது.

– சங்கையூர் குமார்.

## வீரப்பனார் நினைவேந்தல்

உலகத் தமிழ்ப் பண்பாட்டி யக்கத்தின் தலைவர் திரு.இரா.ந. வீரப்பனார் 03.09.99-ல் இயற்கை எய்தியமையொட்டி 09.10.99-ல் சுவிஸ் உலகத்தமிழ்ப் பண்பாட் டியக்கத்தின் கிளையினரால் அவர்களின் நினைவேந்தல் இரங் கல் கூட்டம் திரு.ம.மனோகரன் தலைமையில் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது.

பிற்பகல் 3.30 மணிக்கு அமைதி வணக்க நிகழ்வுடன் பேராசிரியர் வீரப்பன் அவர்க ளின் ஆக்க நூல்களும், அவர் தமி ழுலகிற்கு ஆற்றிய பணிகளின் சிறப்பும், ஆவணங்களும் கூடியி ருந்த மக்களால் பார்வையிடப் பட்டன. திரு.உதயபாரதசிங்கம் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து தலைமையுரையும், அதனைத் தொடர்ந்து முந்நாள் ஈழநாடு பத்திரிகையின் உதவி ஆசிரியர் ஆ.இராசலிங்கம் தமது இரங்கல் உரையில், வீரப்பன் போன்ற மனிதர்கள் இறப்ப தில்லை. மாறாக அவர்போன்ற சான்றோரின் பணிகளை பின் னுள்ளோர் தொடர்கின்றனர் என்றார். உ.த.ப. நிர்வாகிகளில் ஒருவரான ஆசிரியர் பொ.முரு கவேள் அவர்கள். வீரப்பனாரின் எளிமை நடவடிக்கைகளும் உத விப் பணிகளும் தமிழுலகத்திற்கு பயனுடையவை என்றார்.

அதனைத் தொடர்ந்து பேர்ண் றோயல் விளையாட்டுக்கழக தலைவர் திரு. சண், பேர்ண் முருகன் ஆலய நிர்வாகிகளில் ஒருவரான திரு.சி. கருணாமூர்-த்தி ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியாக பல அரங்குகளில் அறிவிப்பாளர் பணியாற்றுபவர். திரு.சுரேஸ் அவர்கள் இவ் அமைப்பின் பணி இன்னுமின் னும் எமது மக்களிடையே சென் றடையவேண்டும் என்று இவ் அமைப்பின் பணிகள் பற்றிக் கூறி அமரர் வீரப்பனார் அவர் களுக்கு நினைவஞ்சலி செலுத் தினார். இறுதியாகப் பல நூல் கள் வந்திருந்தோரால் வாங்கிச் செல்லப்பட்டன.

–பொ. முருகவேள்.

## உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஜேர்மன் கிளை யின் மத்திய குழுக்கூட்டத்தின் போது புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது. புதிய நிர்வாகி கள் வருமாறு: தலைவர்: திரு.சி. கமலநாதன், பொதுச் செயலா ளர்: நயினை மா. விஜயன், உப தலைவர்: திரு. செல்லத்துரை சிவம், பொருளாளர்: திருசி. இரா ஜகருணா, கல்விப் பொறுப்பா ளர்: திரு.ராஜன், கலாச்சாரப் பொறுப்பாளர்: திரு.விசுவலிங் கம், உதவிக் கலாச்சாரப் பொறுப் பாளர் திரு.சிவனேசன், போச கர்: இரா.தனபாலசுந்தரம் ஆகி யோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஜேர்மனியில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் வெள்ளி விழா நவம்பர் மாதம் 6-ம் திகதி ரெயினே நகரில் நடைபெறும் என்றும் அங்கு ஒழுங்குசெய்யப் பட்டது.

– வீ.ஆர். வரதராஜா.

## மாவீரர் மெய்வல்லுநர் போட்டி - 99

(றெஜியோ எமிலியா)

கடந்த 26.09.1999 அன்று றெஜியோ எமிலியா நகரில் மாவீரர்களை வணங்கிக் கௌரவிக்கும் நிகழ்வான மாவீரர் மெய்வல்லுநர் போட்டி நடை பெற்றது.

இந்நிகழ்வில் பொலோனியா, றெஜியோ எமி லியா, மாந்தோவா நகர போட்டியாளர்களும், மக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தலையணைச்சண்டை, அஞ்சலோட்டம், கயிறு இழுத்தல் எனச் சிறப்பு நிகழ்வுகளும் இடம்பெற் றன.

இத்துடன் தியாகி லெப்.கேணல் திலீபன் அண்ணா அவர்களின் 12-ம் ஆண்டு நினைவு கூரலும், வணக்கமும் இடம்பெற்றது.






IBC வழங்கும்
HARIHARAN'S
MILLENNIUM CONCERT
Sponsored by
ALPHA TELECOM
Hariharan Chithra Sujatha Roja Kushboo Abbas
with 10 dancers & 20 musicians
Saturday 30th October 1999 Alexandra Palace.
Tickets: £20, £30, £50, Family, Couple & VIP
Hot Line & Information : 0171 463 2090
Wembley - K.R.S.Enterprises 0181 902 4590
Tooting - Venkadeswara 0181 767 6495
East Ham - Welcome Centre 0181 552 2727
www.ibcconcert.com

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## இ.தொ.க........

முறைப்பாடு ஒன்றினை கொடுத்திருந்தார். இராணுவத் தரப்பும் யோகராஜனுக்கு எதிராக முறைப்பாடு ஒன்றினை பொலிஸ் நிலையத்தில் தெரிவித்ததுடன் விடுதலைப்புலி உறுப்பினர்கள் தப்பிச் செல்வதற்கு யோகராஜன் உதவுகிறார் எனவும் அவ் முறைப்பாட்டில் தெரிவித்திருந்தனர். இத்னையடுத்து பொலிசார் இராணுவத்தினரின் முறையீட்டின் அடிப்படையில் யோகராஜனை பொலிஸ் நிலையம் அழைத்து வந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இவ் விசாரணையின்போது பொலிசாரினால் யோகராஜன் அவமதிப்பிற்கு உள்ளானதாகவும் தெரிய வருகிறது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## கொக்கிளாய்.......

லங்கா கடற்படையினர் கடற்புலிகளை இடைமறிக்க முனைந்த வேளையே இச் சமர் எழுந்துள்ளது. டோராப்படகுகளை திசை திருப்பும் முகமாக கடற்புலிகள் மிகவும் வேகமாக போரிட்டனர். டோராப்படகுகள் திசை திருப்பப்பட்டதால் கடற்புலிகளின் ஏனைய அணி தமது பயணத்தை பாதுகாப்பாக மேற்கொண்டு விட்டன. இவ் வீரஞ்செறிந்த தாக்குதலில் லெப்.கேணல் தரத்திலான இருவரும் மேஜர் தரத்தில் மூவரும் கப்டன் தரத்திலான போராளி ஒருவரும் வீரச்சாவினை தழுவிக்கொண்டுள்ளனர். இரவு 10 மணிக்கு ஆரம்பமான இச்சமர் அதிகாலை மூன்று மணியளவில் முடிவுக்கு வந்தது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## புற்றாலையில்.......

முன்றலில் கதைத்துக்கொண்டு இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னர் வீடுசெல்வதாக கூறிச் சென்ற இவர் இரவு வீட்டுக்கு வராததால் மறுநாள் காலையில் உறவினர்கள் பல இடங்களிலும் தேடப்பட்டது.

இறுதியாக ஆலயத்தின் கிணற்றுக்கு அருகில் இவருடைய சைக்கிளும் அடையாள அட்டையும் காணப்பட்டதையடுத்து கிணற்றுக்குள் இருந்து சடலம் பொதுமக்களால் மீட்கப்பட்டுள்ளது.


ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் - பிரான்ஸ்
ஆதரவுடன்
தமிழர் புனர்வாழ்வுக் கழகம் – பிரான்ஸ்
நடாத்தும்
14 வயதிற்குட்பட்டோருக்கான

**உள்ளரங்க உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி**

காலம்: 07.11.1999
நேரம்: காலை 9.00 மணி
STADE FILLETS
Metro: Porte de La Chapelle
மேலதிக தொடர்புகட்கு: 01 40 38 30 74



**பெண்களுக்கான இலவச பிரெஞ்சு வகுப்புகள்**

பாரிஸ் 10-ல் அமைந்திருக்கும் ATF சங்கம் பெண்களுக்கான இலவச பிரெஞ்சு வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளது.
வகுப்பு நேரம் காலை 9 மணி முதல் 11 மணி வரை.
மேலதிக விபரங்களுக்கும், தொடர்புகளுக்கும்:
Mme. NADIA
130, Rue du Faubourg St. Poissonniere, 75010 Paris.
Tel: 01 45 96 04 06



**ஈழமுரசு சந்தா**
Eelamurasu Weekly

**விண்ணப்பப் படிவம்**

பெயர்:........................................
முகவரி:........................................
........................................
தொலைபேசி எண்: ........................................

பிரான்சுக்கான சந்தா *(தபாற் செலவுடன்)*
12 மாதம் → 420 பிரெஞ்சு பிராங் ☐
பிரான்ஸ் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கான சந்தா *(தபாற் செலவுடன்)*
12 மாதம் → 520 பிரெஞ்சு பிராங் ☐

காசுக்கட்டளை, காசோலையை 'ஈழமுரசு' என்ற பெயருக்கு அனுப்பவும்.
*நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:*
"EELAMURASU"
22, Rue Perdonnet, 75010 Paris.
Tél: 01 40 37 63 63 / Fax: 01 40 37 64 64






**அம்பாள் வாகன சேவை**
**AMBAL TRANSPORT**
பொருட்களை ஏற்றி இறக்கவும், மங்கள வைபவங்கள், ஸ்தல யாத்திரைகள், சுற்றுலாக்கள், ஐரோப்பிய நாடுகளுக்கான 9 இருக்கைகள் கொண்ட வாகனசேவைகளுக்கு
**ஜெயம்:**



26, Rue Perdonnet, 75010 Paris.
Mo: La Chapelle
Tel: 06 09 58 55 48 / 06 10 38 44 92 / 06 13 31 32 35


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு: 13.06.1922



இறப்பு: 22.09.1999

## ஆறுமுகம் வேலாயுதர்

வாழ்வாங்கு வாழ்ந்து
வந்த வினை களைந்து
நீரடைந்தீர் இறையடி !

நினைவில் மறையாத்
திருவுருவே–எம்
நெஞ்சமெல்லாம் நீர் நிறைந்தீர்.

உம்
பாதக் கமலத்தில்
எங்கள்
நெஞ்சத்தின் அஞ்சலிகள்

*தகவல்:*
*T. நித்தியானந்தம் -034/4370753*
*A. நவரட்ணம் -031/ 7313284*

Pub

## மூன்றாம் மாத நினைவு இரங்கல்



## பிலிப்ஸ் ஸ்ரனிஸ் லோஸ்

*(விமானப் பொறியியலாளர்)*

**26.07.1999**

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியைச் சேர்ந்தவரும், ஜேர்மனியில் வசித்துவந்தவரும், காலம் சென்ற 'கலைச்சிற்பி' ஜோன்பிலிப்ஸ் லூசியா தம்பதிகளின் இளைய புதல்வனுமாகிய பிலிப்ஸ்ஸ்ரனிஸ்லோஸ் இறைவனடியில் துயின்ற மூன்றாம் மாதத்தினை நினைவுகூருகின்றோம்.

இவர் காலம் சென்றவர்களான ஜோசப்(றோஸ் ஆட்ஸ் ஸ்ருடியோ) திரேசா, தவமணி, குணரத்தினம், மாட்டின் துரைராஜா ஆகியோரினதும், ஆனந்தம் (வைத்தியர்), திருமதி மாக்கிரட் புஷ்பம் ஆசீர்வாதம் (ஆசிரியை), பயற்றிஸ், ரஞ்சி பெரேரா (வைத்தியர்), மேரி அனுலா வில்லிமலர் ஆனந்தராஜா (ஆசிரியை) ஆகியோரது அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் மூன்றாம் மாத நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்களை அன்னாருக்காக இறைவனை இறைஞ்சுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

*தகவல்: சகோதர, சகோதரிகள் சார்பில்*
*திருமதி பயற்றிஸ், ரஞ்சி பெரேரா*

Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# தமிழீழம்தான் தீர்வு என்ற முடிவில் மாற்றம் இல்லை

## - வைகோ



(18.10.99)

ஈழத் தமிழர்களின் சுதந்திர வாழ்விற்கு தனித்தமிழீழம் தான் தீர்வு என்ற மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் முடிவில் எப்போதும் எந்த மாற்றமும் இல்லை. நாம் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றிருந்தாலும் தமிழீழம்தான் தீர்வு என்ற முடிவில் மாற்றத்தினை ஏற்படுத்தமாட்டோம். எம்மைப் பொறுத்தவரை ஈழத் தமிழர்களுக்கு அமைதியான, உரிமையான வாழ்வு கிடைக்கவேண்டும். தற்பொழுது ஈழத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள அவலம் நீங்கவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். ஆயினும் தமிழகத்தின் அரசியல் சூழ்நிலைகள் காரணமாக இலங்கை இனப்பிரச்சினைக்கு கொடுக்கப்படவேண்டிய முக்கியத்துவம் கொடுக்கப்படாத போதிலும் மதிமுக ஈழத்தமிழர்களின் வாழ்வு தொடர்பாக தொடர்ந்தும் உறுதியான நிலைப்பாட்டினையே எடுத்து வருகிறது.

முன்பு தனித் தமிழீழம்தான் தீர்வு என்று சொன்னவர்கள் பின்பு தமது முடிவினை மாற்றிக் கொண்டாலும் நாம் மாற்றமடையவில்லை. இவ்வாறு ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் ஐபிசி. தமிழிற்கு வழங்கிய செவ்வியொன்றின்போது தெரிவித்திருக்கின்றார்.

ராஜீவ் காந்தி கொலைவழக்கின் மேன்முறையீட்டு தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் மரண தண்டனை உறுதிப்படுத்தியது பற்றி கேட்கப்பட்ட கேள்விக்கு இந்த வழக்கில் சட்டத்தின் அடிப்படையில் பார்த்தாலும் உச்ச நீதிமன்றத்தின் இத் தீர்ப்பு விமர்சனத்திற்கு உரியதாகும். உலகமெல்லாம் பரந்துவாழும் தமிழ் மக்கள் இந்த முடிவிற்கு எதிராக தங்களுடைய மனுக்களை அனுப்ப வேண்டும். நானும் இவ் விவகாரத்தில் எனது கடமையை செய்வேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இ.தொ.கா பாராளுமன்ற உறுப்பினர் கைதுசெய்யப்பட்டு விசாரணை

(18.10.99)

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினரான யோகராஜன் சிறீலங்கா பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார். இராணுவத்தினர் சிறீலங்கா பொலிசாருக்கு செய்த முறைப்பாட்டினை அடுத்தே இவர் மீது பொலிசார் விசாரணை நடாத்தியுள்ளனர். கடந்த வெள்ளியன்று கொழும்பு ஆமர் வீதியில் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டபோது 36 தமிழர்களை தடுத்து வைத்திருந்தனர். இச் செய்தியை அறிந்த யோகராஜன் அப்பகுதிக்கு வந்து இராணுவத்தினரின் இச் செயல் சட்டவிரோதமானது எனத் தெரிவித்தார்.

இவ்வேளை இராணுவத்தரப்பிற்கும் யோகராஜனுக்கும் வாக்குவாதம் நிகழ்ந்துள்ளது. இதனையடுத்து பொலிஸ் நிலையத்திற்கு சென்ற யோகராஜன் இராணுவத்தினர் சட்டவிரோதமாக கைதினை மேற்கொள்வாதாக

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# கொக்கிளாய் கடற்சமரில் நான்கு டோராக்கள் சேதம் ஆறு கரும்புலிகள் வீரச்சாவு

(18.10.99)

கொக்கிளாய் கடற்பரப்பில் கடந்த வியாழனன்று அதிகாலை நடந்த கடற்சமர் ஒன்றில் சிறீலங்கா கடற்படையினரின் நான்கு டோராக்கள் சேதமடைந்துள்ளன. பத்துக்கு மேற்பட்ட கடற்படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

இக் கடற்சமரின்போது ஆறு கடற்கரும்புலிகள் உட்பட ஏழு கடற்புலிகள் வீரச்சாவினை தழுவிக்கொண்டுள்ளனர்.

கடற்புலிகளின் கடலணியொன்று கொக்கிளாய் கடற்பிரதேசத்தினூடாக சென்றுகொண்டிருந்தவேளை ஐந்து டோரா தாக்குதல் படகுகளை கொண்ட சிறீ

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# புற்றாலையில் கிணற்றிலிருந்து சடலம் மீட்கப்பட்டது

(16.10.99)

யாழ்ப்பாணம் புற்றாலை சித்திவிநாயகர்ஆலயக்கிணற்றுக்குள் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு போடப்பட்டிருந்த புலோலியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பத்மநாதன் (27) என்பவரின்சடலம் பொதுமக்களால் மீட்கப்பட்டுள்ளது. இச்சடலத்தின் கையும், காலும் கட்டப்பட்ட நிலையில் தலையில் அடிகாயங்கள் காணப்பட்டுள்ளன. இவர் இறுதியாக கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8 மணி வரை நண்பர்களுடன் ஆலய

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# சிங்கள நலன்களுக்கு ஆபத்து!

## —முன்னாள் கிரிக்கட் கப்டன் ரணதுங்கா போர்கோடி—

சந்திரிகா அரசால் வர்த்தமானியில் அறிவிப்பு செய்யப்பட்ட புதிய சமவாய்ப்புச் சட்டமூலம் சிங்கள நலன்களுக்கு எதிரானது என முன்னாள் கிரிக்கட் அணித் தலைவர் அர்ஜூனா ரணதுங்கா உட்பட பல சிங்களப் பிரமுகர்கள் குரல் எழுப்பியுள்ளனர்.

பௌத்த மதபீடாதிபதி பனசிக மகாநாயக்க தேரர் தலைமையில் 53 பௌத்த பீடாதிபதிகள் எழுப்பிய எதிர்ப்புக்குரலை ஆதரித்து இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட பல பிரமுகர்கள் சமவாய்ப்புச் சட்டமூலம் சிங்கள மக்களின் நலன்களை மதிக்காது கொண்டுவரப்பட்டது எனவும் இச்சட்டமூலம் ஊடாக வெளிநாட்டுச் சக்திகள் சிறீலங்காவை ஆளமுற்படுவதாகவும் கூறினர்.

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் நெவில் கருணதிலக, ரணதுங்காவின் சகோதரர் பிரசன்னா மற்றும் ஆறு பௌத்த தேரர்கள் உட்பட பலர் தமது ஆதரவை இக் கூட்டத்திற்கு வழங்கினர்.

K.R.S. ENTERPRISES
கே.ஆர்.எஸ். என்ரபிறைசெஸ்
537 High Road,
Wembley
Middlesey, Hao 2 Dj,
Tel: 0181- 9024590
நிர்வாகி: G.சதீஸ்
Pub



- Leela அரிசிமா - 89P ல் இருந்து
- Kingfish- 2.59 ல் இருந்து
- நீலக்கால் [துப்பரவு செய்த] நண்டு £3.89 ல் இருந்து
- 20 Kg Broken Basmath £7.99 இலிருந்து
- CD 2.99 இல் இருந்து
- Audio 99 இல் இருந்து
- நல்லெண்ணை £3.49; 1/2 போத்தல் £1.79
- குானம்காட் 10% விலைக் கழிவில்

£20 இற்கு மேல் கொள்வனவு செய்தால் 1 Kg லீலா அரிசிமா இலவசம்!
லீலாவின் அனைத்துத் தயாரிப்புக்களும் மலிவு விலையில்!!